# தமிழருவி

## கலை இலக்கிய சமூக விஞ்ஞான மாதாந்த சஞ்சிகை

மலை -1 அருவி -4





தங்கத்தமிழ்மலையின் பெரும் பரகசியம்
பேராசிரியர். கா. சிவத்தம்பி அவர்களின் நினைவுக் கவிதை
பதக்கஞ் சங்கிலி
உணவுச் சங்கிலியோடு உருவாகிய சமூக மாற்றங்கள்
கவிதைத் திறனாய்வு
பனையோலை இராமன் க(ா)தைகள் - நகைச்சுவைத் தொடர்
செவ்வியல் தமிழிலக்கியத்தில் பெண்மை
பேச்சுமொழியும் இலக்கியமும்
பயணங்கள் முடிவதில்லை
மருந்தில்லா மருத்துவம்
சிற்பக்கலை விற்பன்னரின் நேர்காணல்
புதிய வேதம்
சைவசித்தாந்த தத்துவ வளர்ச்சியில் ஈழத்தவர்களின் பங்களிப்பு
விஞ்ஞான வளர்ச்சியால் மனித சமுதாயத்துக்குக் கிடைத்தது நன்மையா? தீமையா?
சமகாலக் கலைநிகழ்வுகள்
விவசாயமும் நாமும்
பொது அறிவு
கவிதைகள்
குருதிச்சூட்டில் குளிர்காய்வோர்

விலை 50/-

> வெளியுலகில் சிந்தனையிற் புதிது புதிதாக
> விளைந்துள்ள ஏவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு
> தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெல்லாம் செய்து
> செந்தமிழைச் செந்தமிழாய்ச் செய்திடவும் வேண்டும்
> எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
> இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும். - பாரதியார்


இயக்குநர், உதவி ஆசிரியர் :
த. கணேசமூர்த்தி

பிரதம ஆசிரியர் :
ம. பா. மகாலிங்கசிவம்

கௌரவ ஆலோசகர் :
சிவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம்

முகவரி:
சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தொலைபேசி :
077 7743055
021 490 7619

அலுவலக முகவரி
தமிழருவி,
பலாலி வீதி,
டிப்போ அருகாமை,
உரும்பிராய்.

E.mail :
tkm.tamilaruvi@gmail.com
Skype : tkm.tamilaruvi


## பேராசிரியர் கா. சிவத்தம்பி நினைவலைகள்.......

இலக்கிய வரலா றெனில்நமைப் புகழ்தல்
எனும் மரபு ஒழிந்திட மேலைப்
புலத்தறிவு ஆய்வு நெறியை உள்வாங்கிப்
புத்துயிர் தந்துநம் தமிழை
நிலத்திலே வளர்ந்த மொழிகளுக் கொப்ப
நிறுத்திய இருவரில் நீயிங்கு
ஒருத்தன் என்று உலகம் போற்றிடக் கேட்டோம்
உவந்தனம் வாழி! பல்லாண்டு!

என்று கவிஞர் சோ. பத்மநாதனாற் போற்றப்பட்ட சிவத்தம்பியின் மறைவு தமிழ்கூறும் நல்லுலகெங்கும் தீராத்துயரத்தைத் தந்துவிட்டது.

நவீன பண்டைத் தமிழ் இலக்கியங்கள் தொடக்கம் இன்றைய இலக்கியங்கள் வரை மார்க்ஸிய ஒளியில் ஆராய்ந்து அவர் கண்டுவந்த, சொன்ன உண்மைகள் மிகப்பல. அறிவியற் கண்ணோட்டத்தில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவை. இலக்கியங்களில் மட்டுமன்றி இலக்கணத்திலும் அவர் ஆழ்ந்த புலமையுடையவர் என்பதை அவரது இலக்கணமும் சமூக உறவுகளும் நூல் எடுத்துக் காட்டியது. சிறந்த நாடக நடிகராக, நாடகத்துறை ஆய்வாளராகவும் தன்னை இனங்காட்டிக் கொண்டார்.

அரசியல், பொருளாதாரம், சமயம், தத்துவம், சித்திரம், நடனம், சங்கீதம் என்று எந்தத் துறையிலே சந்தேகம் கேட்டாலும் உடனுக்குடன் தீர்த்து வைக்கக் கூடிய பரந்த ஆளுமை உடையவர். தமிழறிவுச் சிகரமாக விளங்கியபோதும் தான் என்ற அகங்காரம் இன்றி எவரையும் இன்முகத்தோடும், பணிவோடும் அழைத்து விசாரிக்கும் பண்பு அவருக்குரியது.

இத்தகைய பல்துறை அறிவு வாய்ந்த சிறந்ததொரு அறிஞரை, மானிடரை இழந்துவிட்டோம் என்ற நினைவே நெஞ்சைக் கலங்கவைக்கின்றது. அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவர்க்கும், மாணவர்க்கும், தமிழ் ஆர்வலர் களுக்கும் தமிழருவி தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது. பேராசிரியர் நினைவாக இச்சிறப்பு மலரை அவர் பாதங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

15.08.2011 ஆசிரியர்கள்.

# தங்கத்தமிழ்மலையின் பெரும் பரகசியம்!

உலகத் தமிழ்ப் பேரறிஞர் வரிசையில் இன்று முன்னிலை வகிப்பவரே பேராசிரியர். கார்த்திகேசு – சிவத்தம்பி அவர்கள் ஆவார். கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாகத் தனது தமிழ்ப்பணி மூலம் எமது நாட்டுக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்த பேரறிஞர் இவர்.

பண்டிதரும் சைவப்புலவருமான ஆசிரியர் பொ. கார்த்திகேசுக்கும் வள்ளியம்மைக்கும் 10.05.1932ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியைக் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியினைக் கொழும்பு ஸாகிறாக் கல்லூரியிலும், உயர் கல்வியினை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் கற்று கலைப் பட்டதாரியாக வெளியேறினார்.

தனது பட்டப்படிப்பின் போது தமிழை ஒரு சிறப்புப் பாடமாகப் பயிலவில்லை. வரலாறு, பொருளியல், தமிழ் ஆகிய மூன்று பாடங்களையும் கற்று ஒரு பொதுப் பட்டதாரியாக 1956இல் வெளியேறினார். 1963இல் தமிழல் எம்.ஏ பட்டம் பெற்றார். 1970இல் பேர்மிங்ஹாம் பல்கலைக் கழகத்தில் உலகப் புகழ்பெற்ற பேராசிரியர் ஜோர்ஜ் தொம்ஸனின் வழிகாட்டுதலில் ''பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம்'' எனும் பொருள் பற்றி ஆராய்ந்து கலாநிதிப் பட்டம் பெற்றார்.

தான் கல்வி கற்ற கொழும்பு ஸாகிராக் கல்லூரியில் ஒரு ஆசிரியராகவே 1956இல் அவர் தன் கல்விப்பணியைத் தொடங்கினார். வரலாறு, தமிழ் ஆகிய பாடங்களை அங்கு அவர் கற்பித்தார். இன்று இலங்கையில் பிரபல கல்வியாளர்களாகவும், ஓய்வு பெற்ற அரச அதிகாரிகளாகவும் விளங்கும் பலர் அக்காலத்தில் சிவத்தம்பியிடம் கல்வி கற்றவர்களே ஆவர்.

சிவத்தம்பி ஸாகிராவில் கல்வி கற்ற, கற்பித்த காலம் தான் இஸ்லாம் பற்றியும், இலங்கை முஸ்லீம்களின் பண்பாடு மற்றும் அரசியல் பற்றியும் அவரின் ஆழமான புரிதலுக்கு அடித்தளமிட்டது எனலாம். 1961இல் இலங்கைப் பாராளுமன்றத்தில் சமகால மொழிபெயர்ப்பாளராக இணைந்து ஐந்து ஆண்டு காலம் சேவை புரிந்தார். இதுவே அவரது அனுபவமும், அறிவும், ஆற்றலும் வளர்வதற்குத் துணையாக அமைந்தது எனலாம்.

1965இல் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் விரிவுரை யாளராக இணைந்து கொண்டார். இப்பல்கலைக் கழகம் பெரும்பாலும் சிங்கள மாணவர் களையும், ஆசிரியர்களையும் கொண்டதாகவே விளங்கியிருக்கிறது. இப் பல்கலைக்கழகம் முற்றிலும் பௌத்த பின்னணியில் உருவாகிய ஒரு பல்கலைக் கழகமாகும். இங்கு இவர் 13 ஆண்டுகள் சிங்கள மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார்.

அக்காலத்தில் ஒரு இடதுசாரியாக வளர்ச்சி பெற்றிருந்த சிவத்தம்பி சிங்கள சமூகத்தையும், அதன் அரசியல் அபிலாசைகளையும் இடதுசாரி நோக்கில் புரிந்து கொள்வதற்கும், தேசிய ஒருமைப்பாடு பற்றிச் சிந்திப்பதற்கும் சிங்கள



மொழியில் தேர்ச்சி பெறுவதற்கும் இக்காலகட்டமே உதவியது எனலாம்.

யாழ்ப்பாணத்தைவிட்டு நீண்ட காலம் வெளியிலேயே வாழ்ந்த சிவத்தம்பி 1978இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பணியாற்ற வந்தார். 1996இல் ஒரு சிரேஷ்ட பேராசிரியராகத் தன் பணியி லிருந்து ஓய்வுபெறும் வரை அவர் அங்கேயே பணியாற்றினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சில காலங்கள் தமிழ்த்துறைத் தலைவராகவும், சில காலங்கள் நுண்கலைத்துறைத் தலைவராகவும் அவர் பணி புரிந்திருக்கிறார். அவரது பணி ஓய்வின் பின் அவரின் தகுதியையும், சேவையையும் கௌரவித்து தகைசால் ஓய்வுநிலைப் பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

"Professor of Emeritus" என்ற ஆங்கிச் சொல்லுக்கான தமிழ்க் கலைச்சொல் வடிவம் தகைசால் ஓய்வுநிலைப் பேராசிரியர் என்பதை சிவத்தம்பி அவர்களே உருவாக்கியிருந்தார்

என்பதும் அவரின் பலமைக்கு மிகப்பொருத்தமான சான்றாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்திலும் பேரோசிரியராகப் பணிபுரிந்த இவர்,

- தஞ்சைப் பல்கலைக்கழகம்
- ஸ்கண்டிநேவியா பல்கலைக்கழகம்
- உப்சலா பல்கலைக்கழகம்
- அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா
- பெர்கிளி
- விஸ்கான்ஸியன்
- ஹாவாரட் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும்

வருகை தரு பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

சிவத்தம்பி அவர்கள் வானொலி நாடகங்களிலும் நடித்துள்ளார். பல்கலைக்கழகக் காலங்களில் மேடை நாடகங்களில் நடித்து வந்தார். இந்த நாடக அறிவே பின்னர் வெளிநாட்டில் நாடகம் பற்றிய ஆய்வை மேற்கொள்வதற்கு உறுதுணையாக அமைந்தது எனலாம்.

இவர், பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோரின் மாணவராக இருந்துள்ளார். இவர்களது வழிகாட்டலில் மரபுவழி நாடகங்களையும், நவீன நாடகங்களையும் ஒரு சேர வளர்த்ததோடு பிற்பட்ட காலங்களில் நாடகத்தை ஒரு கல்விநெறியாக்கவும் முயற்சிகள் மேற்கொண்டிருந்தார். பல்கலைக் கழகங்களில் நாடகமும் அரங்கியலும் என்ற பட்டப்படிப்பு பாடநெறியினை உருவாக்கு வதிலும் முன்னின்று உழைத்தவராவார்.

மார்க்சிய சிந்தனைகளில் அவருக்கு அதிக ஈடுபாடு இருந்திருக்கிறது. இதுவே பிற்காலத்தில் அவர் பல்துறை ஆய்வாளராக வளர்ச்சியடைவதற்கு அடிப்படையாக அமைந்திருந்தது. இலக்கியம், பண்பாடு, சமூகம், அரசியல், வரலாறு என்பவற்றிற்கிடையே உள்ள தொடர்புகளையும், ஊடாட்டத்தையும் அவர் தன் ஆய்வுகளில் விளக்கியிருக்கிறார்.

சமூகவியல் வரலாற்றுப் பார்வை அவரது ஆய்வுகளில் அடிநாதமாக விளங்கியிருக்கிறது. இந்த

**மார்க்சிய சிந்தனைகளில் அவருக்கு அதிக ஈடுபாடு இருந்திருக்கிறது. இதுவே பிற்காலத்தில் அவர் பல்துறை ஆய்வாளராக வளர்ச்சி யடைவதற்கு அடிப்படையாக அமைந்திருந்தது. இலக்கியம், பண்பாடு, சமூகம், அரசியல், வரலாறு என்பவற்றிற் கிடையே உள்ள தொடர்புகளையும், ஊடாட்டத் தையும் அவர் தன் ஆய்வுகளில் விளக்கியிருக்கிறார்.**

**சமூகவியல் வரலாற்றுப் பார்வை அவரது ஆய்வுகளில் அடிநாதமாக விளங்கியிருக்கிறது. இந்த வகையில் தமிழிலக்கியத்துறையின் செழுமைக்கும், வளர்ச்சிக்கும் பேரோசிரியர் சிவத்தம்பியின் பங்கு முக்கியமானதாகவே அமைந்து காணப்பட்டுள்ளது.**



வகையில் தமிழிலக்கியத்துறையின் செழுமைக்கும், வளர்ச்சிக்கும் பேரோசிரியர் சிவத்தம்பியின் பங்கு முக்கியமானதாகவே அமைந்து காணப் பட்டுள்ளது.

தமிழ் என்று நோக்குகின்ற போதும் அவரது அறிவுப் புலம், குறித்த ஒரு எல்லைக்குள் வரையறுக்கத் தக்க ஒன்றில்லை. சங்க இலக்கியம் முதல் மிகச் சமீபத்திய இலக்கியம் வரையிலும் அதற்கப்பால் நாடகம், சினிமா முதலான கலைத் துறைகளிலும் அகலக் கால் பதித்து அதில் மாபெரும் தேர்ச்சியும் பெற்றார். அவ்வப் போது தோன்றுகின்ற புனை கதைகள், கவிதைகள் முதலான இலக்கியங் களையும், இலக்கியச், சமூகக் கோட்பாடுகளையும் படித்துத் தம் அறிவினைப் புதுப்பித்துக் கொள்ளும் இயல்பினராக இருந்ததோடு, இவரது ஆங்கிலப் புலமை காரணமாக இவை உல்க மயமானதையும் கூறிக் கொள்ளலாம்.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் தமிழ் வாசகர்களால் நவீன தமிழ் அறிஞர் அல்லது நவீன இலக்கிய விமர்சகர் என்றெல்லாம் அழைக்கப் பட்டார். அவ்வாறு அவர் அழைக்கப்பட்டமைக்குக் காரணம் அவர் எத்துறை கொண்டு ஆய்வு செய்தாரோ அத்துறையில் பலமான புலமைபெற்று விளங்கி யமையே ஆகும். தற்கால தமிழ் இலக்கிய உலகின் பீஷ்மர் என்றுதான் கற்றறிந்தோர் இவரை விளித்துக் கூறுகின்றனர்.

இவர் அதிகம் ஈடுபட்டது பழைய, இடைக் கால தமிழ் இலக்கியமும் இலக்கணமும் ஆகும். ஏனென்றால் பட்டப் பின் படிப்புக்கான ஆய்வுகளுக்கு அவர் பழந்தமிழ் இலக்கியங் களையே நாடிச் சென்றிருக்கிறார். அவருடைய கலாநிதிப் பட்டப் படிப்பு ஆய்வு கூட "புராதன தமிழ்ச் சமுதாயத்தில் நாடகம்" என்றவாறாகவே அமைந்து காணப்பட்டிருக்கிறது. இந்த ஆய்வு

முறையே சங்க இலக்கியங்களையும், சிலப்பதிகாரத்தையும் மிக நுணுக்க மாகப் பரிசீலிக்கப்பட்ட ஓர் ஆய்வாகவும் இருந்திருக்கிறது.

**கட்டாயமாக ஓய்வு தேவைப்பட்ட காலங்களில் கூட உடல் வலிமையையும் பொருட்படுத்தாமல் புலத்தில் வாழும் தமிழ்க்கலை மாணவர்களின் தொடர் கல்விக்கு உதவியாக தமிழ்க்கலைகள் எனும் நூலினையும் எழுதி வெளியிட்டுள்ளார்.**

இவர் அதிகமாக ஈடுபாடு காட்டிய நூல் தொல்காப்பியம் என்றே கூறலாம். குறிப்பாக அதன் பொருளதிகாரத்தை மிக நுணுக்கமாக நோக்கியிருக்கிறார். சங்க இலக்கியங்களின் அமைப்புக்கும், அவை தொடர்பாகத் தொல்காப்பியம் கூறும் இலக்கணங்களுக்கும் இடையே முரண்பாடுகள் பேதமைகள் இருப்பதாகக் கருத்துத் தெரிவித் திருந்தார். தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலின் உருவாக்கத்துக்கான காரணங்களையும் அவற்றினடியாக தொல்காப்பியரின் ஆளுமைகளையும் புலப்படுத்த முயன்றிருக்கிறார். தொல்காப்பியத்தின் அடியான தமிழ்க் கவிதை யினைத் தெளிவுபடுத்தியிருந்தார்.

பேராசிரியருக்கு தமிழின் பக்தி இலக்கியங்களில் இருக்கும் ஈடுபாடு குறிப்பிடத்தக்கதாகும். பக்தி இலக்கியங்கள் வழிபாட்டோடு மாத்திரம் தொடர்புபட்டவை அல்ல. பக்தி இலக்கியங்களுக்குள் இருக்கும் கவித்திறனையும், மானிட உணர்வையும் புறந்தள்ளிவிடக் கூடாது என்று கூறுகின்றார். மேலும் பக்தி இலக்கியங்களின் பங்கு குறித்தும் சிந்தித்திருக்கின்றார். கம்பனை தமிழ்க் கவிதையின் உன்னதமாகவும், மானிட உணர்வின் சிகரமாகவும் கொள்ளும் இவர் கம்பராமாயணத்தின் ஊற்றுக் கால்களைத் தமிழின் பக்தி இலக்கியங்களிலே கண்டிருக்கிறார்.

மேலும், அனைத்துலகத் தமிழ்க் கலை நிறுவகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இறுதிக்காலம் வரை அந்நிறுவகத்தின் புலமைக் குழுத்தலைவராக இருந்து மிகச் சிறப்பாக வழிநடத்தினார். புலம்பெயர் நாடுகளில் வேற்றுமொழி பண்பாட்டுச் சூழலில் வாழும் தமிழர்களிடையே தமிழர்களின் இன அடையாளமாகக் கருதப்படுகின்ற மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களை அழியவிடாமல் பாதுகாப்பதில் அயராது உழைத்த கண்ணியவானாகவும் இருந்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு சுவிஸலாந்து நாட்டுக்குப் பயணம் செய்து புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ்க்கலை ஆசிரியர்களை ஒருங்கிணைத்து அதனூடாக தமிழ்க்கலையினை முன்னெடுத்துச் சென்றுள்ளார். இதற்காக அனைத்தலகத் தமிழ்க் கலை நிறுவகத்தினை உருவாக்கியிருந்தார். இதனால் பல்லாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழகக்கலையினை ஆர்வத்தோடு கற்பதற்கு ஏற்ற வகையில் அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் ஊடாக பல செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றி ருக்கிறார். மாறிவரும் விஞ்ஞான உலகிற்கு ஏற்ற வகையில் ஆளுமை மிக்க மாணவர்களையும் உருவாக்க வேண்டுமென்பதே இவருடைய பிரதான நோக்கமாக இருந்தது.

அதுமட்டுமில்லாமல் எமது மொழி, எமது சமயம், எமது பண்பாட்டு விழுமியங்கள் யாவற்றையும் வேற்று நாட்டவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் அதிகமாகப் பாடுபட்டவருமாவார்.

கட்டாயமாக ஓய்வு தேவைப்பட்ட காலங்களில் கூட உடல் வலிமையையும் பொருட்படுத்தாமல் புலத்தில் வாழும் தமிழ்க்கலை மாணவர்களின் தொடர் கல்விக்கு உதவியாக தமிழ்க்கலைகள் எனும் நூலினையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

- பண்டைத் தமிழ்ச் சமூகம் பற்றிய ஆய்வுகள் என்னும் தலைப்பிலான இவரது ஆங்கில நூல்
- சங்க இலக்கியம்
- கவிதையும் கருத்தும்
- சங்ககால வரலாறும் பிராமிக் கல்வெட்டுகளும்
- பண்டைத்தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி
- பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் நாடகம்
- ஈழத்தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி
- தமிழில் இலக்கியவரலாறு

முதலியன இவர் எழுதிய நூல்களுள் மிக முக்கியமானவை

இவ்வாறாக இலங்கைத் தமிழ் வரலாறு குறித்தும் மற்றும் இலக்கியம் குறித்தும் 70இற்கு மேற்பட்ட நூல்களையும் 200 இங்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சுமார் 45 வருட கால பல்கலைக்கழகச் சேவையில் இவர் ஏராளமான மாணவர்களை மிகப்பெரிய கல்வியாளர்களாகவும் உருவாக்கி இருக்கிறார். தன் உயரிய கல்விச் சேவையின் பலாபலனாக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். அதுமட்டுமில்லாமல் இவர் ஆற்றிய பணிகளுக்காக பல விருதுகளையும் பெற்றுள்ளார். அவற்றுள் தமிழக அரசின் அதியுயர் விருதுகளில் ஒன்றான "திரு.வி.க.விருது" பெருமை மிக்கதாகும். இவ்விருதினைப் பெற்ற ஒரே இலங்கையர் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களே ஆவார்.

பன்முக ஆளுமை யாளரான இவர் தமிழுலகம் போற்றும் ஈழத்துப் பேறிஞர் என்பதில் ஈழத்துக்கே பெருமை!

**சமரபாகு. சி. உதயகுமார்**

# பேராசிரியர். கா. சிவத்தம்பி அவர்களின் நினைவுக் கவிதை
## கடல் நீரில் உப்பதுபோல் உம் நாமம்.....



நேற்றெம் காற்று வெளியில்
கனக்கும் உணர்வோடு
வந்த செய்தி.
சிவத்தம்பியாய் வாழ்ந்த வாழ்வு
நேற்றோடு முடிந்ததுவோ?
யோகர் சுவாமி பெயர் சூட்ட
கார்த்திகேசுவின் தவத்தம்பியாய்
கரவையில் தோன்றிய ஊற்றே
உலகத் தமிழதன்
உன்னத நம்பிக்கையாய்
உலவிய ஈழத்து அறிவுப் பெட்டகமே
உம் பிரிவெண்ணி
உலகம் முழுக்கத் தமிழ்
கண்ணீர் வடிக்குதய்யா!
மனிதநேயம் மிகு நல் மனிதராய்
பழகிட இனியவராய்
எளிமையின் இருப்பிடமாய்
வாழ்ந்த எங்கள் பீஷ்மரே
மாக்சியத்தால் தமிழியலை
மாற்றிப் போட்ட எங்கள்
ஆற்றல் மிகு சமூக விஞ்ஞானியே
சங்கம் முதல்
புலம்பெயர் சமூகம் வரை
உம் ஆய்வுத் தேடலில்
ஆழம் கண்டாய்
எத்தனை துறைகளில் தடம் பதித்தாய்
சிலருக்குப் புரியாது உம்மொழி
புரிந்தவர்க்கோ அதுவே அறிவின் வழி
அரசியல் வாழ்வதிலும்
எமக்கு நல் அரணானாய்
திறனாய்வும் நாடகமும்
உம்மைப் பிரிந்திங்கே
செல்லும் வழி தெரியாமல் தடுமாற
ஒரு இடைவெளியா
உம் மரணம் புரியவில்லை - உம்
வழித்தடத்தில் இனிப் பயணிப்போம்!
நீர் தந்துவிட்டுப் போகும் அறிவுண்டு
புதிய மேய்ப்பர்களாய்
தரணியிலே நம் தமிழை
தலை நிமிர வைத்திடுவோம்.
தமிழ் உள்ளவரை உம் நாமம்
கடல்நீரின் உப்பதுபோல்
எம் நெஞ்சமதில் கலந்திருக்கும்
மூதறிஞரே இளைய நெஞ்சமதன்
இதய அஞ்சலிகள்.



புலோலியூர்
வேல்நந்தன்.

## ஈழத் தமிழிலக்கியத்தின் உயிர் நாடி
## பேராசிரியர் சிவத்தம்பி



இறப்பைத் தடுக்க
எவரால் முடியும்?
எனினும் அழுகின்றோம்
பிறப்பாலுயர்ந்த பெரியார்
பேராசிரியர் சிவத்தம்பி ஐயாவின்
இழப்பை எண்ணி
பெரிதும் வருந்துகின்றோம்.

ஈழத் தமிழ் மக்களின்
ஆய்வியல் அடையாளமாய்:
மும்மொழிகளிலும்
சிறப்புத் தேர்ச்சி பெற்ற
முத்தமிழ் அறிஞராய்
தமிழ் வாழ நீங்கள்
சாற்றிய பணிகள்
ஒன்றா! இரண்டா!

உலகத்து மொழிகளுக்கெல்லாம்
ஈழத்தமிழரின் சுவையை
உணரவைத்த உத்தமர்
பிற மொழிச் சொற்களைத்
தமிழ்மொழிப் படுத்துவதில்
வெற்றி கண்ட வித்தகர்-இன்று
எம்முடன் இல்லையென்பதை
ஏற்க மறுக்கிறது எம்முள்ளம்!
சிந்தனையில் சிறப்பான எண்ணங்களும்
செயற்றிறனில் மங்காத
வீரியமும் கொண்டு

திக்கெட்டும் புகழ் பரப்பி —நீங்கள்
செய்த சாதனைத் தமிழ்ப் பணிகள் - இந்த
செகமுள்ளவரை நிலைத்திருக்கும்
இது உறுதி.....!

யோகர் சுவாமிகளால் ஆசீர்வதிக்கப்பட்ட
யோக புருஷராய்:
இருபதாம் நூற்றாண்டின்
இணையற்ற புலமைகளின்
பொக்கிஷமாய்:
இலக்கிய வானில் ஒளிவீசிப்
பிரகாசித்த உங்கள் இழப்பு
ஒட்டுமொத்த கலையுலகிற்கும்
ஈடுசெய்ய முடியாத இடைவெளியை
ஏற்படுத்திய பேரிழப்பு

காலத்தால் அழிய முடியாத
எழுத்துக்களின்
கலங்கரை விளக்கமாய்:
உய்யுநெறி காட்டி
உபதேசங்கள் பல வகுத்தளித்து
சென்றனையோ மேலுலகம்
சிறப்பான மாணவர் பரம்பரைக்கு
வித்திட்டு.....!
கல்லையொத்த மனமும்
கசிந்துருகச் செய்யும்
இலக்கிய வளமும் நயமும்
இனிமையான சொற்பேச்சும்
காணாமற் போனது கண்டு
கலைகளின் அதிபதியும் ஒருகணம்
கலங்கித் தான் போனாளோ?

கடல் நீரும் வற்றிப்போக
கண்ணீர் மழைவந்து
மனித முகங்களை நிறைத்ததுவோ?
பல்துறை ஆளுமை விற்பன்னராய்:
தோண்டத் தோண்டப் பயன் கொடுக்கும்
அனைத்துத்துறை ஆய்வுகளின்
அற்புத சுரங்கமாய்:
எம்மிதயங்களை வென்ற
இமயம் சாய்ந்து போன
செய்தி கேட்டு
வெந்த புண்போல எம்மனம்
வெதும்பித் தவிக்கிறது

பழமைக்கும் புதுமைக்கும் பாலமமைத்துப்
பார் போற்றும் வண்ணம்
தனித்துவமான தமிழ் ஆளுமைகளை
வெளிப்படுத்தி நின்ற
உவமை சொல முடியாத
உலகு புகழ் தமிழ்த் தலைவா!
பூவுடலை விட்டுப் புகழுடலை ஏற்ற
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
உளமாரப் பிரார்த்திக்கின்றோம்
அடுத்து ஒரு பிறப்பிருந்தால்
மீண்டும் ஈழத்தில் பிறப்பெடுப்பீர்...!
இப்போது கண்ணீருடன் தந்தோம் ஐயா
உமக்கு இறுதி விடை
கைலாயத்தில் கருத்தொன்றிப்
பெற்றிடுவீர் சாந்தி...!



கவியாக்கம் :
குறிஞ்சிக்கவி – செ. ரவிசாந்
(இளங்கவிஞன்)
வீரமனை, குப்பிளான்.

**எழுதுங்கள்! வெல்லுங்கள்!**

பாடசாலை மாணவர்களுக்கான மாதாந்த கட்டுரைப் போட்டி இல - 4

**இம்மாதத்திலிருந்து பரிசுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது!**

முதற் பரிசு 1000/- 2ஆம் பரிசு 750/-

3ஆம் பரிசு 500/-

**கட்டுரைப்போட்டி :**

தற்காலத்தில் அதிகரித்து வரும் சமுகச் சீர்கேடுகளை நீக்குவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து கூறுவதாகக் கட்டுரை அமைய வேண்டும். 500 சொற்களுக்குக் குறையாததாக இருக்க வேண்டும். இந்த ஆக்கம் குறித்த மாணவர்களுடையது என்பதை அதிபர் உறுதிப்படுத்திய பின்னர்,

அனுப்ப வேண்டிய முகவரி : **த.கணேசமூர்த்தி, தமிழருவி,**
**இயக்குநர், உதவி ஆசிரியர்,**
**சிவகுல வீதி,**
**உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.**

# பதக்கஞ் சங்கிலி



"உமா! அப்பாவையும் நான் சொல்லிறதைக் கவனமாகக் கேட்கச் சொல்லு, பிறகு சொல்லக் கூடாது நான் கவனிக்கேல்லை. நீர் சொல்லேல்லை என்று. இந்த முறை முருகன் கொடியேறினால், இருபத்தைந்து நாளும் என்னட்டை இருக்கிற திறமான சாரிகளும் கட்டி, என்ரை சங்கிலி, தாலிக்கொடி, விசேஷமாய் சிங்கப்பூர் அங்கிள் தந்த பதக்கஞ் சங்கிலி எல்லாம் போட்டு நான் ஆறெண்டதை அடுத்த வீட்டுக்கு அடுத்த வீட்டிலை புதிசா வந்திருக்கிற முதலாளியம்மாக்குக் காட்டுவன்" என்று மகேஸ் சொல்லி முடித்தார்.

இதைக்கேட்ட கணவரான கனகசுந்தரம் தலையிலை அடிச்சு சிரித்தார். கடிச்ச பாண் துண்டும் புரைக்கேறியது. இதைக் கண்ட மகேஸ் கோபங் கொண்டார்.

"உங்களுக்கு என்ரை கதையெண்டாச் சிரிப்புத்தான். ஏன் நீங்கள் உங்களுக்கெண்டு சில கொள்கைகள் இருக்குதெண்டு சொல்லுறேல்லையோ. அதுமாதிரித்தான் நானும் சொன்னான். அதுக்கென்ன சிரிப்பு"

"இஞ்சைபாரும் உமக்கும் அந்தப் பொம்பிளைக்கும் சீரடி பாபா சொல்லுற மாதிரி போன பிறப்பிலை இருந்து ஏதோ பகை போல் இருக்கிறது. கண்ட உடனேயே உமக்கேன் இவாவிலை எவ்வளவு கோபம்" என்றார் சுந்தரம்.

"நீங்கள் கம்பஹாவிலை வேலை செய்யேக்கை 'சீப்' கிளாக் பெரேராவைக் கண்டால் எப்படி உங்களுக்கு வெறுப்பா இருந்ததோ அதுமாதிரித்தான் எனக்கும் இருக்குதெண்டு வைத்துக் கொள்ளுங்கோவன். அவவின்ரை எட்டாயிரம் ஒன்பதினாயிரம் ரூபா சேலையும், மூன்று நாலு சங்கிலியும், கைநிறையக் காப்பு, மோதிரம் அதுகளைப் பாக்கவேணும் அதாலைதான் என்னைக் கண்ணுக்குத் தெரியாமல் போனது. "பக்கத்து வீட்டு புனிதத்தைத் தனிய நிக்கேக்கை 'என்னோடை காரிலை வீட்டை போகலாம் நில்லும்' எண்டு சொன்னவவாம். 'நான் மகேஸ் அக்காவோடை வாறானான். அவாவைத் தனிய விட்டுட்டு வாறது சரியில்லை' எண்டு புனிதம் சொல்ல, சரி அவாவும் வரட்டும் என்று சொல்ல அவளுக்கு மனம் வரேல்லைத் தானே. எனக்கென்ன குறைச்சல். ஏன் அவவின்ரை காரிலை இடமில்லையோ.

எனக்கு நினைக்க நினைக்க எவ்வளவு கோவமாய் இருக்குது தெரியுமோ? கடைசிலை புனிதம் என்னோடை தான் நடந்து வந்தது. பாத்தியளே பணக்காரத் திமிரை" என்று பொரிந்து தள்ளினார் மகேஸ்.

இதைக் கேட்ட உமாவுக்கு அடைவு வைத்த தாயின் பதக்கஞ் சங்கிலி ஞாபகத்திற்கு வந்தது. கணவன் தயாளனிடம் அந்த நகையை மீட்கக் கூடியளவிற்குத் தற்சமயம் பணமில்லாததையும் சிந்தித்துத் தாயார் கணவனுக்கும் தனக்கும் என்ன தலையிடிகளை உண்டாக்கப் போகிறாவோ என்று பயந்து கொண்டிருந்தாள். அப்போது கனகசுந்தரம் மகேசைப் பார்த்து,

"மகேஸ்! நீர் நினைக்கிற மாதிரி நாங்கள் போட்டி போடக்கூடிய ஆளல்ல அவ. இலங்கையிலேயே முதல் பத்துப் பணக்காரரிலே ஒரு ஆளின் மகள். அந்தச் சொத்துக்கெல்லாம் வாரிசு இவவும் இவவுடைய கணவர் சிதம்பரநாதனுந்தான். நான் நைற்டியூட்டி பார்க்கிற ஹொட்டேலிலும் ஐம்பது வீதப் பங்குகள் சிதம்பரநாதனுடையதுதான்.

நீர் மேலே பார்த்து ஒப்பிட்டு எரிச்சல் பொறமைப்பட வேண்டாம். இறைவன் தந்தது போதுமெண்டு இரும்"

காலை உணவு முடிந்ததும் சுந்தரம் ஓய்வெடுக்கச் சென்றார். மகேஸும் பின்னால் சென்றார். மகேஸ் வருவதைக் கண்ட சுந்தரம்,

"மருமோனிடம் வைத்துப் பணம் பெறும்படி நீர் தானே பதக்கஞ் சங்கிலியைக் கொடுத்தனீர். வசதி வரும்போது எடுத்துத் தரும்படிதான் கூறினனீர். இப்போ என்ன முகத்தோடை சங்கிலியை எடுத்துத் தரும்படி கேட்பீர்" என்று கேட்டார்.

"நான் என்ரை சங்கிலியை விருப்பமான போது கொடுப்பேன். தேவையான போது கேட்பேன். எனக்கு அங்கிள் சிங்கப்பூரால் கொண்டுவந்து தந்த சங்கிலி" என்று ஒரு மாதிரியாக விடை கூறினார் மகேஸ்.

"உம்மைப் பற்றித் தயாளன் என்ன நினைப்பாரோ தெரியாது.. உமக்கு மூளை கெட்டு வருகிறது. ஏதோ தீமை வரப்போகுது. பழமொழி தெரியுமே? 'கேடு வரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே" என்று சுந்தரம் கூறினார்.

மகேஸ் ஒன்றும் கூறாமல் குசினியை நோக்கிச் சென்றார். அங்கே உமா வேலை செய்து கொண்டு இருந்தாள்.

"திருவிழாவிற்கு சங்கிலி வேணுமெண்டு நான் சொன்னதாய்த் தயாளனிட்டைச் சொல்லு" என்று மகேஸ் கூறினார்.

தயாளன் வந்ததும் தாயாரின் நிலைப் பாட்டைக் கணவரிடம் உமா கூறினாள்.

"கேட்டால் எடுத்துக் கொடுக்க வேண்டியது தான் முறை. இதில் குறை நினைப்பதற்கு ஒன்றுமில்லை. ஒரு லட்சத்து இருபதினாயிரம் ரூபா வருமதி இருக்கிறது. அந்தப் பணம் இம் மாதச் சம்பளத்துடன் வரும் என்று கூறினார்கள். திருவிழா அடுத்த மாதம் பத்தாம் திகதி தானே" என்றார் தயாளன்.

மறுநாட் காலை தயாளன் அலுவல கத்திற்குச் சென்றதும். மகேஸ் உமாவிடம் "நேற்று அவரிடம் சங்கிலி விடயம் பற்றிக் கதைச்சனீயோ?" என்று கேட்டார்.

'ஓம்! கட்டாயம் எடுத்துக் கொடுக்க வேண்டுமென்று கூறினார்"

"குறை ஏதாவது சொன்னவரோ? அவர் அப்படியான ஆளில்லை. உன்ரை அப்பா எண்டா உலகத்துக் கதையெல்லாம் பேசுவார்" என்று மகேஸ் சொன்னார்.

"இந்த மாதச் சம்பளத்துடன் அவருக்கு 'அரியஸ்' வருமாம். அதில் எடுத்துத் தரலாம் என்று சொன்னவர்." என்றாள் உமா.

"நேற்றுடன் உமா! எனக்குக் கோயிலுக்குப் போக மனமில்லாமல் இருக்கு. காலம் சரியில்லை. வியாழன், சனி போக வேண்டியிருப்பதால் நாளை சனிக்கிழமை கோயிலுக்குப் போவேன்." என்று மகேஸ் கூறவும், கனகசுந்தரம் வரவும் சரியாய் இருந்தது.

"மகேஸ்! உமக்குக் காலஞ் சரியில்லை யெண்டா பொறுமையாய் இருக்கவேணும். காலம் கூடாதென்றால் ஆட்களோடை கோபிக்காமல் ஆசைப்படாமல் நடக்க வேணும். அன்றைக்கு வியாழன் சரியில்லையெண்டு போய் சிதம்பர நாதன்ரை மனிசியைப் பார்த்து எரிச்சல் பட்டுக் கொண்டு வந்தநீர். உது சரியில்லை, நீர் கோயில் கும்பிடப் போனனீரோ? மற்றவையின்ரை உடுப்பு, நகை, நடத்தை இதுகளைப் பார்க்கப் போனனீரோ. கூடாத கிரகங்களை உம் தரவழி ஆட்கள் கழிக்கிறதிற்குப் போய் அதைச் செய்யாமல் அவைகளை அழைத்துக் கொண்டு வாறதுதான் தொழில்" என்றார் சுந்தரம்.

"பிள்ளை உவற்றை கதையைக் கேட்டால் வெள்ளிகிழமைகளிலை சண்டை தான் வரும்" என்று கூறிவிட்டு மகேஸ் வெளியே சென்றுவிட்டார். இதைப் பார்த்த மகள் "வினாசகாலே விபரீத புத்தி" என்பார்கள். அம்மாவும் காலங்கூடாவிட்டால் பேசாமல் இருப்பம் என்று நினைக்கேல்லை. சும்மா கோபப்பட்டுக் கொண்டு அந்த மனிசிக்கு முப்பத்தைந்து வயது. அது நகை போடுதெண்டால் அறுபத்தொரு வயதிலும் மூன்று நகை போட வேணுமாம். திருவிழாவிற்கு எவ்வளவு பயம். உந்த நகையை வீட்டிலை வைத்துக்கொண்டு இரவிலை சரியாய்ப் பயப்படுவ. நீங்கள் வேலைக்குப் போயிடுவீர்கள். அவர் ஒரு இடமும் போக ஏலாது விடமாட்டா" என்று குறைபட்டாள்.

சம்பள நாள் வந்தது. சம்பளமும் வந்தது. ஆனால் வருமதிப் பணம் வரவில்லை. அடுத்த வாரம் விசேட சம்பள பட்டியலில் போட்டுத் தருவதாகக் கூறப்பட்டது. இதையறிந்த மகேஸ் துக்கம் கொண்டாடினார். மற்றவர்களுடன் கதைப்பதை நிறுத்தினார். அவருக்கு பல விதமான வியாதிகள் ஏற்பட்டது. அவருடைய நடவடிக்கையைக் கண்ட சுந்தரம், கைகேயியுடன் அவரை ஒப்பிட்டுப் பார்த்து மனதிற்குள் சிரித்துக் கொண்டார். அரசாங்க அலுவல் ஆறுதல் தானே முதலாந் திகதிதான் தயாளனுக்கு பணங் கிடைத்தது. அடுத்த நாள் அடைவு மீட்டு மகேஸிடம் பதக்கஞ் சங்கிலி கொடுக்கப்பட்டது.

"முருகா! ஒரு மாதிரிச் சங்கிலி கிடைக்கச் செய்துவிட்டாய். நோய் நொடி துன்பமில்லாமல் திருவிழாவிற்கு நான் வர அருள் புரியவேணும்" என்று மகேஸ் வேண்டிக் கொண்டார். முருகனின் சித்தம் என்னவோ யாரறிவர். கொடியேற்றத்திலன்று மகேஸ் மிகவும் ஆடம்பரமாகச் சென்றார். முதலாளியம்மா வரவில்லை. அவவிற்குப் படுஏமாற்றம். மூன்றாந் திருவிழாவில் அன்று சுந்தரமும் அவவும் கோயிலுக்குப் போய்க்கொண்டு இருக்கும் போது சிதம்பரநாதனும் மனைவியும் கோயிலால் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தனர். சிதம்பரநாதனின் மனைவி கஜலட்சுமி சாதாரணமான சேலை அணிந்து தோய்த்துக் காய்ந்த தலையுடன் திருநீற்றுக் குறிகளுடன் உருத்திராட்சம் படிகமாலையுடன் வந்து கொண்டு இருந்தார். அதைக் கண்டதும் சுந்தரத்திற்கு மிகவும் ஆனந்தம். மகேஸுக்கு மிகமிக வெட்கமாக இருந்தது.

"முருகா எனக்கு அறுபது வயதிலும் பாடம் புகட்டுகிறாய் போல இருக்கிறது" என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார்.

கோயிலடிக்குச் சென்றதும் "உங்களின் நன்மை கருதி பெறுமதிமிக்க நகைகளை அணிவதைத் தவிருங்கள்" என்று பொலிஸாரின் அறிவித்தலையும் கேட்ட மகேஸுக்கு சினமும் பயமும் ஏற்பட்டது. உள்ளே சென்று சுவாமியைக் கும்பிட்டதும் வழமையான உரையாடல் நடை பெற்றது.

“அக்கா! கந்தர்மடத்திலும், எங்கன்ரை குறுக்குத்தெரு தொங்கல் வீடொன்றிலும் ராத்திரி நகையள் கொள்ளையடிக்கப்பட்டதாம். கைத் தொலைபேசியில் உள்ள கமராவால் எடுத்த படத்தை காட்டி நகையளைக் கேட்கிறாங்களாம்.” என்று பக்கத்துவீட்டு செண்பகம் சொன்னதுதான் தாமதம் உடனடியாக மகேஸ்க்கு குளிர்க்காய்ச்சல் ஏற்பட்ட மாதிரித் தாவணியால் போர்த்துக் கொண்டார்.

திருவிழா முடிந்து வீட்டிற்கு போகையில், “ஏன் மகேஸ்! போர்த்துக் கொண்டு வாறீர். உமது பதக்கஞ் சங்கிலியை வெளியே தெரிய விடுவது தானே? யாரோ கந்தர்மட, குறுக்குத் தெரு விடயங்களை சொல்லிப் போட்டினை போல் தெரிகிறது” என்று குத்தலாகக் கேட்டார் கனகசுந்தரம்.



“இஞ்சாருங்கோ! நான் பயந்து சாகிறன். உங்களுக்கு வேடிக்கை. சாப்பிட்டுவிட்டு நகையளைக் கொண்டு போய் வங்கியில் லொக்கரில் வைத்து விடுங்கோ” என்றார் மகேஸ்.

“பட்டாத்தான் தெரியும் பாவைக்கு” என்ற ஒரு புதுமொழி உண்டாகிவிட்டது. ஆசை அறுபதிலும் போகாது. உமக்கு நகை மோகத்தை மூன்று நாட்களில் முருகன் போக்கடித்து விட்டார் பதக்கம் சங்கிலியையுமா? கொண்டு போவது” என்று சுந்தரம் கேட்டார்.

“ஓம்! அந்தப் பதக்கஞ் சங்கிலி தான் முக்கியம்”

பா. பாலச்சந்திரன்
மயிலணி,
சுன்னாகம்.

# உணவுச் சங்கிலியோடு உருவாகிய சமூக மாற்றங்கள்

**வடவரணி ச.சபா**



காட்டில் வாழ்ந்த ஆதிகால மனிதன் தனது உணவுத் தேவைக்காகக் காட்டிலுள்ள சகல மிருகங்களையும் வேட்டையாடி அவற்றை உணவாக உண்டு உயிர் வாழ்ந்து வந்தான். அவனுடைய தொழிலும் அதுவாகவே இருந்து வந்தது.

தன் உணவுத் தேவைக்காக அவன் எந்த மிருகத்தையும் விட்டு வைக்கவில்லை. கண்ணில் கண்ட அனைத்து மிருகங்களையும் கொன்று தனது உணவாக்கிக் கொள்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான்.

## உணவுச் சங்கிலி

மனிதனைப் போன்று ஒவ்வொரு உயிரினமும் தனக்குத் தேவையான உணவுக்காக இன்னொரு சிறிய உயிரினத்தைக் கொன்று திண்பதையே வழக்கமாக்கிக் கொண்டன.

உதாரணமாக சிறிய பூச்சி பெரிய பூச்சி இனத்தால் கொன்று தின்னப்பட்டது. சின்ன மீனைப் பெரிய மீன் கொன்று தின்றது. சிலந்தி தன் வலையில் அகப்பட்ட சிறிய பூச்சியை உணவாக்க, அந்தச் சிறிய பூச்சியையும் சிலந்தியையும் பல்லி உணவாக்க அதே பல்லியை ஒரு பறவை உணவாக்க அந்தப் பறவையை காட்டுப் பூனை உணவாக்க.... இப்படியே உணவுச் சங்கிலி தொடர்ந்து கொண்டேயிருந்தது. இறுதியில் உணவுச் சங்கிலி மனிதனில் முடிந்த போதும் மனிதனையும் சில மிருகங்கள் உணவாக்கிக் கொண்டன.

## தவிர்க்கப்பட்ட உயிரினம்

தனது உணவுக்காகக் காட்டு மிருகங்களையும், ஏனைய உயிரினங்களையும் தனதாக்கிக் கொள்ளும்போது மனிதனுக்குப் பல்வேறு காலகட்டங்களும் ஆபத்துக்களும் ஏற்படத் தொடங்கியது. உதாரணமாக சிங்கம், புலி, கரடி, யானை போன்ற துட்ட மிருகங் களினால் அவன் மரணத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. எனவே அந்த உயிரினங்களின் இறைச்சியை உண்ணக்கூடாது என்று தடைவிதித்தான். ஊர்ந்து செல்லும் பிராணிகளில் பாம்பு, தேள் போன்ற உயிரினங்களினால் தனக்கு ஆபத்து இருப்பதை உணர்ந்து அவற்றை உண்பதைத் தவிர்த்துக் கொண்டான். மீன் இனத்தை உணவாக்கும் நோக்குடன் நீரில் இறங்கியபோது முதலை போன்ற உயிரினங்களினால் தனக்கு ஆபத்து இருப்பதை உணர்ந்து முதலையைத் தின்னக்கூடாது எனக் கட்டுப்பாடு விதித்தான்.

சாதாரண உயிரினங்கள் அகப்படாத பட்சத்தில் இந்த உயிரினங்கள் அகப்படும் போது இவற்றை உணவாக்க முற்படும்போது தான் ஆபத்தில் மாட்டிக் கொள்ள நேரிடும் என்பதற் காக இந்த உயிரினங்களை உணவாக்கும் முயற்சியை தவிர்த்துக் கொண்டான்.

## தனிக்குடும்ப வாழ்க்கை முறை

காட்டில் நாடோடிகளாகத் திரிந்து வேட்டையாடி கூட்டுவாழ்க்கை வாழ்ந்த மனிதன் காலப்போக்கில் நாடோடிகளாக திரியாமல் கூட்டு வாழ்க்கையிலிருந்து பிரிந்து தனித்தனி குடும்பங்களாகத் தமக்கென வீடுகளை அமைத்துக் குடும்ப வாழ்க்கை வாழும் நிலை உருவாகிய போது அவனிடத்தில் பல்வேறு சிந்தனைகளும் உருவாகின.

தனது குடும்பமான மனைவி பிள்ளைகளை விட்டு அதிக தூரம் பிரிந்திருக்காமல் அவர்களுடன் நெருக்கமாக இருக்க வேண்டிய உணர்வு ரீதியான பிணைப்பு உருவாகியது.

காட்டு மிருகங்கள் அகப்படாத நிலை அடிக்கடி ஏற்பட்டமையினால் தனது உணவுத் தேவைக்காக ஆடு, மாடு, கோழி, முயல் என்பவற்றை வளர்க்கத் தொடங்கியதுடன் அவற்றிலிருந்து பெறப்படும் பால், முட்டை, இறைச்சி என்பவற்றையும் உண்ணத் தொடங்கினான். மேலும் காய், கனிகளில் நாட்டமின்றி இருந்தவன் மரங்களிலிருந்து கிடைத்த காய், கனிகளை உணவாக்கிக் கொண்டதுடன் நிலத்துக்கு கீழ் இருந்த கிழங்கு வகைகளையும் உணவாக்கிக் கொண்டு படிப்படியாக விவசாயத்திலும் ஈடுபடத் தொடங்கினான்.

## இயற்கையின் உந்துதல்

இயற்கையின் உந்துதலால் அவனுடைய அறிவு வளர்ச்சியில் படிப்படியான மாற்றங் கள் ஏற்படத் தொடங்கின. ஒன்றைப் பற்றி ஆழமாகச் சிந்திக்கவும், ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்திப் பார்க்கவும் தெரிந்து கொண்டான். தனிக்குடும்பமாக வாழ்ந்த அவனிடத்தில் தன் மனைவி தன் பிள்ளைகள் தனது பெற்றோர் என்ற உணர்வுகளுடன் பிரிக்க முடியாத பாச உணர்வுகளும் வலுவடையத் தொடங்கின.

உணவுக்காக ஓர் உயிரைக் கொல்ல முற்படும் போது, அதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அந்த உயிரினம் எடுக்கும் பல்வேறு முயற்சிகளும் தோற்றுப் போய் இறுதியில் மனிதன் அதைக் கொல்வதும், மரணத் தறுவாயில் அந்த உயிரினம் படும் வேதனையும் அலறலும் அவன் மனதில் ஓர் நெகிழ்வுத் தன்மையை ஏற்படுத்தியது. இதனால் அவனிடமிருந்து அன்பு, பாசம், கருணை என்ற உணர்வுகள் வெளிப்படத் தொடங்கின. இதன் அடிப்படையில் உயிர்க் கொலை செய்வது "பாவம்" என்ற கொள்கை அவனிடத்தில் வளரத் தொடங்கியது.

> உணவுக்காக ஓர் உயிரைக் கொல்ல முற்படும் போது, அதிலிருந்து தன்னைக் காப் பாற்றிக் கொள்ள அந்த உயிரினம் எடுக்கும் பல்வேறு முயற்சிகளும் தோற்றுப் போய் இறுதியில் மனிதன் அதைக் கொல்வதும், மரணத் தறுவாயில் அந்த உயிரினம் படும் வேதனையும் அலறலும் அவன் மனதில் ஓர் நெகிழ்வுத் தன்மையை ஏற்படுத்தியது. இதனால் அவனிடமிருந்து அன்பு, பாசம், கருணை என்ற உணர்வுகள் வெளிப்படத் தொடங்கின.

## உணவுக் கொள்கையில் மாற்றம்

மனிதன் உணவுத் தேவைக்காக மிருகங்களை வேட்டையாடும் போதும், மிருகங்கள் தமது உணவுத் தேவைக்காக இன்னொரு மிருகத்தைக் கொல்லும் போதும் சில மிருகங்கள் எந்த மிருகத்தையும் கொல்லாது தாவரங்களையும் காய் கனிகளையும் கிழங்குகளை உணவாகக் கொண்டு உயிர் வாழ்வதை அவனால் அவதானிக்க முடிந்தது. மான், மரை, முயல், குரங்கு என்பவற்றின் உணவுப் பழக்கம் அவ்வாறு அமைந்திருந்தது.

இந்த உணவுப் பழக்கத்தை ஒரு பகுதியினர் பின்பற்றத் தொடங்கினர். இப்பழக்கத்தை ஏற்படுத்திய பெருமை மிருகங்களையே சாரும்.

இந்நடைமுறையினால் அவனது உணவுத் தேவையை முற்றாகப் பூர்த்தி செய்ய முடியாது போய்விடவே சுலபமாகக் கிடைக்கக் கூடிய சாதாரண மிருகங்களைத் தனது உணவுத் தேவைக்காகச் சேர்த்து பயன்படுத்திக் கொண்டான். அந்த வரிசையில் மான், மரை, முயல், பன்றி, ஆடு, மாடு, கோழி போன்ற மிருகங்கள் அகப்பட்டுக் கொண்டன. இந்த அப்பாவி மிருகங்களினால் இன்று வரை மீட்சி பெற முடியவில்லை.

## சமய ஆன்மிகவாதிகளின் தோற்றம்

தனிக் குடும்பமாக வாழ்ந்து வந்த மனிதன் பல்வேறு இயற்கைத் தாக்கங்களுக்கு உட்பட்டான். காற்று, மழை, மின்னல், கொடிய வெப்பம் என்பவற்றினால் பாதிக்கப் பட்டதுடன் பல்வேறு நோய்த் தாக்கங்களுக்கும் உள்ளானான். தான் நினைத்த பல்வேறு காரியங்கள்

நடைபெற வில்லை. இவற்றை ஆழ மாகச் சிந்தித்த மனிதன் தனது மரணத்தையிட்டுப் பயப்படத் தொடங்கியபோது மனிதனுக்கு மேற்பட்ட ஏதோ ஒரு சக்தி இருப்பதை உணர்ந்து கொண்டான். அதற்குக் "கடவுள்" என்ற பெயரை வைத்துப் பல்வேறு கற்பனை உருவங்களை சிருஷ்டித்து வழிபடத் தொடங்கினான்.

பல்வேறு மட்டக் கூட்டத்தினரிடமும், பல்வேறு வகையில் "கடவுட் கொள்கை" கடைப்பிடிக்கப்பட்டு அவை மதங்களாக உருவாகின.

எல்லா மதங்களும் ஒழுக்க நெறிகளையே மையமாகக் கொண்டிருந்த போது ஆன்மிக வாதிகளின் தோற்றம் உருவாகியது.

மதவாதிகளின் தோற்றமும், ஆன்மீக வாதிகளின் தோற்றமும் "தன்னைப் போல பிறரையும், ஏனைய உயிரினங்களையும் நேசி" என்ற தத்துவத்தை உணர்த்தியதுடன் ஜீவகாருணியம் என்பதன் உண்மைத் தன்மையும் வெளிப்படுத்தியது. உயிர்க் கொலை செய்வது "பாவம்" என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டபோதும் "உணவுத் தேவை கருதி மேற்கொள்ளப்படும் உயிர்க்கொலைகள் பாவமில்லை" என்ற மறைமுகமான கொள்கையையும் சமுதாயம் ஏற்றுக் கொண்டது.

இந்நிலை 20ஆம் நூற்றாண்டின் பிற்பட்ட காலத்தில் ஆன்மீகவாதிகளில் ஒருவரான ராமகிருஸ்ண பரமஹம்சர் என்பவரால் பின்வருமாறு வெளிப்படுத்தப்பட்டதை உதாரணமாகக் கொள்ளலாம். "உயிர்க்கொலைகள் தவிர்க்கப்பட வேண்டும். முடியாது விட்டால் குறைக்கப்பட வேண்டும். உங்களின் உணவுத் தேவைக்கு 50 கோழிகள் தேவைப்பட்டால் ஒரு ஆட்டைக் கொல்லுங்கள். 5 ஆடுகள் தேவைப்பட்டால் ஒரு மாட்டைக் கொல்லுங்கள்" என்ற அடிப் படையில் அவரின் போதனைகள் அமைந்திருந்தன. இது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதே.

## மூடக் கொள்கைகள்

மேற்கூறப்பட்ட இந்த உண்மை இந்துசமய வாதிகளினால் உணரப்பட்ட போதிலும், பாரம் பரியத்தில் ஊறிய சில மூடக்கொள்கைகளும் நடைமுறையில் உள்ளமை குறிப் பிடத்தக்கது. யாகங்கள், வேள்விகள் என்ற பெயரில் குதிரை, மாடு (பசு), ஆடு, கோழி என்பன வெட்டப்பட்டு வரும் நடைமுறை இன்றும் தொடர்வதை அவதானிக்க முடிகிறது. இது மிகவும் அருவருக்கத்தக்கதாகும். இச்செய்கையை சமயவாதிகள் நியாயப்படுத்தினாலும் புத்தி ஜீவிகள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஏற்கனவே உணவுச் சங்கிலிக்குள் அகப்பட்டு மீள முடியாதிருக்கும் அப்பாவி உயிரினங்களின் விடயத்தைவிட இச்செயல் மிகவும் கொடூரமானது.

தவறான கொள்கை ஒன்று நீண்ட காலமாக நடைமுறையில் உள்ளது என்பதற்காக அது சரியாகிவிட முடியாது.

உயிர்க் கொலையின்றி நமது உணவுக்காகத் தாவரபட்சணியாக மாறியுள்ள மிருகங் களிடமிருந்து மனிதன் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் பல உண்டு என்பதை மனித சமுதாயம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## பந்து

வட்டமான பந்து
வடிவான பந்து
வெள்ளை நிறப் பந்து
மென்மையான பந்து

உருண்டு உருண்டு ஓடிச்
சிரிக்க வைக்கும் பந்து
அம்மா வாங்கித் தந்த
அருமையான பந்து

ஓடி ஓடிப் பிடித்து
நாங்கள் ஆடும் பந்து



வானை முட்டச் சென்று
திரும்பி வரும் பந்து

சிறுவர் நாங்கள் கூடி
விளையாடும் பந்து
துள்ளித் துள்ளிப் பாய்ந்து
மகிழ வைக்கும் பந்து.

ப. போஜினி
ஆரம்பக் கல்வி, 1 ஆம் வருடம்,
யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரி.

# கவிதைத் திறனாய்வு



சின்னஞ்சிறுகிளியே — கண்ணம்மா!
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலிதீர்த்தே — உலகில்
ஏற்றம் புரியவந்தாய்!

பிள்ளைக் கனியமுதே — கண்ணம்மா!
பேசும் பொற் சித்திரமே!
அள்ளி யணைத்திடவே — என் முன்னே
ஆடி வருந் தேனே.

ஓடி வருகையிலே — கண்ணம்மா!
உள்ளங் குளிருதடி
ஆடித் திரிதல் கண்டால் - உன்னைப் போய்
ஆவி தழுவுதடி.

இது மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 'கண்ணம்மா என் குழந்தை' என்னும் பாடலில் ஒரு பகுதி ஆகும். இங்கு மகாகவி தனது மகள் கண்ணம்மா மீது அன்பு கொள்கிறார். குழந்தையாகிய அவளின் செயல்கள் பாரதியின் மிகை அறிவைச் சிந்திக்க வைத்துள்ளன. கண்ணம்மா பாரதியைப் பாட வைக்குமாற்றல் இங்கு சிறப்பானது.

இக்கவிதையில் அணிகளே முக்கிய பாத்திரமாகின்றன. பாரதி கண்ணம்மாவை உருவகப்படுத்துகிறார்.

"சின்னஞ்சிறுகிளியே — கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே"

என உருவக அணிகளாலேயே கண்ணம்மாவை அழகுபடுத்துவதில் கவிஞரின் ஆற்றல் சிறப்பு மிக்கது. சின்னஞ்சிறு கிளி எனவும் செல்வக் களஞ்சியமெனவும் மேற்கூறியவாறு குழந்தை கூறப்படுகிறாள். கண்ணம்மாவைக் கனியெனவும் சித்திரமெனவும் ஆடிவரும் தேன் எனவும் உருவகப்படுத்தும் பாரதி அவளைக் கலி தீர்க்கும் கடவுளாகவும் கூறும்போது அது உயர்வு நவிற்சிக்கு ஒப்பாகிறது. ஒரு கவிஞனின் ஆற்றல் அவன் அணிகளின் மூலம் படைப்பைச் சித்தரிப்பதிலேயே தங்கியுள்ளது என்பது பாரதியின் மூலம் நாம் அறிந்து கொள்ளும் உண்மையாகும்.

எதுகை, மோனை என்பனவும் பாரதியின் படைப்பாயுதங்களாகும்.

"ஓடி வருகையிலே — கண்ணம்மா
உள்ளங் குளிருதடி
ஆடித்திரிதல் கண்டால் - உன்னைப் போய்
ஆவி தழுவுதடி"

இங்கு ஓடி, ஆடி என்பன எதுகைக்கும் ஆடி, ஆவி போன்றன மோனைக்கும் சமர்ப்பணம்.



படித்தவர் மட்டுமன்றி பாமரரும் இன்புறும் வகைக் கவி படைக்கும் பாரதி ஓரிரு வரிகளிலேயே ஓராயிரம் உள்ளங்களைக் கொள்ளை கொள்கின்றான். அவனது வரிகள் ஒவ்வொன்றும் தேனிலும் இனிமையானவை. கற்றவர்க்கு மட்டுமன்றிக் கல்லாதவர்கள் இன்புறும் வகையில் கவி புனைதல் தனித்திறமை. பாரதி இவையனைத்திற்கும் உறவினன். குழல், யாழ் இவையனைத்திலும்விட மழலைச் சொல்லுக்கு பாரதி கொடுக்கும் முக்கியத்துவம் போற்றுதற்குரியது.

"ஆடித்திரிதல் கண்டால் - உன்னைப் போய்
ஆவி தழுவுதடி"

கவிஞர் குழந்தையின் ஆடல் கண்டு தனது உயிரே அவளைத் தழுவுவதாகக் கூறுகிறார். ஒரு குழந்தையின் செயல்கள் தந்தையுள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் விதம் வியப்புற வைக்குதல்லவா?

வி. திவாகரன்
தரம் - 11A
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி

# பனையோலை இராமன் க(ர)தைகள்

## வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் தொடர்

## 2. மருமோளுக்கு நகை எடுத்த காதை

ம.பா.மகாலிங்கசிவம்

பனையோலை ராமன் சேர் முழுக்கஞ்சன். (அதென்ன கஞ்சனுக்கு முழுக்கஞ்சன் அரைக் கஞ்சன் எண்டெல்லாம் இருக்கோ எண்டு கேக்கப்படாது. சொல்லுற கதையை மட்டும் வாசிச்சாக் காணும்) கஞ்சனான அவர் எப்ப நான் அவற்றை வீட்டை போனாலும் நாலைஞ்சு கறியளோடை தான் விழுங்கிக் கொண்டிருப்பார். (சப்பிச் சாப்பிடப் பல்லு இல்லாததால் விழுங்குதல் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.)

இதைச் சீரியஸான விஷயமா எடுத்துக் கொண்டு ஆராய ஆருக்கு வேலைமினக்கேடு இருக்கப்போகிறது? இந்த வழியைக் கண்டு பிடிச்சால் வெளிநாட்டிலை இருந்து வாற காசிலை கொஞ்சம் மிச்சம் பிடிக்கலாமே எண்ட ஆலாதி எனக்கு ஏற்பட்டது.



ஒரு நாள் மூண்டு மாதத்துக்குரிய வெளி நாட்டு உதவியை ஒண்டா மச்சான் அனுப்பின குஷியிலை இருந்த நான் சங்கதியை அறிய அவருக்குத் தெரியாமலே பின் தொடர்ந்தேன். காலமை ஏழு மணி இருக்கும். அவரது அடி வளவுப் பனையில் கள் சீவுபவன் மரமேறத் தடையாக இருந்த மூண்டு பனையோலையளை வெட்டி விழுத்திவிட்டான். அவன் கீழே இறங்கிப் பாக்கேக்கை பனையோலையளைக் காணேல்லை. சுத்துமுத்தும் பாத்த அவனாலை பெரும் புழுதிப் படலத்தின் மையப்புள்ளியில் பனையோலை ராமன் சேர் மூண்டு ஓலையளோடை போய்க் கொண்டிருக் கிறதைத் தான் பார்க்க முடிஞ்சுது. அவற்றை வீட்டிலையிருந்து ஏழாவது வீட்டுக்கை அவரும் புழுதிப் படலமும்...... புகுந்ததா? புகுந்தனவா? (தயவு செய்து இலக்கணக்காரர் தீர்மானிக்கவும்.)

அது பார்வதி ஆச்சியின் வீடு. நான் உயரமாக இருந்தபடியால் நாகரிகம் கருதி உள்ளுக்கை போகாமல் மதிலுக்கு மேலாலை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"இந்தாணை பனையோலையள். மாடுகளுக்குக் கிழிச்சுப் போடு" எண்டார். (இப்படி உதவி செய்யிற மனுசனை முழுக்கஞ்சன் எண்டு ஏன் பொய் சொன்னனீர்?" எண்டு நீங்கள் திட்டிறது காதிலை விழுகுது. தொடர்ந்து வாசியுங்கோ)

"நல்லது. இண்டைக்கு மாடுகளுக்கு வைக்கல் முடிஞ்சு போச்சுது எண்டு யோசிச்சுக் கொண்டிருந்தன். நீங்கள் ஓலை கொணந்திட்டியள்" எண்டு வாயெல்லாம் பல்லாக சீச்சீ! வாயெல்லாம் முரசாக வரவேற்றாள் பார்வதி ஆச்சியார்.

"சும்மா கொணந்தநான் எண்டு நினைக்காதை. மத்தியானம் வருவன் காய்ச்சின கறியள்ளை கொஞ்சங் கொஞ்சம் எடுத்துவை" எண்டு சொல்லிப் போட்டு அமெரிக்காவையே கண்டு பிடிச்ச கொலம்பஸ் மாதிரிக் கறிக்கு வழிபண்ணின குஷியிலை தொங்கித்தொங்கி நடக்கத் தொடங்கினார். (இப்படிப் பனையோலையளோடை இழுபட்டுக் கொண்டு போறபடியால் தான் சுந்தரராமன் (?) பனையோலை ராமன் ஆனதாக ஊருக்கை ஒரு ஐதீகம்.)

இப்படிக் கொத்த கஞ்சனான பனையோலை ராமன் சேரிடம் அவரது தங்கை வந்து தனது மகளுக்கு கலியாணம் சீதனம் எல்லாம் தேடியாகி விட்டது. ஒரு சோடிக் காப்புத் தான் தேவை. அண்ணன் எண்டு இருப்பவர் வாங்கித் தரத்தான் வேணுமெண்டு உடும்புப் பிடியா நாண்டு கொண்டு நிண்டாள். அவருக்குப் பிடிக்காத இரு வகைப் பூக்களின் காரணமாகத் தமையன் எண்டு சொல்லவே வெக்கப்பட்டு ஒதுங்கியிருந்தவள். இப்ப சொந்தங் கொண்டாடி வரேக்கை எப்பிடி மறுக்கிறது? எண்டாலும் ஏதாவது சதி செய்து வெட்டி விடவே முடிவெடுத்தார்.

தானே நகைக் கடைக்குப் போய் விட்டு வந்து ஏதாவது கதைவிடலாம் எண்டு நினைச்சால் தங்கையும் தான் வந்துதான் டிசைன் தெரிவு செய்யவேண்டுமென அடம்பிடித்தாள். வேறுவழியின்றித் தனக்கு யாழ்ப்பாணம் போக உடல் நிலை சரியில்லை. ரெலிபோனிலை கதைச்சு



ஓடர் குடுத்திட்டுப் பிறகு போய் எடுப்போம் எண்டு சமாளித்தார். அதை ஏற்றுக் கொண்ட தங்கை மற்றைய நகைகளைச் செய்த மல்லிகா நகைக்கடையின் நம்பரைக் கொண்டு வந்து கொடுத்தார். தங்கை தன் வீட்டுக்குப் புறப்பட்ட அடுத்த நிமிடமே தொலைபேசியில் இலக்கங்களைச் சுழற்றினார்.

"ஹலோ .... மல்லிகா நகைக்கடையே?"

"ஓம் ஐயா"

"முதலாளி ஐயா என்ன செய்யிறார்"

"அவர் இஞ்சை தான் நிக்கிறார்"

"கன நேரமா நிக்கிறாரே?"

"ஓம் கடை திறந்த நேரம் துவக்கம் நிக்கிறார்."

"ஏன் தம்பி? உங்கை கதிரை ஒண்டும் இல்லையே? கனநேரம் நின்டாக் கால் உழையும் எல்லே அவரை இருக்கச் சொல்லுங் கோவன்."

"ஐயா இஞ்சை சரியானசனம் நக்கல் நளினம் எல்லாத்தையும் விட்டிட்டு விஷயத்தைச் சொல்லுங்கோ" அங்கிருந்து கடுப்புடன் குரல் கேட்டது.

"அது ஒண்டும் இல்லைத்தம்பி ......" இழுத்தார்.

"ஒண்டும் இல்லாட்டிப் பிறகேன் ரெலிபோன் எடுத்தனீங்க? என்ன லவ்வே?" தனக்குச் சமமான திறமையுள்ள ஒருவன் மற்றப் பக்கத்திலும் இருப்பது இப்போது தான் பனையோலை ராமன் சேருக்குப் புரிந்தது.

"தம்பி கோபிக்காதையும். அக்கான்ரை மகளுக்குக் கலியாணம். அது தான்......" மீண்டும் இழுத்தார்.

"ஐயா கலியாண வீட்டுக்கு ரெலிபோனிலை சொன்னா வரமாட்டம். நேர காட் கொணந்து தாங்கோ. குடும்பமா வரவேணும் எண்டா ஒரு பொம்பிளையும் வந்து சொல்ல வேணும்"

இப்போது அந்தப் பக்கத்தில் இருந்த கடுப்பு இந்தப் பக்கத்திலும் தொற்றிக் கொண்டது.

"தம்பி கொஞ்சம் பொறும். அவளைக் காணேல்லையாம். பிள்ளை எத்தினை எண்டானாம். இன்னும் கலியாணக் காப்புச் செய்யேல்லை. நீ குடும்பத்தோடை வந்து சாப்பிட நிக்கிறாய்"

"ஆ...காப்புச் செய்ய வேணுமே ஐயா?"

"கம் ருத பொயின்ற் எண்டானாம் தம்பி. கம் ருத பொயின்ற் எண்டானாம்" (தனது டிக்ஷனறியில் இருக்கும் மிகக் குறைந்த ஆங்கிலத் தொடர்களைச் சந்தர்ப்பம் கிடைத்தால் ஒண்டுக்கு ரண்டு தரம் விளாசி விடுவதில் பனையோலை ராமன் சேர் மகாவிண்ணன்.

"தம்பி ஒரு சோடி காப்புச் செய்ய வேணும். எப்பிடி உங்கடை கடைப் பவுண்? நம்பிச் செய்யலாமே?

"ஓம் ஐயா நம்பலாம். 24 கரட் வேணுமெண்டா வந்து உரசிப் பாருங்கோ"

"ஐயையோ! அதொண்டும் வேண்டாம் தம்பி! இளம் வயசிலை பஸ்ஸுக்கை இளம் பிள்ளை ஒண்டை உரசிச் செருப்படி பட்ட பிறகு தீப்பெட்டியைக் கூட உரசிறதில்லை. லைற்றர் தான் பாவிக்கிறேன்" எதுக்கும் வெக்கப்படாம நடந்ததை நடந்தபடி சொல்லிறது அவற்றை "ஸ்பெஷல்".

"ஒரு நாலு பவுணிலை ஒரு சோடி காப்புச் செய்யக் கனகாசு வேணுமே தம்பி"

"பவுண் 40 ஆயிரம் ஐயா. கூலியும் சேர்த்தால் ஒண்டை முக்கால் லச்சம் வேணும்"

"அப்பிடியே தம்பி முழுக்காசும் உடன கட்ட வேணுமே?"

"ஏன் கேக்கிறியள்?

"என்னட்டை இப்ப காசுக்குக் கொஞ்சம் தட்டுப்பாடு. காப்பு எடுக்கேக்கை இருக்கிறதைத் தந்திட்டு மிச்சத்தை நான் சொல்லிற தவணைக்கு முன்னமே தந்திடுவன்."

"இல்லை ஐயா. நாங்கள் அப்பிடிக் கடன் விடுறதில்லை. எண்டாலும் நீங்க இப்பிடிக் கேட்டா....? வாற ஓடரை விட்டிட்டும் என்ன செய்யிறது? எதுக்கும் நாளைக்கு முதலாளியோட நேர வந்து கதையுங்கோவன்"

"ஓம் தம்பி நாளைக்கு வாறன்"

"வாங்கோ. நானே அவரோடை கதைச்சு வைக்கிறன். காப்பு எடுக்கேக்கை எவ்வளவு காசு தருவியள் எண்டு சொன்னால்.............."

"ஒரு ஆயிரத்து இருநூறு ரூபா தருவன் தம்பி"

"போனை வையடா நாயே"

ம.பா.மகாலிங்கசிவம்

***மருத்துவத்துறையினரின் எச்சரிக்கை! இது வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் தொடர் என்பதால் கர்ப்பவதிகள் கவனமாக வாசிக்கும்படி வேண்டப்படுகிறீர்கள்.***

# செவ்வியல் தமிழிலக்கியத்தில் பெண்மை – 4


கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
முன்னைநாள் ஆய்வாளர்,
கக்சயின் பல்கலைக்கழகம்
ஜப்பான்.




உலக மாந்தர்களில் ஆணும் பெண்ணும் சமம் என இன்று பேசப்படுகிறது. குறிப்பாகப் பால் சமத்துவம் பற்றிப் பல கற்கைநெறிகளும் ஆய்வுகளும் நடைபெறுகின்றன. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய புதுமைக் கவிஞன் பாரதியும் ஆணும் பெண்ணும் சமம் என்றே கவிதை பாடியுள்ளான். உலகப் பொதுமறை எனப் புகழ்பெற்ற திருக்குறளில் பெண் ஆணைவிட மேம்பட்டவளாகப் பேசப்பட்டாள். வாழ்க்கைத் துணைநலமாக மனைமாட்சி என்னும் சிறப்புக் குணநலமுடைய பெண்ணை மேலும் தனித்துவமுடையவளாக வள்ளுவர் காட்டுகிறார்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்"

வள்ளுவருடைய காலத்தில் வாழ்க்கைத் துணை நலமாக ஆணைச் சேர்த்து வாழ்க்கை நடத்தும் பெண் அற்புதமான ஆற்றலுடையவளாக இருந்தாள். இல்லறம் என்னும் நல்லறத்தைச் செய்யும் ஆண் இயல்பாகவே பலரைப் பேணும் கடமையை ஏற்றிருந்தான். அவனுடைய கடமைகளை நிறைவாகச் செய்வதற்குப் பெண்ணே துணையாக நின்றாள். அவள் தன்னுடைய கடமைகளைச் செய்வதற்குக் கற்பு என்னும் குணவியல்பு படைத்திருந்தாள். பெண்ணின் கற்பு நலம் என்பது அவளுடைய செயற்பாடுகளுக்கெல்லாம் துணையாக நின்றது.

'இல்லாள்' என்ற நிலையில் பெண்ணுடைய கடமைகள் வீட்டோடு மட்டும் வரையறை செய்யப்பட்டிருக்கவில்லை. பெண்ணின் மனையறம் ஆணின் இல்லறத்திற்கு ஆணி வேர் போன்றிருந்தது. பலரோடு பகிர்ந்துண்ணும் மனையறம் பெண்ணின் செயற்பாட்டுத் திறனால்தான் நிலைபெற்றது. இன்று 'கூட்டுக்குடும்பம்' எனக் கூறப்படும் மூன்று தலைமுறை ஒன்றாய் வாழும் இல்லத்தில் வாழும் அனைவரையும் பேணும் பெரிய பொறுப்பைப் பெண் ஏற்றிருந்தாள். அதனால் தன்னுடைய முழு ஆற்றலையும் பயன்படுத்த வேண்டியவளானாள். நாள்தோறும் செய்யும் இல்லறக் கடமைகளை உறுதியோடு செய்யும் மனவுரம் பெற்றிருந்தாள். இத்தகைய செயலாற்றும் மனவுரத்தையே வள்ளுவர் 'கற்பெனும் திண்மை' எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

இன்று 'கற்பு' என்பது ஒழுக்கம் சார்ந்ததாகவும், உடலுடன் தொடர்புபட்டதாகவுமே கருதப்படுகிறது. ஆனால் 'கற்பு' என்ற சொல் படிப்பு என்ற செயற்பாட்டின் ஒரு முறைமையாகும். ஒருவரிடமிருந்து ஒரு செயற்பாட்டைக் கற்றுக்கொள்ளும் போது அது கற்பு ஆகின்றது. பெண்ணைப் பொறுத்தவரையில் ஒரு பண்பாட்டு வளர்ப்பு நிலையால் அவள் பக்குவப்படுத்தப் பட்டாள். பெண்ணின் உடல் வளர்ச்சியும் உள வளர்ச்சியும் ஒத்தியையக் கூடிய வளர்ப்பு நிலையொன்று நம் முன்னோரால் வரையறை செய்யப் பட்டிருந்தது. பெண்ணின் வளர்ச்சி நிலையைக் குறிக்கப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் எனப் பெயர்களும் சூட்டப் பெற்றிருந்தன.

வளர்ச்சி நிலைக்கேற்ற இல்லறக் கடமைகளை இல்லத்திலே பெண் கற்கும் வாய்ப்பு முன்னர் இருந்தது. உணவு, உடை, உறையுள் என்னும் மனிதனின் இன்றியமையாத தேவைகள் பற்றிய கற்புடன் பெண் வளர்ந்தாள். அந்தப் பயிற்சியும் பட்டறிவும் தொடர்ச்சியான செயற்பாடும் அவளிடம் ஒரு திண்மையை ஏற்படுத்தின. இதனால் இல்லக் கடமைகளைச் செய்யும் ஆற்றலில் பெண்ணே மேம்பட்டவளாக விளங்கினாள். எனவே 'கற்பு' என்ற குணநலம் பெண்ணிடமே நிலைபெற்றது.

'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்ற ஔவையின் வரையறை கற்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானதாக அமைய வாய்ப்பளித்தது. கற்றபடி ஒழுகுவதுதான் கற்பு என்ற விளக்கத்தையும் இணைத்து நின்றது. ஆனால் வள்ளுவர் வரையறை செய்துள்ள 'கற்பு' பெண்ணுக்கே உரிய தனித்துவமான ஆற்றலாகக் கூறப்பட்டுள்ளது. கலங்காமல் இருக்கும் திடமான உறுதி பெண்ணுக்கே உரியதெனச் சிறப்பாக வள்ளுவர் கூறியுள்ளார். அதனாலேயே


இன்று 'கற்பு' என்பது ஒழுக்கம் சார்ந்ததாகவும், உடலுடன் தொடர்புபட்டதாகவுமே கருதப்படுகிறது. ஆனால் 'கற்பு' என்ற சொல் படிப்பு என்ற செயற்பாட்டின் ஒரு முறைமையாகும். ஒருவரிடமிருந்து ஒரு செயற்பாட்டைக் கற்றுக்கொள்ளும் போது அது கற்பு ஆகின்றது.

பெண்ணைக் காட்டிலும் பெரிய தகைமை பெற்றது எதுவுமில்லையெனக் குறளிலே குறிப்பிட்டுள்ளார்.

தென்புலத்தார் தெய்வம், விருந்து, ஒக்கல் தான் என்ற ஐவகையினரையும் ஓம்பும் இல்லறத் தானுக்குக் கற்பெனும் திண்மையுள்ள வாழ்க்கைத் துணையே தேவை. அதனால் வள்ளுவர் திருக் குறளின் கட்டமைப்பிலே முதலில் இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தை அமைத்து அதன் பின்னர் வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரத்தை அமைத்துள்ளார். இந்த அமைப்பு முறையும் வள்ளுவரது புலமைத்திறனின் வெளிப்பாடாகும். ஒருவனுடைய இல்லத்திலே கற்புடைய மனைவி இருப்பாளாகில் அவனுக்கு எவ்வித தீங்கும் நிகழாது. மனைவியே ஒருவன் பெறுகின்ற சிறந்த பொருளாகும்.

இக்குறளில் வள்ளுவர் பெண்ணே ஆணின் சிறப்புக்குக் காரணமாக அமைபவள் என்று கூறியுள்ளார். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் ஆண் ஈட்டுவதற்குப் பெண்ணின் துணை தேவை. கற்பு நலத்தால் பெண் அம்மூன்றையும் ஆண் பெறுவதற்குப் பேருதவியாக இருப்பாள் என்பது வள்ளுவரது நம்பிக்கையாகும். 'திண்மை' என்ற சொல் பெண்ணின் மனவுரத்தின் தன்மையைக் குறிப்பதாகவுள்ளது. 'கற்பு' என்பதை உரையா சிரியர் 'கலங்கா நிலைமை' எனக் குறிப்பிட்டுள்ளார். கலங்கும் மனம் உடையவராகத் தற்போது பெண்களைக் குறிக்கும் வழக்கம் உள்ளது. ஆனால் வள்ளுவர் அதனை மறுதலித்துள்ளார். எதையும் மனக் கலக்கமின்றிச் செவ்வனே செய்து கொடுக்கும் பேராற்றல் பெண்ணிடம் உள்ளது. இல்லத்திலே இரு நிலைகளில் அவளுடைய ஆற்றல் வெளிப்படுகிறது. மனைவி, தாய் என்ற இரு நிலை களில் பெண்ணின் செயற்பாடு ஆணின் வாழ்க் கைக்குத் துணையாக உள்ளது. இல்லறத்தின் பயனாக மக்கட்பேற்றைப் பெறுவதற்குப் பெண் பெரிதும் துணை நிற்கிறாள்.

பெண் தன்னைப் பற்றி மட்டுமல்ல தன்னைச் சூழ உள்ள எல்லோரையும் பற்றி நினைத்துச் செயற்படும் தாய்மைப் பண்புடையவள். ஒரு நாளின் தொடக்கம் முதல் நிறைவு வரை வீட்டில் உள்ள எல்லோருக்குமாய் உழைப்பவள். இதனை இறக்கும் வரையும் தொடர்ந்து செய்யும் ஆற்றல் உடையவள். அடுக்களையில் உணவு தயாரிக்கும் போதே அனைத்து முகங்களையும் நினைத்துச் செயற்படுபவள். ஐம்பூதங்களின் இயக்கத்தையும் கணித்து வாழ்பவள். குடும்பம் என்னும் தேரின் சாரதியாக வழி நடத்துபவள்.

வாழ்க்கைத் துணையான பெண்ணிடம் கற்பு நலம் இருப்பதால் இல்லறம் செவ்வனே நடை பெறுகிறது என்ற வள்ளுவருடைய கருத்து உலக மக்கள் அனைவருக்குமே ஏற்றதாயுள்ளது. பெண்ணுரிமை பற்றி ஆய்வு செய்து வாதிட்டுவரும் மேலைத்தேயத்தவருக்கு இக் கருத்து மேலும் விளக்கப்பட வேண்டியது. குடும்பக் கடமைகளில் பெண்ணுக்கே முதலிடம் வழங்கப்பட்டிருந்தது. மனைவி, இல்லாள் என்னும் சிறப்புச் சொற்கள் இதனை நன்குணர்த்தும். பெண்ணின் கற்பு நலத்தைக் கூறவந்த பாரதிதாசன் 'வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா! மானம் சேர்ப்பது மனைவியின் வார்த்தைகளடா!' என மிகத் தெளிவாகப் பாடியுள்ளார். பெண்மையின் ஆற்றல் காலத்துக் காலம் விளக்கப்பட்டு வந்தாலும் வள்ளுவர் கூறிய 'திண்மை' என்னும் பண்பு தனித்துவமான தாகும்.

பின்வந்த இலக்கியங்களிலும் பெண்மையின் கற்புநலம் பேசப்பட்டுள்ளது. கற்பின் கனலியாகக் கம்பனின் சீதை விளங்கினாள். அவளுடைய மனத்திண்மை அக்கினிப் பிரவேசத்தால் நிருபிக்கப் பட்டது.

கற்பின் திண்மை காரணமாக அது நெருப்புடனும் தொடர்புபடுத்தப்பட்டுத் தீயவற்றை அழிக்கும் திறனுடையதாயிற்று. சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் கற்பு மதுரை மாநகரையே எரித்தது. கம்பனின் சீதையும் இளங்கோவின் கண்ணகியும் வாழ்க்கைத் துணை நலமாகிக் கற்பு நலம் பேணியவர்கள். இராமனும், கோவலனும் கற்பிற் சிறந்த பெண்களை மனைவியராகப் பெற்ற பெருமைக்குரியவர்கள். வள்ளுவர் கூறிய திண்மை கண்ணகியிடம் மிக்கிருந்தது. கள்வனெனக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலையுண்டிருந்த கணவனின் பழியைத் துடைப்பதற்குக் கலங்கா உள்ளத்துடன் வேற்று நாட்டு மன்னனையே வழக்குரைத்து வாதிட்டு வென்றவள் கண்ணகி. அவளுடைய குணநலம்தான்

வள்ளுவர் குறளில் வரையறை செய்யப்பட்டிருக்கும் கற்பாகும்.

வள்ளுவரின் குறள் பெண்ணின் பெருமைக் குணமாகக் கற்பைச் சிறப்பித்துக் கூறுகிறது. குறள் வெண்பாவில் விரிந்ததொரு குணவியல்பை விளக்க வந்த வள்ளுவர் பயன்படுத்தும் சொற்கள் அவருடைய புலமைச் சிறப்புக்குச் சான்றாக உள்ளன. 'பெருந்தக்க' என்ற தொடரால் வள்ளுவர் விளக்க வந்த பண்புகள் பல. ஆனால் உரையாசிரியரோ அவற்றை மேம்பட்ட என்ற தொடரால் விளக்க முயன்றுள்ளார். இங்கு வள்ளுவர் 'தகுதிப்பாடு' பற்றியே குறிப்பிடுகிறார். ஆனால் உரையாசிரியரோ 'மேம்பாடு' என அதனைக் குறிப்பிட்டுள்ளார். பெண்ணினுடைய பெருமையான தகுதிப்பாடு 'கற்பெனும் திண்மையே'. அவளிடம் உள்ள மேம்பட்ட பொருள்களில் கற்பே மிகவும் சிறந்தது. பெண்ணின் இயல்பான குணமாகவே கற்பு கூறப்பட்டுள்ளது. ஆணைவிடப் பெண் இயற்கையாகவே மனஉரம் பெற்றவள் என்பதையே வள்ளுவர் தனது குறட்பாவிலே குறிப்பிட்டுள்ளார். இல்லறம் செய்யும் ஆணின் செயற்பாட்டுத் திறனுக்குப் பெண்ணின் கற்பின் திண்மையே பெருந்துணையாக நிற்கிறது. இதனால் தான் பெண் ஆணின் வாழ்க்கைத் துணை நலமாகச் சிறப்பிக்கப்பட்டாள். அவளுடைய பட்டறிவு மனவுரத்தைத் தந்தது. எதையும் எதிர்கொள்ளும் ஆற்றலைக் கொடுத்தது. இல்லறத்தை நல்லறமாக நடத்துவதில் பெண்ணின் கற்பு முன்னுரிமை பெற்றதற்கு இதுவே காரணமாகும்.

## இவள் நிலா

இருளிலே தோன்றிய முத்து
அந்த வெண்நிலா
கனவிலே தோன்றிய மாணிக்கம்
அந்தப் பெண்நிலா
மங்களத்தின் மணியாரம்
இந்த மகாகங்கை
பாசத்தின் ஊற்று இவள்
பணிவில் அருவி இவள்
பரிவான தாயாக
பண்பின் சிகரமாக
என்றென்றும் இவளிருக்க
பராசக்தியைத்
தேடுவதேன் அலைவதேன்?
அன்னையாய் அரவணைக்க
தோழியாய் தோள்கொடுக்க
சகோதரியாய் பரிவுகாட்ட
முன்வரும் தெய்வமிவள்
சில்லெனத் தழுவும் தென்றல்
மெல்லெனத் தடவும் இவள் கரங்கள்
இன்சொல்லின் பாத்திரம்
இளங்கோதையிவள் செவ்வாய்
தெளிந்த விசும்பு
களங்கமற்ற இவள் அகம்
வர்ணிக்க வார்த்தையில்லை
பெண்ணிவள் அம்சங்களை
மூச்சிலே கலந்த மௌனம்
இவள் புகழ் பேசும் மொழி.



ஆக்கம் : கி. விதுசா
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி
தரம் 11

## சிந்தனைச் சுடர்

- சிறந்த பலசாலி தேர்ந்த மல்யுத்த வீரன் அல்ல. யார் கோபத்திலும் தன்னை அடக்கியாளக் கூடியவனே சிறந்த பலவான்.
- ஒரே ஒரு நாள் போதும் நம் ஆற்றலைச் சற்றே கூட்டிக் கொள்வதற்கு, ஒவ்வொரு நாளும் பாதிக்கும் - அதன் பின்னே வரும் நிகழ்வுகளை. இன்று என்பது வாழ்வின் திருப்புமுனை. இதில் - நாம் செய்து முடிக்கிற செயல்கள், சந்திக்கிற நபர்கள், நம் செயலின் போக்கு - இவை விளைவுகளைக் கொண்டிருக்கும், எதிர்காலத்தின் அடியாழத்திலும்.
- இழந்த செல்வத்தை ஈடுகட்டிவிடும் உழைப்பு. இழந்த அறிவை மீட்டுத்தரும் படிப்பு. இழந்த உடல்நலத்தைச் சீர்செய்யும் பண்பு நலன் அல்லது மருந்து. ஆனால், ஒரு முறை இழந்த நேரம் இழக்கப்பட்டதுதான், எப்போதைக்குமாய்.
- வாழ்க்கை எளிதானதுதான் - நாம் வாழ்ந்து பார்க்கிறபோது! அது நோக்கம், நேர்மை, முயற்சி, மரியாதை மற்றும் கவனத்துடன் வாழப்பட வேண்டியது.

# பேச்சு மொழியும் இலக்கியமும்

'கேள்வி முயல்' என்றார் ஔவை மூதாட்டியார். வள்ளுவப் பெருந்தகையாரோ, 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை' என்றார். கவிச்சக்கரவர்த்தி கம்பரோ, 'செவி நுகர் கனிகள்' எனக் கூறுகிறார். எனவே நாம் கற்றறிவதைக் காட்டிலும் அனுபவங் களை உணர்ந்த அறிஞர்கள் கூறக்கேட்டு உணர்வதே சிறந்தது. 'கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு' என்பது பழமொழி. நாமே நம் அனுபவத்தால் அறிவதைவிட அனுபவமறிந்தோர் வழிகேட்டல் சிறந்தது. கற்க வேண்டியவை அதிகமாக இருப்பதால் அவற்றைக் கற்க நம் ஆயுட்காலம் போதாது. அதிகமான பொருட்செலவும் காலச் செலவும் இல்லாது இலக்கி யத்தை விளக்கத்துடன் பெற்றுக்கொள்ளப் பேச்சு மொழியே சிறந்ததாகும்.

> 'கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு' என்பது பழமொழி. நாமே நம் அனுபவத்தால் அறிவதைவிட அனுபவமறிந்தோர் வழிகேட்டல் சிறந்தது. கற்க வேண்டியவை அதிகமாக இருப்பதால் அவற்றைக் கற்க நம் ஆயுட்காலம் போதாது. அதிகமான பொருட்செலவும் காலச் செலவும் இல்லாது இலக்கியத்தை விளக்கத் துடன் பெற்றுக்கொள்ளப் பேச்சுமொழியே சிறந்ததாகும்.

உள்ளத்து உணர்வுகளைப் பிரதிபலிக்கக் கூடியது பேச்சுமொழியே. சங்க காலந்தொட்டே புலமைப்போர், தமிழ்ப்போர், சொற்போர் நிகழ்த்தப்பட்ட வரலாறுகளை நாம் அறிகிறோம். சிவனுடன் வாதிட்ட செந்தமிழ்ப்புலவரான நக்கீரர் 'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என்று எதிர்வாதம் புரிய உதவியது பேச்சுமொழியே.

நாயன்மார்களும், ஆழ்வார்களும், ஞானிகளும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தக் கையாண்ட கருவியும் இதுதான். பசுமரத்தாணி போல் பேச்சுமொழியின் மூலமே மொழிப் பற்றை வளர்க்க முடியும். சிறந்த நூல்களைப் படித்து அவற்றின் பொருள் உணர்பவர் சிலரே. இராமாயணம், சிலப்பதிகாரம், கந்தபுராணம் முதலிய நூல்களைப் பற்றிச் சொற்பொழிவாற்றும் இடங்களுக்குத் திரண்டு செல்பவர் பலர். பாமரரும் நிறைந்த அறிவைப் பெற வளர்க்க பேச்சு மொழியே சிறந்தது.

மறைமலை அடிகள், திரு. வி. க. பேரறிஞர்அண்ணா, பாரதியார், பாரதிதாசன் போன்றவர்கள் பேச்சின் மூலமாகத்தானே தமிழரிடையே எழுச்சியைத் தோற்றுவித்துத் தமிழ்ப்பற்றை உண்டாக்கினார்கள்? அதனாலேதான் தமிழ் வளர்ந்தது, வளர்ந்து வருகின்றது.

நா நயம்பட நல்லன எல்லாம் நயம்பட நாடுகள் எல்லாம் நயம் பெற "நல்லாரைக் காண்பதும் நன்றே நல்லார் சொல் கேட்பதும் நன்றே" எனக் கூறுகின்றார் பாட்டி. வாதவூரடிகள் திருப்பெருந்துறை சென்றபோது, அவருக்கு சிவபெருமானே குருவாக வந்து ஞான உபதேசம் செய்தருள அதனை அடிகள் கேட்டறிந்த வரலாற்றினை நாம் அறிகிறோம்.

இயேசு கிறிஸ்து 'ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறுகன்னத்தையும் காட்டு" என்கிறார். கௌதமபுத்தர் 'உலகத் துன்பங்களை எல்லாம் மீட்டெடு அன்பால்' என்று உபதேசம் செய்கிறார். முஹமது நபிகள் நாயகம், 'நேர்வழியில் நட' என்று அறிவுரை பகிர்கிறார். கல்லையும் கரைய வைக்கும் திருவாசகம் மூலம் தனது உணர்ச்சிகளை உருக்கிப் பாடுகிறார் மாணிக்கவாசகர்.

உள்ளமாகிய பூ மலர்ந்தால் அவற்றை நமக்கு வெளிப்படுத்திக் காட்டுவன கைகளும், கண்களும். பேச்சினால் எண்ணம் நிறைவேறும். 'சிறுதுளி பெருவெள்ளம்'. எனவே பேச்சு மொழியானது மழைத்துளி போல வந்து நிரம்பி இலக்கியத்தை வளப்படுத்தும்.

மலர் தோறும் சென்று தேனெடுக்கும் வண்டினைப் போல் பல் வகை இலக்கியங்களையும் கேள்வி வாயிலாகப் பெறுதல் வேண்டும். இதனாலேயே இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழையும் நுகர முயல்கிறோம்.

எனவே பகுத்தறிவுள்ள மானிடப் பிறவிகளாகிய நாம் உவகையும் ஊக்கமும் அளிக்க வல்ல இலக்கியக் கருவூலங்களைக் கண்டு, கேட்டு, வாசித்துப் பயன்பெறுவோம்.

**ஆக்கம் :- க. பகீரதன்**
**தரம் - 10D**
**யா/ மத்திய கல்லூரி**



# மூன்று பிரான்ஸியக் கவிதைகளின் மொழிபெயர்ப்பு

## சிறிய பறவை



"இரண்டும் இரண்டும் நான்காகும்
நான்கும் நான்கும் எட்டாகும்.
எட்டுடன் எட்டைக் கூட்டினால்
வருவது பதின் ஆறாகும்"
ஆரம்பப் பிரிவின் ஆசிரியை
கற்பித்தலினைத் தொடர்கின்றார்.

ஆனால் வானில் ஒரு பறவை
அழகாய்க் கடந்து செல்கிறது
குழந்தை அதையே பார்க்கிறது
பறவையின் அழைப்பைக் கேட்கிறது.
"உன்னுடன் எனக்கு விளையாட
ஆசை யாக இருக்கிறதே
கீழே இறங்கி வந்திடுவாய்"
சிறிய குழந்தை கேட்கிறது.

"இரண்டும் இரண்டும் நான்காகும்
எங்கே திருப்பிச் சொல்லுங்கள்"
ஆசிரி யையினைப் பார்க்காமல்
குழந்தையின் கவனம் பறவையிலே.

"நான்கும் நான்கும் எட்டாகும்
எட்டும் எட்டும் பதினாறு
பதினா றுடனே பதினாறு?"
"வருவது ஒன்றும் கிடையாது
முப்பத்தி ரண்டும் ஆகாது"

மேசையின் கீழே குருவி வரக்
குருவியின் பாடல் கேட்கிறது
சிறிய பிள்ளைகள் அதன் பாட்டைக்
கேட்டு மகிழ்ந்து இருக்கின்றார்.

"எட்டும் எட்டும் எத்தனையாம்?
இதுவே உமக்காம் வினாவாகும்
நாலுடன் நாலு எத்தனையாம்
இரண்டுடன் இரண்டு எத்தனையாம்
என்றே ஆசிரியை கேட்டார்.
ஒன்றுடன் ஒன்று ஒன்றுமில்லை
ஒன்றுடன் ஒன்று சமமுமில்லை
என்று மாணவன் பதிலளித்தான்.

பறவை பறந்து விளையாட
பிள்ளைகள் பாடலைப் பாடினரே
ரீச்சர் உரத்துக் கத்துகிறார்.

"உங்கள் குழப்பம் முடிந்ததுவே
விடையை இப்போ கூறுங்கள்"

பறவையின் இசைக்கேற்ப
பொருள்களெலாம் அசைகின்றன
கண்ணாடி பழையபடி
மண்ணாக மாறுதுபார்
மையதுவோ முன் போல
நீராக மாறுகுதே
சிறிய மேசை முன்போல
மரமாக மாறுது காண்
வெண்கட்டி அது முன்போல்
தூளாக மாறிவர
பறவையதும் பிரிந்து நின்று
சிறிதாக மாறியதே.
(நாட்டார் பாடல் வகையைச் சேர்ந்தது.)

## காலை உணவு

அவனோ கோப்பி தயாரித்தான்
கோப்பை எடுத்துப் பால் ஊற்றி
கோப்பையுள் கோப்பி தனை ஊற்றி
சீனி போட்டான் கோப்பிக்குள்
சிறிய கரண்டி யாற்கலக்கி
பாற்கோப் பியினை அவன் குடித்தான்
தொடர்ந்து தொடர்ந்து குடித்திட்டான்
என்னுடன் எதுவும் கதைக்காமல்!



சிகரட் ஒன்றைப் பற்றவைத்தான்
கூட்டமாகப் புகை மிதக்க
சிகரட் தூளை "ஆஷ்ரேயில்"
மெல்லத் தட்டிக் குவித்துவைத்தான்
என்னுடன் எதுவும் கதைக்காமல்
என்னை ஏதும் கேட்காமல்

மெல்ல எழுந்தான் தலையினிலே
தொப்பி கவிழ்த்தான். மழை வெளியே!
மழைக்காம் கவசம் அதை அணிந்தான்
வெளியே செல்லப் புறப்பட்டான்
மழைவிடக் கீழே காத்துநின்றான்
என்னுடன் எதுவும் கதைக்காமல்
என்னை ஏனோ பார்க்காமல்

கையை எடுத்தேன் தலையினையே
பொத்திப் பிடித்தேன் தாங்காமல்
விரக்தி அழவே தொடங்கிவிட்டேன்.
மூலம் : **Jacques Prevert** (ஜக் பிரேவர்)

## என் அன்பே உனக்காக

சிறிய பறவை வாங்கிடவே
நான் அங்கு சென்றிருந்தேன்
என் அன்பே உனக்காக

அழகுப் பூ வாங்கிடவே
நான் அங்கு சென்றிருந்தேன்
என் அன்பே உனக்காக

பெரும்பார இரும்பிற் செய்
சங்கிலி வாங்கச் சென்றேன்
என் அன்பே உனக்காக

இறுதியில் உனைத்தேடி
அடிமை விற்கும் சந்தை சென்றேன்
அன்பே நீ அங்குமில்லை.

மூலம் : **Jacques Prevert (ஜக் பிறேவர்)**
தமிழாக்கம் : தமிழ் வண்ணன்

## குருவிக் குஞ்சு பறக்குது

ஊர் இழந்து உறவிழந்து
தேரதொன்று போகுது
ஊமையான வாழ்வு மட்டும்
ஊர்ந்து ஊர்ந்து போகுது
சோர்ந்து போன சொந்தங்களும்
தேருடனே போகுது
வேர் இழந்த ஆலமரம்
வேண்டுமென்றா சாயுது
வேதனைகள் தந்த வலி
ஆணி வேரை அசைக்கவே
குருவி கட்டும் கூடு போல
அவர்கள் கூடு ஆகுது
இனிமையான வாழ்வைத் தேடி
குருவியொன்று பறக்குது
ஒன்றும் புரியா சின்னக் குஞ்சும்
தானும் சேர்ந்து பறக்குது.





கொட்டடி
சி. சிறீதரன்

## தமிழருவி சஞ்சிகையால் நடத்தப்பட்ட பாடசாலை மாணவரிடையேயான கவிதை, கட்டுரைப் போட்டி முடிவுகள் (02)

**கவிதைப் போட்டி**

- 1ஆம் பரிசு 500/-
  விமலாம்பிகைபாகன் திவாகரன்
  யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி
- 2ஆம் பரிசு 300/-
  கு. தயாளினி
  யா/ இணுவில் மத்திய கல்லூரி
- 3ஆம் பரிசு 200/-
  கேசிதா தனஞ்சயன்
  யா/ உடுவில் மகளிர் கல்லூரி

**கட்டுரைப் போட்டி**

- 1ஆம் பரிசு 500/-
  த. துளசிகா
  யா/ இணுவில் மத்திய கல்லூரி
- 2ஆம் பரிசு 300/-
  செல்வி. கி. தேனுகா
  யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி
- 3ஆம் பரிசு 200/-
  கணேசன் கஜனா
  யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி

பரிசில் பெற்ற மாணவர்களைத் தமிழருவி வாழ்த்துகின்றது. பரிசில்கள் விரைவில் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

## பொன்மொழிகள்

- **இன்று செய்யக்கூடியதை நாளை செய்வோம் என்று தள்ளி வைக்காதீர்கள்.**
- **உங்களால் ஆகக்கூடிய காரியத்தை ஒருபோதும் அடுத்தவர் தலையில் கட்ட முனையாதீர்கள்.**
- **உங்கள் உழைப்பின் மூலம் பணத்தை உருவாக்கும் முன்பே செலவிட்டு விடாதீர்கள்.**
- **மலிவாக இருக்கிறது என்பதற்காகக் கண்டதையும் வாங்கிக் குவித்துவிடாதீர்கள்.**

# பயணங்கள் முடிவதில்லை

அது, குறித்த ஒரு பற்பசைக்கான தொலைக்காட்சி விளம்பரம். பற்களின் நலத்திற்கும், வெண்மைக்கும், அழகிற்கும் அதனைப் பயன்படுத்துமாறு கூறுகிறார்கள். பரவாயில்லை. விளம்பரம் விற்பனைக்கு அவசியம்தானே. இப்பற்பசை விளம்பரத்துக்கு வருபவர் ஒரு வைத்தியர். அவர் கூறும் வார்த்தை, "எனக்கும் சூடானதைக் குளிர்ச்சியானதால பற்களில் வலி ஏற்பட்டது. அப்புறம் எனக்குக் கிடைச்சது....." எனத் தொடர்கிறது விளம்பரம். இங்கே பேச்சு வழக்குச் சொற்கள் என்பதை நான் கருத்தில் கொள்ளவில்லை. விளம்பரத்துக்கு பேச்சு வழக்கு இயல்பே. இலக்கணத்தைத் தான் கருதுகிறேன்.



"சூடானதை, குளிர்ச்சியானதால......" என்பது கருத்துக்குப் பொருத்தமானதாக வருகிறதா? கூறவந்த விடயம், சூடான உணவுகள், குளிர்ச்சியான உணவுகளால் பற்களில் வலி ஏற்படுகின்றது என்பதே. ஆனால் வாக்கியத்தில் தவறு இருக்கிறதே. "சூடான, குளிர்ச்சியான...." என வரலாம். இன்னும் சரியான முறையில் வாக்கியத்தை இலக்கண, பொருட் பிழையின்றி அமைக்கலாம். அவ்வாறிருக்க, "சூடானதை, குளிர்ச்சியானதால்......." என்பது எவ்வகையிலும் பொருந்துவதாய்த் தெரியவில்லை.

என்ன செய்ய? அடியேனின் கண்களுக்கும், காதுகளுக்கும் தமிழில் விடப்படுகின்ற சிறு பிழைகள் கூட பூதாகரமாய்த் தெரிகின்றனவே. தெரிவது மட்டுமல்ல. கனவிலும் வந்து பயமூட்டிச் செல்கின்றன.

இந்தக் கட்டுரைத் தொடரைத் தயக்கமின்றிப் பிரசுரித்து விடும் "தமிழருவி" சஞ்சிகை. அந்த அருவி கூட சிறு சலனத்துக்குட்பட்டு விட்டதே. மனம் வருந்துகிறது. ஆனாலும் கூற வேண்டியது கடப்பாடு. கூறாது விடின், அதுவே பெருந்தவறு. தமிழருவி மலை – 1, அருவி – 3இல் மூன்றாவது அருவியின் அட்டைப்படம். அதில் விடய உள்ளடக்கம் போடப்பட்டிருந்தது. "செவ்வியல் தமிழ்லக்கியத்தில் பெண்மை". "தமிழிலக்கியமா? தமிழ் இலக்கியமா? சொற்புணர்ச்சியுடனா? சொற்புணர்ச்சி இன்றியா? இரு வகையிலும் அமையவில்லை.

பேருந்து விரைகிறது. சிந்தனைகளும் தொடர்கின்றன.

23.05.2011 திகதிய பத்திரிகை ஒன்றில் ஒரு செய்தி. "பொதுமக்களின் தகவல்களுக்கினங்க....." இணங்க என்ற சொல்லின் "ண" விற்குப் பதில் "ன" போடப் பட்டிருக்கிறது. அதே நாளின் இன்னும் சில செய்திகள். "இராணுவத்தைத் தம் மத்தியிலிருந்து வாபஸ் பெறப்பட வேண்டும்......" எனத் தொடரும் செய்தி. பெற வேண்டுமா? பெறப்பட வேண்டுமா? "நேர்மையான சிந்தனையும், மனோநிலையையும் மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம்..", "சிந்தனையையும், மனோநிலையையும்" என்றுதானே வாக்கியம் சரியான முறையில் அமைக்கப்பட வேண்டும்? அன்றைய இன்னொரு செய்தி. சிறந்த தானம் என்ற தலைப்பிலான செய்தி. "பொ. செல்வரத்தினம் ஞாபகார்த்தமாகவும்" என்பதில் வரும் உம் இடைச்சொல்லின் பொருள் தான் என்ன? இந்த வாக்கியத்திற்கு "ஞாபகார்த்தமாக" என்பதே போதும். "உம்" இடைச் சொல்லுடன் இன்னொரு சொல் வந்தாலே இவ் வாக்கியம் ஞாபகார்த்தமாகவும் எனத் தொடரும். 23.05.2011 இன்னொரு பத்திரிகை. இராசிபலன் பகுதி. மீன இராசிக்கான பலன் "சுற்றுப்பயனம்....", "மேலும் வளர்ச்சி கான...." என்ற சொற்கள் இச் சொற்களில், "ணகரம்" வரவேண்டிய இடங்களில், "நகரம்" வந்துள்ளது. இவை தவறுதலாகக் கூட ஏற்பட்டிருக்கலாம். அச்சுத் தவறுகளும் இடம்பெற்றிருக்கலாம். ஆயின், பத்திரிகை வெளிவருவதன் முன்னர் சரிபார்க்க வேண்டுமல்லவா? ஏனெனில், இவை பலரின் பார்வைக்கும்

உட்படுவனவன்றோ! மொழியைச் சரியாகப் பயன்படுத்தவேண்டியது நம் அனைவரினதும் கடமையன்றோ.

மொழி என்பது எண்ணங்களின் ஊர்தி எனச் சொல்லப்படுகின்றது. மொழி அடிப்படையில் இனங்கள் அடையாளங் காணப் படுகின்றன. மொழி ஓர் இனத்தின் விழி. மற்றையோர் எவ்வகையான மயக்கமோ, திரிபோ, குழப்பமோ இன்றிச் சரியாக விளங்கிக் கொள்ளும்படி ஒருவர் தன் எண்ணங்களை வாய்மொழியாக, எழுத்து மூலமாகத் தெளிவாக வெளியிடும் ஆற்றல் மொழியாற்றல் எனலாம். மனிதருடைய முழுமையான வளர்ச்சிக்கு, உறுதுணையான கல்வியை முழுமையாகப் பெறுவதற்கு மொழியாற்றல் இன்றியமையாதது. குழந்தைக்குத் தாய்ப்பாலைப் போல் ஒருவருடைய கல்விக்கு அவருடைய தாய்மொழியே இயல்பானது, இலகுவானது, எதிர்பார்க்கும் இலக்கினை எட்டவைக்க வல்லது. அந்தத் தாய்மொழியிலேயே தவறுகள் அமைந்து விட்டால்......... அனுமதித்து விட்டால்..........

> **மொழி என்பது எண்ணங்களின் ஊர்தி எனச் சொல்லப்படுகின்றது. மொழி அடிப்படையில் இனங்கள் அடையாளங் காணப்படுகின்றன. மொழி ஓர் இனத்தின் விழி. மற்றையோர் எவ்வகையான மயக்கமோ, திரிபோ, குழப்பமோ இன்றிச் சரியாக விளங்கிக் கொள்ளும்படி ஒருவர் தன் எண்ணங்களை வாய்மொழியாக, எழுத்து மூலமாகத் தெளிவாக வெளியிடும் ஆற்றல் மொழியாற்றல்**

"தம்பி...... தம்பி......... இறங்கிற இடம் வரப்போகுது மிச்சக் காசைத் தாப்பா" தள்ளாத வயதிலும் பேருந்தில் பயணம் செய்த அந்தத் தாத்தாவின், வார்த்தைகள் உரியவரைச் சென்றடைந்தனவோ தெரியவில்லை. ஆனால் என் செவிப்பறைகளைத் தொட்டு, என் மொழி பற்றிய சிந்தனைகளுக்குத் தற்காலிக முற்று வைத்தன. என் சிந்தனைகளைச் சற்றுப் பின்தள்ளி, பேருந்தின் சூழலுக்குள் என்னை ஐக்கியமாக்க முனைந்தேன். ஐக்கியப்பட மறுத்துப் பிடிவாதம் பிடித்த என் சிந்தனைக் குதிரை மீண்டும் மொழிப் பக்கமே தாவிப் பாய்ந்தது. அங்கே..........

பயணங்கள் தொடரும்.....

**கைதடியூர் பாரதி**



தமிழ்த்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் நாட்டிய நாடகப் போட்டியில் முதலிடம் பெற்ற இணுவில் மத்தியகல்லூரியின் நாட்டிய நாடகக் குழுவினருடன் அதிபர், ஆசிரியர்கள்.

# மருந்தில்லா மருத்துவம்

இப்போது எமது சமூகமும், உலகும் எதிர்நோக்கும் பிரச்சினை நோய்கள் அதிகரிப்பு. அதுவும் இருக்கும் நோய்களைக் குணப்படுத்த முடியாமலும் புதிதாக வரும் நோய்களைக் கட்டுப்படுத்த முடியாமலும் திணறிப் போய்க் கொண்டிருக்கிறது மருத்துவ உலகம். நாம் ஆனந்தத்தைத் தெருவில் தேடிக் கொண்டி ருக்கிறோம். ஒவ்வொருத்தரும் சரியான முறையில் வாழ்க்கைக்குத் தேவையான நல்லவற்றை எடுத்துக் கொண்டால் தனிமனித உடலும், உள்ளமும் திருப்பப்பட்டு நாங்கள் எங்களுக்குள் சுதந்திர தன்மையை உணர்ந்து உலக ஒட்டுமொத்த சுதந்திரத்துக்கான பாதை நோக்கி போய் கொண்டிருக்கும் வேளையில்,

நோய்கள் எப்படி வருகின்றன? என்ன பாதிப்பை ஏற்படுத்துகின்றன? அவற்றிற்குக் கொடுக்கும் மருந்துகள் எங்களுக்கு என்ன விளைவுகளைக் கொடுத்தன? என்று ஆராய்ந்தால் கேள்விக் குறிதான். நோய்க்குக் கொடுக்கும் மருந்துகளே புதிய நோய்களை உருவாக்கிப் போயின. எனவே எல்லாவற்றிலும் இருந்து எப்படி ஆரோக்கியமான வாழ்வை வாழ்வது என்பது தான் எமது நோக்கமாக இருக்கின்றது.

இந்த உடலை பற்றி சற்று ஆராய்ந்தோம் ஆனால் ஐந்து கருத்துக்களாக இருக்கின்றன.

1) சிற்றறைகள் அடுக்கப்பட்ட பருஉடல்
2) அதற்கு ஊடே ஓடிக்கொண்டிருக்கு நீர் - இரத்தம்
3) நரம்பு ஊடாக உடலின் மின்சார சக்தி வெப்பமாகி, அந்த வெப்பம் உடல் முழுவதும் இன்ன அளவு சூடு என்று, (98.6°F) அப்போதுதான் இரசாயன ஓட்டம் சரியாக இருக்கும்.
4) காற்று :- இயங்கும் உடலில் கரியமில வாயுவை வெளியேற்ற, பிராணவாயுவை சேர்க்க காற்று தேவை
5) அதற்கு மேலேவின் :- இதனை உயிர் என்றும் சூக்கும உடல் என்றும் வழங்குகிறோம். இப்படியாக 5 அடுக்குகள் இயங்கி கொண்டிருக் கின்றன.

இந்த உயிருக்கும் உடலுக்கும் ஒத்த உறவு, இனிமையான உறவு இருக்கும் வரையில் தான் உடல், உள நலமும் பாதுகாக்க பெறும். இந்த உறவு நீடிப்பதற்கு இரத்தம், வெப்பம், காற்றோட்டம் இவை மூன்றும் சரியாக இருக்க வேண்டும். எனவே இந்த அளவு முறையிலே சரியான ஓட்டம் இருந்தால் உடலுக்கும் உயிருக்கும் தொடரியக்கம், நட்பு, உறவு சீராக இருக்கும். இந்த மூன்றில் ஒன்று குறைந்தாலும், திசை மாறினாலும் வெளியேறினாலும் குழப்பம் அடைந்தாலும் அந்த இடத்தில் அணு அடுக்கு சீர்குலைவு ஏற்படும். 3 ஓட்டத்தில் ஒன்றில் தடை வந்தால் மற்ற 2 ஓட்டத்திலும் தடையாகி விடும். அந்தக் குழப்பத்தை நீக்குவதற்கு அங்கே இருக்ககூடிய மின்சக்தி போதாது. அதனாலே அதிகமான மின்சக்தி சேர வேண்டியதாகி வருகிறது. அல்லது அங்கே சேரும் போது அங்கு துணையாகி விடுகிறது. அளவுக்கு மேலான காந்தசக்தி, மின்சக்தியாக மாறும்போது அந்த இடத்தில் மின் குறுக்கு உண்டாகும். அதுதான் வலி. இந்த மின் குறுக்கு சிறிது நேரம் இருந்தால் அது வலி என்றும், அது இடத்தாலே விரிந்தும் காலத்தாலே நீடித்தும் இருந்தால் நோய் அல்லது வியாதி என்றும் கூறப்படுகிறது. இந்தச் சீர்குலைவு அதிகமாக ஏற்பட்டு, உயிர்ச்சக்தி குறைந்து விடுமாயின் பெருமளவில் உடலியக்கம் தடைப்பட்டு அப்படியே நின்று விடுவதாலே மரணம் என்கிறோம். எனவே இந்த மூன்றையும் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். நாமாகச் செய்யக் கூடிய தவறான காரியங்களாலும், வெளித்தாக்கத் தாலும் இந்தக் குழப்பம் வரலாம். எனவே தடையைச் சரி செய்து ஈடுசெய்து கொள்ளக்கூடியபடி தாங்கும் சக்தியை அதாவது நோய் எதிர்ப்புச் சக்தியை நாம் கூட்டி வைத்திருந்தால் வியாதியைத் தடுக்கலாம்.

1) மிகுதியான உணவால் தீங்கு

இரத்த ஓட்டத்தில் குழப்பம் வரப் புளிப்பு முக்கிய காரணம் நாம் உண்ணும் உணவு செமியாமை அடைவதற்குப் புளிப்புத் தன்மையான அமிலம் சுரக்கிறது. (ஐதரோ குளோரிக் கமிலம்) நாம் அதிகமாக உண்டால் அதை ஜீரணிக்க செய்ய இன்னும் கூடுதலான அமிலம் சுரக்கும். ஆனால் உடலின் சிற்றறைகளுக்கு தேவையான அளவு போசாக்கை எடுத்து கொண்டு மிச்சத்தை விட்டு விடும். எனவே மீதம் உள்ள புளிப்பு இரத்தத்தில் வந்து சேர நாளடைவில் இரசாயன சத்தில் இருக்கும் புளிப்பு காற்றாக நரம்பிலே புகுந்துவிடும். நரம்பிலே காற்றுப் போகக்கூடாது. அதனால் கை, கால் விழுந்து போகிறது அல்லது சுரணை அற்றுப் போகிறது.

எனவே அளவான உணவு திருப்தியான மனநிலையைத் தரும்.

நமக்கு வரக்கூடிய உயிர் சக்தி தினந்தோறும் செலவாகிக் கொண்டும் வந்து கொண்டும் இருக்கிறது.

உணவு, காற்று, கோள் அலை, பூமியின் ஒருபகுதி அசையும் போது அதில் இருந்து தெறிக்கும் துளியின் பகுதி எனும் இந்த நான்கின் பகுதிகளில் இருந்து உடலின் சிற்றறைகள் தேவையான அளவை ஏற்றுக் கொள்ளும். இந்த நான்கிலும் ஒவ்வொரு விதமான நன்மை உண்டு. எனவே உணவை நிரப்பி வருவதால் இந்த மூன்றில் இருந்து வரும் நன்மைகளை பெறமுடியாது போய் விடுகிறது. அப்படி தடுப்பதால் கல்சியம், இரும்புச் சத்துக்கள் குறைவாக வரும் வாய்ப்பு உள்ளது எனவே உடலுக்கு உபயோகமான சத்துக்கள், இரசாயனங்கள் தேவை. குறைந்தால் நோய்கள் வரும்.

உணவு அதிகமாகவும், சத்துள்ளதாகவும் ஜீரணம் செய்து பழகிய உணவாகவும் இருக்க வேண்டும். அடுத்த முறை உணவு எடுக்கும் போது ஒரு மணி நேரம் முன்னதாகவே பசி இருக்க வேண்டும்.

ஒரு மணி நேரம் இரண்டு வேளை பசி இருந்தால் உணவில் இருந்து ஜீவ காந்தசக்தியை எடுக்க முடியவில்லை என்றால் உடல் தானாகவே காற்று, கோள்களின் அசைவு வீச்சில் இருந்து சக்தியை எடுத்துக் கொள்ளும். அப்போது தான் அறிவுக்கு விருந்தாகச் சிந்தனைக்கு ஏற்ற விருந்தாக நல்ல சக்தி நமக்குக் கிடைக்கும்.

**உழைப்பு, உறக்கம், உடலுறவு**

நல்ல உழைப்பு இருந்தால் தான் தேவையில்லாத அணுக்கள் தினந்தோறும் வெளியேறும். அப்போதுதான் உணவிலிருந்து எடுக்கக்கூடிய நல்ல அணுக்கள் சிற்றறை யைச் சேரும். உடலுக்கு போதியளவு உழைப்பும், உணவும், ஓய்வும் தேவை. இந்த ஓய்வு நேரத்திலே தான் மனிதன், செய்த நல்லதுகளை எல்லாம் சரி செய்யும் பணியில் இயற்கை ஈடுபடுகிறது. நாம் உறங்கும்போது தான் இயற்கையானது நமக்குள் இருக்கும் உபாதைகள் இடத்தைப் புதுப்பிக்கிறது.

உடலுறவு எல்லோருக்கும் இயற்கையான மற்றக் கழிவுகளைப் போல அதுவும் ஒரு கழிவு தான். இயற்கையாக வேகம் வரும்போது காலத்தாலே நீக்கிக் கொள்ள வேண்டியது தான். மிச்சத்தை கழிப்பதற்கு தான் உடலுறவு தேவையே தவிர இருக்கிற விந்து இருப்பில் குறைந்து விட்டால், அது உயிர்ச் சக்தியை குறைத்துவிடும். உடலிலே உயிரைத் தாங்கி நிற்கக்கூடிய மின்கலம் இந்த விந்து நாதம் தான். அது குறையக் குறைய உயிர் சக்தி குறையும். குறைந்தால் ஜீவகாந்த சக்தியும் குறையும். இதனால் சிற்றறைகள் குலைந்து விடும். குறிப்பிட்ட அளவு போக மீதியை உடலுறவில் கழிப்பது என்று வைத்துக் கொண்டால் பாதிப்பு வராது. உடல் உறவில் இன்பம் இருக்கிறது என்பதற்காக மேலும் மேலும் ஈடுபட விந்து இருப்பு குறைந்து நரம்பு தளர்ச்சியுறும். இன்பம் என்பதைவிட துன்பம் இல்லாது வாழ்வதே குறிக்கோள் எனும் விழிப்புணர்வுச் சிந்தனை இருந்தால் ஆனந்தத்தையே தரும்.

**எண்ணம்**

எண்ணம் எடுக்க கூடிய உருவம் தான் கற்பனை. நாம் நண்பனை நினைத்தால் இனிமையான உணர்வு வரும். ஒரு பகைவனை நினைத்தால் வெறுப்பு. விறு விறு என கோபம் வரும். இந்த இடத்தில் நம்முடைய உயிர்ச்சக்தி, காந்த சக்தி வாரி இறைக்கப்படும்.

உயர் சக்தி மாற்றத்தினால் அலைநீளம் அதிகமாகிற சக்தி வெளியேறுகிறது அப்படி பெரிய பயம் இருந்தால் மூக்கிலே, வாயிலே ரத்தம் வந்து செத்துவிட்டார் என்கிறோம். இது மிகுந்த மகிழ்ச்சியாலும் ஏற்படும்.

**ஆபத்தில்லாத முறைகள்**

வெறுப்பு, அச்சம் எல்லாம் விட்டு கவலை, சினம், கடுஞ்சொல் தவிர்த்துக் கொண்டால் எண்ணம் அமைதியாக இருக்கும். இதனால் ஜீவகாந்த சக்தி சேமிக்கப்படும் முறையான வழியால் செலவாகும். உணவு, உறக்கம், உழைப்பு, உடல் உறவு, எண்ணம் இந்த ஐந்தையும் அலட்சியப்படுத்தக் கூடாது இந்த 3 விதியையும் கடைப்பிடித்தால் நோயைத் தடுப்பதற்கு வேறு மருந்தில்லை.

**இணுவில் யோகாநி**

# பொறுமை – அர்ப்பணிப்பு – நேர்மை – முன்னேற்றத்தின் படிக்கற்கள்

செவ்வி கண்டவர் : தமிழ்வண்ணன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கலாபூஷணம் சுப்பிரமணியம் பாஸ்கரன் ஆச்சாரி. பாரம்பரியமான சிற்பக் கலைக் குடும்பத்திற் பிறந்த இவர் சிறுவயதிலிருந்தே வாழ்வாதாரத் தொழிலாகவும் கலை ஆர்வத்தை வெளிப்படுத்தும் தொழிலாகவும் சிற்பத் தொழிலை மேற்கொண்டு வருபவர். இன்று இவரது மகன் கஜேந்திரனும் இலங்கை அரசால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுப் பயிற்சி வழங்கப்பட்ட நிலையில் தந்தையுடன் இணைந்து தொழில் புரிகின்றர். செம்பு, பித்தளை உலோகங்களைக் கொண்டு இந்து சமயக் கடவுள் சிலைகள், பொருள்கள், யந்திரத் தகடுகள் செய்தல், கிரனைட் கல்லில் வேலைப்பாடுகள் செய்தல் எனப் பலதுறைகளிலே தன்னிகரற்று விளங்கும் பாஸ்கரன் ஆச்சாரி அவர்களுடனான செவ்வி தமிழருவி வாசகர்களுக்காக இங்கே தரப்படுகின்றது.

கேள்வி: சிற்பத் தொழிலில் உங்களுக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?

பதில் : எனது பரம்பரைத் தொழிலே சிற்பத் தொழில்தான். அப்பாவிடமிருந்து சிறுவயதிலேயே சிற்பத்துறை நுட்பங்களைக் கற்றுக்கொண்டேன். காலையிலே அவர் செய்த சிற்பங்களுக்கு மூலாம் பூசாமல் பாடசாலைக்குப் போகவிடமாட்டார். 1964இலே பாடசாலைக் கல்வியை விட்டபிறகு முழுமையாகச் சிற்பத் தொழிலில் இறங்கினேன். அப்பா இருந்தபோது சிரட்டைக்கரி, மெழுகு, அரம் என்பவற்றின் உதவியுடன் கைவேலையாக நடந்துவந்த தொழிலை நான் இயந்திரங்கள் மூலம் செய்யும் நிலைக்கு வளர்த்தெடுத்துள்ளேன்.

கேள்வி: இதுவரை எத்தனை சிற்பங்கள் செய்து முடித்திருப்பீர்கள்?

பதில் : அவை ஆயிரக்கணக்கில் இருக்கும். வட்டக்கச்சி ரங்கநாதப் பெருமாள்கோவில், ஏழாலை களபாவோடை நாகபூஷணி அம்மன் கோயில் என்பவற்றின் முழுவேலைகளும் நான் செய்தவை. மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பெரும்பாலான வேலைகள் நான் செய்தவையே. அண்மையில் யாழ். வந்த ஜனாதிபதிக்குக் கொடுத்த 3 விருதுகளும் நான் செய்தவையே.

கேள்வி: ஒரு சிற்பம் செய்யும் போது எத்தகைய படிமுறைகளைக் கையாள்வீர்கள்?

பதில் : சிற்பம் செய்ய வருபவர்கள் செய்ய வேண்டிய அளவைத் தருவார்கள். நாம் தேன் மெழுகைப் பிசைந்து அந்த உருவத்தைச் செய்வோம். அடுத்து அந்த உருவத்தைக் களிமண்ணினால் மூடுவோம். இது கருக்கட்டுதல் எனப்படும். இப்போது களிமண் தேன்மெழுகில் செய்த உருவத்துக்கு அச்சாக இருக்கும். இந்நிலையில் சிறிய துவாரத்தின் மூலம் உள்ளே இருக்கும் மெழுகை உருக்கி எடுப்போம். எஞ்சி இருக்கும் களிமண் அச்சினுள் உலோகத்தை உருக்கி வார்க்கச் சிற்பம் உருவாகும். இவற்றை ஏனைய தொழிலாளர்களும் செய்வார்கள். சிற்பத்தின் முகம் செதுக்குவதை மட்டும் நான் அல்லது மகன் செய்வோம்.

கேள்வி: சிற்பக் கலைத்துறையில் பலர் ஈடுபட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் நீங்கள் மட்டும்



பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இந்தியத் தூதருக்கு சிற்பக்கலைத் திறனை விளக்குகின்றார்.



விருது வென்ற சரபேஸ்வரர் சிற்பம்

முக்கியத்துவம் பெற்றிருக்கக் காரணங்கள் எவை?

பதில் : எமது கலைத்திறன்தான் அதற்குக் காரணம். அதாவது தரப்பட்ட உருவத்தை அழகாகவும், நேர்த்தியாகவும் சிறப்பாகவும் செய்து கொடுக்கின்றோம். முடிந்தவரை சொன்ன திகதிக்கு முன்னரே செய்து கொடுத்துவிடுவோம். இதுவும் என்னை நாடிவரக் காரணமாகும்.

கேள்வி: சிற்பக் கலையின் முக்கியத்துவம் பற்றியும், கிடைக்கின்ற வருமானம் பற்றியும் கூறுங்கள்.

பதில் : முக்கியத்துவம் பற்றிச் சொல்வதென்றால் சாதாரண கல்லு இருக்கிறது. அதை வணங்கமுடியாது. எமது கலை நுட்பத்தைப் பயன்படுத்திக் கடவுள் சிலையாக மாற்றும் போது அது வணக்கத்துக்குரியதாகின்றது. இம்மாற்றத்தைச் செய்தது சிற்பக் கலை தான்.

இத்துறை பெரும்பணத்தை வருமானமாகத் தரக்கூடிய துறை. பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வருமானம் பெறலாம். உதாரணமாகக் கோயில்களில் மூலவிக்கிரகத்துக்குக் கீழ் வைக்கும் மந்திரத்தகடு எழுத 20 நிமிடங்கள் போதும். ஆனால் அதற்குப் பல ஆயிரம் ரூபாய்கள் கிடைக்கும். அது போலக் கோயில் கட்டுவதற்கான அளவு கொடுப்பதற்கு மூலதனமாக அளவு நாடா மட்டுமே போதுமானது. அதற்கான வருமானமோ பல பத்தாயிரங்களாக அமையும். இவற்றிலிருந்து இத்துறையின் வருமானத்தை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

கேள்வி: இத்துறையில் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவை?

பதில் : சிற்ப வேலை செய்வதற்கான உலோகங்களைப் பெற்றுக் கொள்வது கடினமாக உள்ளது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் கொண்டு வரப்பட்ட உலோகங்களே இங்கு அதிகம் இருந்து நாங்கள் பயன்படுத்தினோம். இப்போது இவை தென்னிலங்கைக்குக் கடத்தப் படுவதால் பெறமுடியாதுள்ளது. எல்லாக் கலைகளுள்ளும் சிற்பக்கலை கடினமானது. இதைப் பழகியவர்களும் இல்லை. பழக வருபவர்களும் இல்லை. ஒரே இடத்தில் மணிக்கணக்கில் இருந்து தொழில் செய்யும் பொறுமையும் அவசியம். இத்தகைய அர்ப்பணிப்புடன் தொழில் செய்யக் கூடியவர்கள் கிடைக்காததும் முக்கிய பிரச்சினை ஆகும்.

கேள்வி: சிற்பத்தொழில் பழக விரும்பும் இளைஞருக்கு நீங்கள் கூறவிரும்பும் செய்தி என்ன?

பதில் : இத்தொழிலைப் பழகினால் நன்றாக உழைக்க முடியும். மதிப்பு மரியாதையுடன் வாழலாம். விடயங்களைப் படிப்படியாகத்தான் கற்றுக்கொள்ள முடியும். எனவே பொறுமை அவசியம். அர்ப்பணிப்புடனான சிந்தனையும் தொழில் நேர்மையும் இருந்தால் இத்தொழிலில் முன்னேறமுடியும்.

கேள்வி: இத்துறையில் நீங்கள் பெற்ற பட்டங்கள் விருதுகள் பற்றிக் கூறுங்கள்?

பதில் : 2010இல் எனக்குக் கலாபூஷணம் என்ற பட்டம் கிடைத்தது. கலைஞானச் சுடர், சிற்பக் கலைஞான பானு, சிற்பக்கலா வித்துவமணி, கலாஜோதி, சிற்பக் கலா வேந்தன், சிற்பக் கலாவித்தியா சாகரன் முதலிய பல பட்டங்கள் பல்வேறு நிறுவனங்களாலும் தரப்பட்டுள்ளன. 2010இல் பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் தேசிய அருங்கலைகள் கலையகத்தில் நடைபெற்ற இலங்கை - இந்தியக் கைவினைப் பொருட்கள் கண்காட்சியில், நான் செய்த சரவ பட்சிக்கு 2ஆம் பரிசு கிடைத்தது. இறைவன், இரணியனைக் கொன்ற நரசிங்கத்தின் கோபத்தைத் தணிக்கச் சரவ பட்சி வடிவில் வந்ததே சரபேஸ்வரர் விக்கிரகம் ஆகும். அப்போது இந்தியத்தூதர்

போரின் மத்தியிலும் யாழ்ப்பாணத்தில் இத்தகைய கலைவளர்ச்சி இடம்பெற்றதா என மனம் திறந்து பாராட்டினார். இந்த ஆண்டில் சுதந்திரதினத்தை ஒட்டி அம்பாந்தோட்டையில் நடைபெற்ற கண்காட்சியில் ஜனாதிபதி அவர்கள் எனது நந்தி விக்கிரகத்தை விரும்பி வாங்கிச் சென்றார். 5 முறை எனக்கு ஜனாதிபதி விருது கிடைத்துள்ளது. இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளான சிங்கப்பூர், மலேசியா, கனடா, ஜேர்மனி, லண்டன் முதலிய இடங்களிலும் எனது சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.



கேள்வி: உங்களது எதிர்கால இலட்சியம் என்ன?

பதில் : இத்தொழிலை வேகமாகவும் சிறப்பாகவும் செய்ய வேண்டும். இந்தியாவில் சுவாமிமலையில் செய்வதுபோல் புகழ்பெற்ற சிற்பங்களைச் செய்ய வேண்டும் என்பதே எனது எதிர்கால இலட்சியம் ஆகும்.

---

# இல்லை இனித் துன்பங்கள்

இங்கிதமாய் வாழ்ந்தும் எமக்கு இல்லை இன்பங்கள்
டெங்கு என்னும் நோயாலே அளப்பரிய துன்பங்கள்
எங்கெல்லாம் கேட்கிறதே மரண ஓலங்கள்
உங்களுக்கும் வந்திடாமல் காத்து கொள்ளுங்கள்.

அங்கங்கே பள்ளங்களில் நீரைப் பாருங்கள்
அங்கெல்லாம் நுளம்பு வரும் தெரிந்து கொள்ளுங்கள்
தேங்கி நிற்கும் நீரை எல்லாம் ஓடவிடுங்கள்
உங்களுக்கும் பாதுகாப்பு உணர்ந்து கொள்ளுங்கள்.

ஓங்கி நிற்கும் பொந்தினிலே நீரைப் பாருங்கள்
அருகில் உள்ள மண்ணை அள்ளிப் பொந்தில் நிரப்புங்கள்
ஆங்காங்கே கிடக்கிறதே குப்பை கூழங்கள்
அதையெல்லாம் குழிதோண்டிப் புதைத்து விடுங்கள்.



தேவையற்ற பாத்திரத்தில் நுளம்புக் கூட்டங்கள்
கோம்பையிலும் சிரட்டையிலும் நுளம்புக்குடம்பிகள்
அனைத்தையுமே அழித்திடவே உறுதிகொள்ளுங்கள்
அடியோடு அழிந்திடுமே நுளம்புப் பெருக்கங்கள்.

ஈயினாலே வந்திடுமே பெரிய தாக்கங்கள்
நோய்தனையே உண்டாக்கும் தீய கிருமிகள்
வாய்வழியே சென்றிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்
நோய் எம்மை அணுகாது காத்துக் கொள்ளுங்கள்.



உணவுதனை எப்போதும் மூடிவையுங்கள்
உண்ணுமுன் கைதனையே கழுவிக்கொள்ளுங்கள்
கொதிநீரை ஆறவைத்துத் தினமும் குடியுங்கள்
கொல்லையிலே மலம்தனையே வெட்டிப் புதையுங்கள்.

வீதியோரம் விற்கப்படும் உணவுப் பண்டங்கள்
வியாதிகளைக் கொண்டுவரும் தவிர்த்துக் கொள்ளுங்கள்
வாந்திபேதி வந்திடாது காத்துக் கொள்ளுங்கள்
வருமுன்னே காக்கவேணும் புரிந்து கொள்ளுங்கள்.

நாளைவரை காத்திடாமல் செய்துமுடியுங்கள்
நாளைவரும் மரணத்தையே விரட்டி அடியுங்கள்
இன்னொருவர் தயவினிலே குளிர் காயாதீர்கள்
இப்பொழுதே செயலாற்றத் தொடங்கிவிடுங்கள்.

அயலவரை உதவிக்கு சேர்த்துக் கொள்ளுங்கள்
அக்கம் பக்கம் துப்பரவாய் வைத்து கொள்ளுங்கள்
அழிக்கவரும் நோய்தனையே அடித்து விரட்டுங்கள்
அனைவருமே ஆனந்தமாய் வாழப் பாருங்கள்.

சுகாதாரப் பகுதியினர் சொல்லைக் கேளுங்கள்
சுணங்காது சொன்னவற்றை செயலிற் காட்டுங்கள்
நோய் எதுவும் வந்திடாது காத்து கொள்ளுங்கள்
இங்கிதமாய் வாழ்ந்திடலாம். இல்லை இனித் துன்பங்கள்.



(இளைஞர்களுக்கான விருது வழங்கல் போட்டியில் 1ஆம் இடம் பெற்றது)

செல்வி. வானதி விஸ்வநாதன்
யா/ இணுவில் மத்திய கல்லூரி

(இந்த மாணவி தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு 5 தனி நடனத்தில் இந்த ஆண்டு தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.)

# புதிய வேதம்

**தொடர்கதை –அத்தியாயம் 04**

மனிதப் பிறப்பானது உயிர்வாழ் இனங்களில் மனோன்னதமான ஒன்றாகும். மனிதனுக்கு இறைவன் அளித்த ஆறாம் அறிவைக் கொண்டு இயற்கைக்கு மாறான தேடல்களை தேடி அலைந்து புத்தமைப்புக்கள் என்றும் விஞ்ஞான யுகத்தின் பரிணாம வளர்ச்சியில் மனித முன்னேற்றத்திற்கான புதிய முயற்சிகள் என்றும் கூறி ஆக்கத் திறனால் அழிவுத் தேடலுக்கே வழிசமைத்துக் கொண்டிருக்கும் நிலைப்பாட்டினையே காண்கிறோம். முன்னோர் கட்டிக் காத்த ஆன்மீக வழிமுறைகளை அலட்சியம் செய்து நவீன சிற்பிகளென தம்மைக் காட்டிக் கொள்ளும் மனித வர்க்கத்தில் பெரும்பாலானோர் அறிவுத் தேடலை மறந்து பணம், பொருள் எனும் மாயையில் சிக்கி அல்லறுவதைத் தான் பெரிய மனிதர்கள் சமுதாய முன்னேற்றம் என நினைக்கின்றனர். வறுமையிலும் செம்மையாய், செழிப்பாய் மகிழ்ச்சியாய் வாழ்ந்த குடும்பங்கள் பல வெளிநாட்டு பணத்தின் பெருக்கத்தால் சமூகச் சீரழிவின் பாதையில் வாழ்க்கைப் பயணத்தை மேற் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. ஆரம்ப கட்டத்தில் மகிழ்ச்சியாகவும் சமுதாய மட்டத்தில் உயர்ந்து விட்டதாகவும் பிறர் தயவோ, உறவுகளோ தேவையில்லை என நினைத்து உல்லாசமான வாழ்க்கைப் பயணத்தினை மேற்கொள்வோர் இடையிலோ, முடிவிலோ பாலைவனம் வரும் என்பதை எண்ணிக் கூடப் பார்ப்பதில்லை. இப்படி யான ஓர் சமுதாயத்தின் மத்தியிலே தான் நாமும் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என நினைத்து சிரித்துக் கொண்டான் ஜெபநேசன்.

> எதிர்பார்த்து ஏமாற்ற மடைவதை விட கொடுமை வேறில்லை. அதே சமயம் எதிர்பராது வரும் மகிழ்ச்சி யான விடயங்களை விட சந்தோசமும் வேறு கிடையாது.

சுந்தரம்பிள்ளையும் ஆரம்பத்தில் விவசாயம் செய்து கஸ்டப்பட்டாலும் பாசப்பிணைப்பிலும் உறவுகளின் அரவணைப்பிலும் பின்னிப்பிணைந்த ஓர் சமூகத்தின் மத்தியில் வாழ்பவர். பிள்ளைகள் வெளிநாடு சென்று உழைத்துப் பணம் வரத் தொடங்கியதும் மற்றவர் தயவின்றி வாழலாம் என்ற மனோநிலைக்களாகிவிட்டார். பணம் வந்தால் எல்லாம் மறந்திடும் என்ற நிலையில் தன் குடும்பம் என்ற ஒன்றைத் தவிர மற்றவர்களைப் பற்றி சிந்தனையே இல்லாது போய்விட்டது. அதற்குரிய வசதி வாய்ப்புக்களும் வலிந்து வந்து கொண்டிருந்தன. மூன்று பெண்பிள் ளைகளைப் பெற்று விட்டேனே எப்படிக் கரை சேர்க்கப் போறேன் என்றிருந்த மனநிலை மாறி வலிந்து வந்த புது உறவுகளினால் மனமகிழ்ச்சியில் மாய்ந்து போயிருந்தார். கணேசனுடைய நண்பன் பார்த்தீபன் ஜெபநேசனுடன் வந்து வித்தியாவை பெண் கேட்டதும் சீதனம் எதையும் எதிர்பார்க்கவில்லை என்று கூறியதும் அவருக்கு பெருமகிழ்ச்சியா யிருந்தது. சுவேதா வுக்கும் யாரோ ஒருவன் வெளிநாட்டு மாப்பிள்ளை வருவான் எனக்கொரு கஸ்டமும் இல்லை என்று எண்ணமிட்டவாறு வீட்டுப்படி ஏறியவர் உள்ளே நடந்த உரையாடலைக் கேட்டுத் திடுக்குற்று நின்றுவிட்டார்.

சாருலதாவுக்கு எழுத்து முடிந்துவிட்டது. அவளுடைய கணவன் கனடாவுக்குச் சென்று விட்டான். தகப்பனும் மகளுமாய் கொழும்புக்குச் சென்று பயணம் அனுப்பிவிட்டு மகளை மாமியாருடன் கொழும்பில் விட்டுவிட்டு ஊர் வந்திருந்தார். திவ்வியாவையும் பார்த்தீபன் பயணம் போவதற்கு முன்பு எழுத்தை முடித்துக் கொண்டு போனால் திருமணம் முடிந்த கையோடு லண்டன் போய் விடலாம் என்று பார்த்தீபன் கூறியிருந்தான். வித்தியாவுக்கும் எழுத்துக்கு நாட்குறித்தாயிற்று. வித்தியாவின் மனம் இன்ப அதிர்ச்சியில் மூழ்கிக் கிடந்தது.

ஆக்கம்:
கே.எஸ்.ஆனந்தன்



எதிர்பார்த்து ஏமாற்ற மடைவதை விட கொடுமை வேறில்லை. அதே சமயம் எதிர்பாராது வரும் மகிழ்ச்சியான விடயங்களை விட சந்தோசமும் வேறு கிடையாது. வேலை நேரங்கள் தவிர கனவு உலகிலே மிதந்து கொண்டிருந்தாள் வித்தியா.

முதன்முதலாக பார்த்தீபனைக் கண்ட நிகழ்வினை எண்ணிச் சிரித்தாள். கார் வெளியே வந்து நின்ற சத்தம் கேட்டு மூன்று சகோதரிகளும் வெளியே வந்து பார்த்த போது காரிலிருந்து

இறங்கிய இருவரையும் பார்த்து திகைத்து நின்றிருந்த போது "இது மிஸ்டர் சுந்தரம்பிள்ளை வீடு தானே?" என்று ஒருவன் கேட்டான். "ஆமாம் நீங்கள் யார்?" என்று சுவேதா கேட்டாள். "நான் பார்த்தீபன் இது ஜெபநேசன் சிவனேசனுடைய நண்பன் I'm from ஜேர்மனி". "வாருங்கள் அம்மா இங்கே வந்து பாருங்கள். அண்ணனுடைய ப்ரண்ஸ் வந்திருக்கினம் என்றாள் திவ்வியா.

பார்வதி வெளியே வந்து பார்த்துவிட்டு, "வாருங்கள் சற்று முன்பு தான் உங்களைப் பற்றி இவர்களிடம் கூறினேன். விரைவில் வருவீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்க வில்லை". என்று சிரித்துக் கொண்டே வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள். மூன்று சகோதரிகளும் அவர்களின் பின்னே சென்றனர்.

அவர்கள் நாற்காலிகளில் அமர்ந்ததும் பார்வதி ஓர் நாற்காலியில் அமர்ந்தாள். பெண்கள் மூவரும் தாயின் நாற்காலிக்குப் பின்புறம் நின்றிருந்தனர். "அவர் வெளியே போய்விட்டார் வந்து விடுவார். நீங்கள் இவர்களுடன் கதையுங்கள் உங்களுக்கு குடிப்பதற்கு......" என்று பார்வதி எழுந்தாள்.

"அம்மா நீங்கள் உட்காருங்கள். நாங்கள் பார்த்தீபன் வீட்டில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு தான் வந்தனாங்கள். இப்ப ஒன்றும் அவசரமில்லை." என்று ஜெபநேசன் கூறினான்.

பார்த்தீபன் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதை பார்த்ததும் வித்தியாவுக்கு கூச்சமாய் இருந்தது. அவர்களைப் பார்ப்பதைத் தவிர்த்து நிலத்தைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"பிரயாணம் எப்படி? கஸ்டமில்லை?" என்றாள் பார்வதி.

"பிரயாணம் கஸ்டமில்லை. ஆமி, பெடியன்கள் எங்களை இறக்கி ஏற்றி சோலிப்படுத்தி விட்டான்கள்". என்று கூறிச் சிரித்தான் பார்த்தீபன்.

"அடடே நான் இவர்களை அறிமுகப் படுத்தவில்லையே. இவள் தான் சாருலதா, இவள் திவ்வியா, இவள் சுவேதா தம்பியாட்கள் சொல்லி யிருப்பான்களே."

"மணப்பெண் சாருலதாவிடம் கொருக்கும்படி அண்ணன் சிவநேசன் தந்தது" என்று தான் கொண்டு வந்த பிரயாணப் பையை எடுத்து பார்வதியடம் கொடுத்து விட்டு "கடிதத்தில் எல்லாம் குறிப்பிட் டுள்ளதாக சொல்லச் சொன்னான். "இதோ அவரும் வந்து விட்டார். நீங்கள் மதியம் இங்கே தான் சாப்பிட வேண்டும்" என்று பார்வதி கூறியதைக் கேட்டுக்கொண்டு உள்ளே வந்த சுந்தரம்பிள்ளை



மத்தியானம் என்ன இங்கே தங்கப்போகிறார்கள்" என்று கூறினார்.

"அப்பா நான் பார்த்தீபன் வீட்டிலேயே தங்கிக் கொள்கிறேன். உங்களுக்கு பல வேலை களுக்கிடையில் எங்களைக் கவனிப்பதற்குப் பிரச்சினை. எழுத்திலன்று காலையில் வந்து இங்கேயே நிற்கிறோம்" என்றான் நேசன்.

"எங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை தம்பி எங்கடை பிள்ளைகளுக்காக நீங்கள் இருவரும் வந்திருக்கிறீர்கள் சந்தோஷம்." சரி மத்தியானம் இங்கே சாப்பிட்டு விட்டுப் போகலாம் தானே?"

"பார்த்தீபனுடைய அம்மா எங்களுக்காக ஸ்பெஷல் அரேஞ் பண்ணியிருக்கா. இன்னொரு நாளைக்கு வந்து சாப்பிடுகின்றோம். நாங்கள் புறப் படப் போறம். சிவநேசன் உங்களிடம் கொடுக்கும்படி கடிதம் ஒன்று தந்தவர். நீங்கள் படித்து விட்டு பதிலை இந்த விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள். பின்பு சந்திப்போம்." என்று கூறி விடைபெற்றுச் சென்றனர்.

அவர்கள் சென்ற பின்பு அப்பா கடிதத்தை பிரித்துப் படித்தார். சில நிமிடங்கள் தலையைச் சொறிந்து கொண்டு சிரித்தார். மீண்டும் ஒரு முறை படித்துவிட்டு எழுந்து விட்டு குசினிப் பக்கம் சென்றார். அம்மாவுடன் ஏதோ இரகசியமாகக் கதைப்பது கேட்டது. "கடவுள் எங்களைக் கைவிட மாட்டான் பார்வதி" என்று கூறியவர் "இந்தா நீயும் படித்துப் பார். நான் இன்றைக்கே கடிதம் போட்டு விடுகின்றேன். சிவாவுக்கும் கணேசனுக்கும் கடிதம் போடும்படி பிள்ளைகளிடம் சொல்லிவிடு" என்று கூறி விட்டு வெளியே புறப்பட்டுவிட்டார்.

சுந்தரம்பிள்ளை வெளியேறியதும் மூன்று பெண்களும் குசினிக்கு ஓடிச் சென்றனர். பார்வதி கடிதம் வாசித்துக் கொண்டு நின்றாள். பின்புறமாகச் சென்று நின்று அவர்களும் படித்தனர்.

"வித்யா எனக்கு அப்பவே டவுட்டாயிருந்தது. அவர் அவர் உன்னை ஏன் அடிக்கடி பார்த்துக்

கொண்டிருக்கின்றார் என்று நினைத்தேன். பெரிய திட்டத்துடன் தான் வந்திருக்கினம். ஒன்று கனடா போகுது. மற்றது லண்டன் போகுது. அம்மா இனி இந்த வீட்டுக்கு நான் தான் ராணி." என்று தாயின் கழுத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கேட்டாள்.

"ஏன்டி சுவேதா அவை விரும்பினால் மட்டும் போதுமா? வித்தியாவுடைய சம்மதம் வேண்டாமா? என்று கேட்டாள் சாருலதா.

"அக்கா நீயா கேட்கிறாய் சங்கத்தில் வேலை செய்கிற மாப்பிள்ளை வேண்டாம் என்றாய். கனடா போறேன்..... அடிச்சிட்டியே. மிஸ்டர் பார்த்தீபன் லண்டன் மாப்பிள்ளையாக்கும். திவ்வியாவை விட ஆள் பளிச்சென்று இருக்கிறார் அவளா வேண்டாம் என்பாள்" என்று கூறிவிட்டு குசினியை விட்டு வெளியே சென்ற திவ்வியாவின் மனதில் ஆயிரம் மலர்கள் பூத்துக் குலுங்கி மணம் வீசின.



சில நிமிடங்களில் சுவேதா கடிதத்துடன் திவ்வியாவிடம் வந்தாள். சிரித்துக் கொண்டே அவளை மேலும் கீழும் பார்த்தாள். வித்தியா எதுவும் பேசாமல் இருந்தாள். சாருலதா கூறியது போல இவள் மனதிலும் ஏதும் இருக்குமோ என நினைத்துக் கொண்டே அக்கா" என்றாள்.

"என்னடி என்னைக் கிண்டல் பண்ண வந்தியா ?"

"எனக்கு உன்னைப் பார்த்தால் டவுட்டா இருக்கு உனக்கு மிஸ்டர் பார்த்தீபனைப் பிடிக்க வில்லையா?

"சுவேதா அப்பா அம்மாவுக்குப் பிடித்துக் கொண்டது மட்டுமல்ல அண்ணாக்களுக்கும் பிடித்தபடியால் தானே சிபார்சு செய்திருக்கின்றார்கள். நான் ஏனடி மறுக்கப் போறன்".

"அக்கா நீ உண்மையிலே லக்கி தான். ஒரு இன்ரவியூவில் வேலை கிடைச்சுது. ஒரு தரும் ஓடித் திரியாமல் ஒரு கடிதத்திலேயே மாப்பிள்ளையும் கிடைச்சுது. சாரு அக்கா கனடா போகும் முன்பே நீ லண்டன் சென்று குழந்தையும் பெற்று விடுவாய். எங்கேயிருந்தாலும் நல்லாயிருக்க வேண்டும். இந்த தங்கச்சியை மறந்து விட மாட்டியே.?" "பைத்தியம் நான் ஏன்டி மறக்கிறன். உன்னைப் பிரிந்து போக வேண்டுமே என்ற வருத்தம் தான்டி எனக்கு. இருப்பினும் பெண்ணாய் பிறந்து விட்டால் இவைகளைத் தவிர்க்க முடியாது. உனக்கும் அங்கே ஒரு......" "அக்கா அந்த நினைவை விட்டு எங்கேயும் போகமாட்டன்" என்று அவளைக் கட்டியணைத்துக் கொண்டாள்.

"சுவேதா! நாம் நினைத்த படி எல்லாம் எங்கள் வாழ்க்கை அமைவதில்லை. என்றைக்கோ எழுதப்பட்டபடி தான் நடக்கும். அதற்கு முன் நாமாக எந்த முடிவையும் மேற்கொள்ளக் கூடாது. உன்ரை பிடிவாதப் போக்கு எனக்குத் தெரியும். நீ படித்து முடித்ததும் ரீச்சிங் கிடைக்கும். கல்லூரியில் உனது கொலிச் மேற் யாரையாவது விரும்புகின்றாயா?

"அக்கா நான் எதையும் இப்ப சொல்வதற்கில்லை. உங்கள் திருமணங்கள் நல்லபடி முடியட்டும். எனக்கு அவசரம் இல்லை" என்றாள்.

"அப்பாவின் பிடிவாத குணம் உன்னிடமும் அப்படியே இருக்கு சுவேதா. நாங்கள் போன பின்பு உனக்கு ஆறுதல் சொல்லவும் ஆட்களில்லை. அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுத்து விடாதே".

"அக்கா! நான்...நான்..." என்று கூற ஆரம்பிக்கும் போது இவர்களது உரையாடல்களைக் கேட்டுக் கொண்ட நின்ற சுந்தரம்பிள்ளை செருமிக் கொண்டு உள்ளே வந்தார்.

> நாம் நினைத்த படி எல்லாம் எங்கள் வாழ்க்கை அமைவதில்லை. என்றைக்கோ எழுதப்பட்டபடி தான் நடக்கும். அதற்கு முன் நாமாக எந்த முடிவையும் மேற்கொள்ளக் கூடாது.

# சைவ சித்தாந்த தத்துவ வளர்ச்சியில் ஈழத்தவர்களின் பங்களிப்பு



சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்
*B.A. Dip-in-Edu, S.L.E.A.S., M.A.*

கட்டுரைத் தொடர் - 4

## சேர்.பொன் இராமநாதன் (1851 - 1930)

யாழ்ப்பாணக் குடா நாட்டின் மானிப்பாய் கிராமத்தில் பொன்னம்பல முதலியார் செல்லாச்சி அம்மையார் செய்த தவப்பயனாக கி.பி 1851இல் சேர்.பொன்.இராமநாதன் தோன்றினார். இவர் இலங்கை அரசியலில் பல வருட காலம் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தார். 1879ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பிரதிநிதியாக 27 வயதுடைய சேர். பொன் இராமநாதன் சட்டசபைக்குத் தெரிவாகுவதற்கு ஆறுமுகநாவலர் உதவியாக இருந்தார். சுத்தானந்த பாரதியார் எழுதிய 'நாவலர் பெருமான்' என்ற நூலில் நாவலர் தரிசனத்தோடு இராமநாதனைத் தமிழர் பிரதிநிதியாகச் சட்டசபைகளுக்குத் தெரிவாவதற்குச் செய்த முயற்சியினைப் பாராட்டியுள்ளார். நாவலர் அரசியலிலும் பெரிய மூளை. இவர் அரசியலில் அக்காலத்தில் மேடை ஏறியிருந்தால் பாலகங்காதர திலகர், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரப்பிள்ளை போல விளங்கியிருப்பார் எனச் சுத்தானந்த பாரதியார் குறிப்பிட்டுள்ளார். தஞ்சாவூர் அருட்பரானந்த சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்ட பின்பு சேர்.பொன். இராமநாதனிடமிருந்த உள்ளொளி பிரகாசிக்க ஆரம்பித்து அவர் ஆத்மீக வாதியானார்.

அருட்பரானந்த சுவாமிகளின் தொடர்பால் சமயம், தத்துவம், யோகநெறி என்பவற்றை இவர் தெளிவாகக் கற்றுணர்ந்து கொண்டார். சைவ சித்தாந்த மகா சமாஜம் 1905இல் சிதம்பரத்தில் நடாத்திய முதலாவது சைவ மாநாட்டிற்கு இராமநாதனே தலைமை வகித்தார். மதுரைத் தமிழ்ச்சங்கம், திருவள்ளுவர் மகாசபை நடாத்திய மாநாடுகளுக்கும் தலைமை தாங்கினார்.

பிரஸ்தான திரயங்களில் ஒன்றாகப் போற்றப் படும் பகவத்கீதைக்கு இவர் சைவ சித்தாந்த அடிப்படையில் விளக்கவுரை எழுதியுள்ளார். இவர் உரை எழுதி வெளியிட்ட ஆத்திசூடி, திருக்குறள் பாயிரம் 2 ஆகிய இரு நூல்களும் சைவ சித்தாந்த விளக்கில் விளங்கும் உரைகளேயாகும். ஸ்ரீ இராமநாத தர்ம சாஸ்திர பாடம் என்ற நூல் ஒப்பியல் நோக்கில் எழுதப்பட்ட சிறந்த நூலாகும்.

கீழைத்தேய மெய்யியல் தூதுவராக (1905 - 1906)இல் அமெரிக்கா சென்று இவர் சொற் பொழிவுகள் ஆற்றினார். இராமநாதனின் சைவ சித்தாந்த ஞான போதனைகள் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிற்குப் புறப்பட்ட கப்பலிலேயே ஆரம்பித்துவிட்டது. கடற்சிப்பந்திகள் நலன்புரி சங்கத்தில் அவர்களின் வேண்டுகோளின்படி இந்தியா பற்றி இராமநாதன் உரையாற்றினார். "நாங்கள் எல்லோரும் பிரயாணிகள்" என்று தனது பேச்சினை ஆரம்பித்தார். இந்தியர்களின் (இந்து சமயத்த வர்களின்) பிரயாணம் வெறும் காட்சியின்ப நோக்கத்தினைக் கொண்டதல்ல என்றார். அது காரியக் கண்ணான பிரயாணம் என்றார். இவர்களின் பிரயாணமெல்லாம் ஏதாவதொரு கோயில் தலத்தை நோக்கியதும் வழிபாட்டு நோக்கம் கொண்டது மாகவே இருக்கும். ஐம்புல இன்பப் பேறு நோக்கமான எந்தச் செயலும் வெட்கக் கேடான காரியமாகவே கணிக்கப்படும். வாழ்க்கை வசதிகளைச் சுருக்கி ஆலய வழிபாட்டுணர்வைப் பெருக்கி அதன் மூலம் உயிருட்டமான அன்பையும் ஞானப் பிரகாசத்தையும் பெறுவதே இந்தியனின் வாழ்வியல் நோக்கம் என்றார். அன்பு விருத்தியே உண்மை வாழ்வியல் இலட்சியம் என்றார். பணம் சம்பாதிப்பது மட்டும் வாழ்வியல் நோக்கின் முடிந்த முடிவாகாது. தாம விருத்திக்கும், பரோபகாரத்திற்கும் ஆன்மீக ஈடேற்றத்துக்கும் பணம் பயன்பட வேண்டும் என நினைத்தால் மில்லியன் கணக்கில் அல்ல பில்லியன் கணக்கில் சம்பாதிக்கலாம் என்றார்.

அமெரிக்காவைச் சேர்ந்த மிறன் வெல்ப் (Myron Phelp) என்பவர் ஆன்ம விசார நோக்கில் இந்தியாவை நாடி வந்தார். அங்கெங்குந் திருப்தி உறாத இவர் கொழும்பிற்கு வந்து இராமநாதனிடம்

தஞ்சம் அடைந்தார். இராமநாதனின் போதனையால் தமது ஆன்ம தாகத் தீர்வில் திருப்தியடைந்தார். இவர் சேர். பொன். இராமநாதனை அமெரிக்காவிற்கு அழைத்துச் சைவ சித்தாந்தப் பேருரைகளை நடாத்துவித்தார். கிறிஸ்தவ சமய வேதமாகிய பைபிளில் சில உதாரணங்களைக் காட்டி அவற்றின் ஊடாகச் சைவசமய உண்மைகளை வெளிப் படுத்தினார். இராமநாதனின் அந்தரங்கக் காரிய தரிசியாக இருந்த ஹரிசன் (பின் லீலாவதி இராம நாதன் அம்மையார்) அவருடைய பேருரைகளைக் "கீழை நாட்டு மாணவர்களுக்காக மேலை நாட்டுக் காட்சிகள்" (The Western pictures to Eastern Students) என்ற நூலாகத் தொகுத்து வெளியிட்டார். மிறன் வெல்ப் இராமநாதனின் பிரசாரங்களை மட்டும் தனியாகத் தொகுத்து ஆன்ம கலாசாரம் (Soul Culture) என்னும் நூலை வெளியிட்டார்.

சிவாகம விதிக்கு அமைய கொழும்பு மாநகரில் முழுவதும் கற்றளிக் கோயிலாக பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயத்தைக் கட்டுவித்தார். சைவத் தமிழ் மாணவர்கள் சைவப் பண்பாட்டுச் சூழலில் கல்வி பயில்வதற்கு வசதியாக ஆண்களுக்கென பரமேஸ் வராக் கல்லூரியையும் பெண்களுக்கென இராம நாதன் கல்லூரியையும் தனது சொந்தப் பணத்தில் நிறுவிய வள்ளல் பெருந் தகையாகத் திகழ்ந்தார். சைவப் பெரியார் மு. ஞானப்பிரகாசம் இராமநாதனை இலங்கை ஈன்ற மகாராசன் எனப் போற்றியுள்ளார்.

சைவ சித்தாந்த நூல்கள் பலவற்றைச் செந்தமிழ், ஆங்கிலம் என்னும் இரு மொழிகளிலும் எழுதி வெளியிட்டார். தமிழ்மொழியில் இவர் திருவருட்பயன் உரை விளக்கம்இ சைவபோதம் முதலாம் இரண்டாம் புத்தகங்கள், சைவக் கிரியை விளக்கம்இ, கந்தபுராணவிளக்கம், திருப்பெருவடிவம்இ, திருவாசக மணிகள்இ சைவ சித்தாந்தம்இ சைவ சமயசாரம் ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார். திருவருட் பயனுக்கு இவர் எழுதிய உரை விளக்க நூல் மிகச்சிறந்த நூலாக அறிஞர்களால் போற்றப்படுகிறது.

## சைவப்பெரியார் சிவபாத சுந்தரம் (1878-1953)

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமராட்சிப் பிரதேசத்தில் அமைந்த புலோலிக் கிராமத்தில் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் 1878ஆம் ஆண்டில் தோன்றினார். கல்விச்சேவை, சைவ பரிபாலனம், சைவ சித்தாந்த போதனை ஆகிய துறைகளில் நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பணிகள் பல புரிந்தார். கலைமாணிப் பட்ட தாரியும் தமிழ், வடமொழி, தருக்கம், கணிதம், கல்வியியல் ஆகிய பலவற்றில் துறை போனவரும், நல்லாசானுமாகிய சைவப்பெரியார் சு. சிவபாத சுந்தரனார் சைவ சித்தாந்த நெறிக்குத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகள் வாயிலாகவும் பெரும் தொண்டாற்றினார்.



புலோலி வேலாயுதம் ஆங்கில வித்தியாசாலை, யாழ். பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகவும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் அதிபராகவும் பணியாற்றி நல்ல பண்புள்ள மாணவ சமுதாயம் உருவாகத் துணையாக நின்றார். யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் மத்தியிலே மறுமலர்ச்சியும் எழுச்சியும் உண்டாவதற்கு மூல காரணமாக இருந்த யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் தலைவராகவும் சிலகாலம் பணியாற்றி யுள்ளார். திருக்கேதீஸ்வரம் திருப்பணிச் சபையின் தலைவராகவும் இருந்து பணிகள் பல புரிந்துள்ளார். சைவ சித்தாந்த நூல்கள் பலவற்றைச் செந்தமிழ், ஆங்கிலம் என்னும் இரு மொழிகளிலும் எழுதி வெளியிட்டார். தமிழ் மொழியில் இவர் திருவருட் பயன் உரை விளக்கம், சைவபோதம் முதலாம் இரண்டாம் புத்தகங்கள், சைவக் கிரியை விளக்கம், கந்தபுராணவிளக்கம், திருப் பெருவடிவம், திருவாசக மணிகள், சைவ சித்தாந்தம், சைவ சமயசாரம் ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார். திருவருட் பயனுக்கு இவர் எழுதிய உரை விளக்க நூல் மிகச்சிறந்த நூலாக அறிஞர்களால் போற்றப் படுகிறது. இவரது உளவியல் அறிவொளியால் மாணவரின் உளப்பாங்கறிந்து அவர்கள் விரும்பி ஏற்குமாறு எழுதப்பட்ட நூலாக திருவருட்பயன் திகழ்கிறது.

இவர் ஆங்கிலத்தில் எழுதிப் பிரசுரித்த நூல்களில் "The Glories of Saivasium" "Saiva School of Hinduism" முதலிய மூன்று நூல்கள் பிரசித்த மானவை. சைவ நடைமுறை ஒழுக்கங் களைக் காரண காரிய இயைபு காட்டிச் சுருக்கமும் தெளிவுமாக விளக்கும் முதலாவது நூலாக முதலாவது நூல் காணப்படுகிறது. இரண்டாவது

நூல் பரம்பரைச் சமயம், உண்மைச் சமயப் பண்பு சைவப் பண்பாட்டின் மேன்மைகள், கடவுள், ஆணவம், மாயை, கர்ம நியதி முதலான சைவ சித்தாந்தப் பொருட் கூறுகளைத் தனித்துவமான பாணியில் விளங்குகின்றது. காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் மெய்யியல் துறைக்குப் பாடப்புத்தகமாக இந்நூல் ஏற்கப்பட்டுள்ளது.

"சைவ சித்தாந்தப் பொருட் பிழைகளை எங்கும் எவர் சார்பிற் காண நேரினும் தாட்சண்ய மின்றிக் கடிந்தொதுக்கி உண்மை விளக்கம் நிலை பெற வைத்தல். சைவ அறிஞர்க்கு உள்ள தார்மீகக் கடமை என்பதற்கு உதாரண புருஷராகச் சைவப் பெரியார் திகழ்ந்தார்" எனப் பண்டிதர். மு. கந்தையா அவர்கள் திருமதி லீலாவதி இராமநாதனின் நினைவுப் பேருரையில் குறிப்பிட்டுள்ளார்.

சைவப் பாடசாலைகள் தோன்றவும் சைவப் பிள்ளைகள் தமது சமயத்தை அறிந்து கடைப் பிடிக்கவும் வேண்டுமென்ற குறிக்கோளினை நிறை வேற்றும் முகமாக வாழ்நாள் முழுவதும் சைவப் பெரியார் அரும்பாடுபட்டார். கோயில்களில் மிருக பலி நடைபெறுவதைக் கண்டித்து அந்தக் கொடுமையை ஒழிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். சைவப் பெரியார் சிவபாதசுந்தரம், நவாலியூர் சோம சுந்தரப்புலவர், ஆத்மஜோதி முத்தையா போன்ற பல சைவப் பெரியார்களும் கிராமங்களில் வாழ்ந்த பல சிவ தொண்டர்களும் நமது சைவ ஆலயங்களில் நடைபெற்ற மிருக பலியினை நிறுத்துவதற்கு பெரும் முயற்சி செய்தார்கள். ஆலயங்களில் மிருகங்களைப் பலியிடும் கொடுமை அருகி வந்தது. மீண்டும் அரக்க குணம் படைத்த அசுரர்கள் நமது மண்ணில் தலையெடுத்து ஆலயங்களில் மிருகபலி செய்வதை ஊக்குவித்து வருகின்றார்கள். இத்தகைய அநாகரிகமான அதர்மச் செயல்களால் நமது மக்கள் இந்த மண்ணில் பட்ட துன்பங்களும், துயரங்களும் தொடர்கதையாகி விடுமோ? என்ற பயம் ஆன்மீக சிந்தனையுள்ள பலருடைய உள்ளங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

நமது நாட்டில் உள்ள பாடல் பெற்ற தலமாகிய திருக்கேதீஸ்வரத்தின் பெருமையை உணர்ந்து அதனை மீண்டும் புனருத்தாரணம் செய்வதில் சைவப் பெரியார் மிகுந்த அக்கறையுடன் ஈடுபட்டார். திருக்கேதீஸ்வரம் திருப்பணிச் சபையின் தலைவராக இருந்து செயற்பட்டதோடு செயல்வீரர் கர்மயோகி சேர். கந்தையா வைத்தியநாதன் தலைவராக இருந்து கேதீஸ்வரத்தானின் பணிகளில் ஈடுபட்ட பொழுது அவருக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டார். தனது முதுமைப் பருவத்திலும் மலேசியா நாட்டில் இருந்த சைவ அன்பர்களிடம் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிகளுக்கு நிதி பெறுவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். திருக்கேதீஸ்வரத்தில் ஆனந்தத் தாண்டவமாடும் நடராஜப் பெருமானின் திரு உருவத்தைத் தனது சொந்தப் பணத்தின் மூலம் செய்து கொடுத்தார்.

## மு. திருவிளங்கம் (திருவிளங்க தேசிகர்)

யாழ்ப்பாணக் குடா நாட்டின் மானிப்பாய்க் கிராமத்தில் திருவிளங்க தேசிகர் தோன்றினார். இவர் தமிழ், ஆங்கிலம், சைவம், தருக்கம் ஆகியவற்றில் துறை போகிய கல்விமானாய் விளங்கினார். ஆசிரியத் தொழில், நியாயவாதித் தொழில், நீதிபதித் தொழில் ஆகிய தொழில்களில் காலத்திற்கு காலம் பணியாற்றினார். சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய இரு மெய்கண்ட சாஸ்திர நூல்களுக்கும் இனிமை பயக்கும் எளிய உரையினைத் திருவிளங்க தேசிகர் எழுதினார். இவருக்கும் யாழ்ப்பாணத்தின் தவயோகி யோகர் சுவாமிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. இவர் தமக்குப் புலனாகாத பொருட்களைக் குறித்துக் கொண்டு யோகர் சுவாமிகளிடம் செல்வார். யோகர் சுவாமிகளைக் கண்டதும் அவருடைய திருவருள் நோக்கத்தால் ஐயங்கள் எல்லாம் தெளிவாகி விடும். திருவிளங்க தேசிகர் சிவபதம் அடைந்த அன்று யோகர் சுவாமிகள் ஆச்சிரமத்தில் நின்றும் வெளிவந்து வானத்தை நோக்கி அவன் சோதியுடன் கலந்து விட்டான் என்று கூறினார். சித்தியார் சித்தியாரென்று உணர்ந்து சித்தியார் மயமாகவே தேசிகர் மாறிவிட்டாரென யோகர் சுவாமிகள் கூறியதாகச் சான்றோர் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

சிவஞானசித்தியாருக்கு இவர் எழுதிய உரை நூல் அறிஞர்கள் பலரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது. உலகத் தோற்றத்தைப் பற்றி இவர் கூறிய விளக்கம் அற்புதமானது. காலம் தான் துணைக் காரணமாகவும், சிவசக்தி நிமித்த காரணமாகவும், தம்முள் பிரிவின்றி நின்று அவற்றைக் காரியப்படுத்துகிறது. இதே போல இறைவன் தனது

சக்தியைப் பொருந்தி நிற்கும் நிலையையும் பிரபஞ்சத்தைக் காரியப்படுத்தும் முறைமையையும் விளக்கி உள்ளார். காலம் தான் துணைக் காரணமும் சிவசக்தி நிமித்த காரணமுமாகத் தம்முள் பொருந்தி நின்று செயலாற்றுவது போல இறைவன் தனது சக்தி துணைக் காரணமாகவும் தான் நிமித்த காரணமாகவும், பொருந்தி நின்று செயலாற்றுவன் என்று மிகவும் நுட்பமாக விளக்கம் கூறப்பட்டுள்ளது.

இவர் சைவ அனுட்டான சீலராகவும் சிவ பூஜா துரந்தராகவும் விளங்கினார். இவர் இயற்றிய பிற நூல்களில் கந்தலரங்கார உரையும், திருப்புகழ் திரட்டும் பிரபல்யம் பெற்றவை. "நிலையில்லாத உலகப்பற்றுக்களை அறவே நீக்கி நிலையுள்ள திருவடிப் பேற்றை வேண்டுமின்" மக்கட் பிறவியின் பயன் அதுவே என்பது திருவிளங்க தேசிகரின் விளக்கமாகும்.

**விஞ்ஞான மாணவன் அ.விசுவநாதபிள்ளை**

விஞ்ஞான மாணவன் என்ற புனைபெயரில் பல கட்டுரைகளை எழுதி வந்த திரு. அ. விசுவநாதபிள்ளை ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாவார். வேத சாஸ்திரங்களில் கூறப்பட்ட உண்மைகளும், சைவ சாத்திர தோத்திரங்கள் பிரதிபலிக்கும் சிவபரத்துவமும் ஒன்று என்பதை நீலகண்டர் மகான் செந்திநாதையர் வழியில் நின்று இவரும் நிறுவினார். சிவஞானபோதம், சிவஞானசித்தியார், உபநிடதங்கள், திருமந்திரம் ஆகியன பற்றி ஆங்கில மொழியில் இந்து சாதனத்திலே தொடர் கட்டுரைகள் பல எழுதி வந்தார். சிவஞான சித்தியாரில் கூறப்பட்ட கருத்துக்களை மையமாகக் கொண்டு "The elements of Saivasiddhantha" என்னும் நூலை எழுதினார். உபநிடத விளக்கங்கள் வேதாந்த மூலசாரம் என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளி வந்தன. உபநிடதங்கள் கூறும் மெய்யியல் உண்மைகள் சைவ சித்தாந்தம் கூறும் மெய்யியல் உண்மைகளோடு பொருந்தும் சிறப்பினை இந்நூலில் இவர் தெளிவாக விளக்கியுள்ளார். 1950ஆம் ஆண்டில் இந்நூல் வெளியிடப்பட்ட பொழுது இதற்கு முன்னுரை வழங்கிய சிவக்கவிமணி C.K சுப்பிரமணிய முதலியார் இந்நூல் "The identity of Vedantha and Saiva siddhanta" ஆகக் காணப்படுகிறது என்று கூறினார். கைவல்ய உபநிடதம் முதல் சுவேதாஸ்வர உபநிடதம் வரை உள்ள 24 உபநிடதங்களின் விளக்கம் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

இந்திய தத்துவக் கோட்பாடுகளில் ஏகான்ம வாதம், மாயாவாதங்களை உள்ளடக்கிய தத்துவங்களாக கேவலாத்துவிதம், விசிட்டாத் வைதம், துவைதம் என்பன காணப்படுகின்றன. இம்மூன்று பிரிவினருக்கும் பொதுவான தத்துவ நூலாகப் பிரம்ம சூத்திரம் திகழ்கிறது. மூன்று பிரிவினரும் தத்தம் கோட்பாட்டிற்கு இசைவாகப் பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கம் அளித்துள்ளார்கள். பிரம்ம சூத்திரத்திற்கு விளை நிலமாயிருந்த உபநிடதங்களையும் தத்தம் கருத்துப் போக்கிற்கு ஒத்திசைவாய் காட்ட முயன்றுள்ளனர். உபநிடதம் கொள்கைச் சார்பில் எழுந்த நூலன்று. ஆனால் சங்கரர், இராமானுஜர், மத்துவர் ஆகிய மூவரும் தமது கொள்கை விளக்கத்தை வெளிப்படுத்த உதவும் நூலாகவே உபநிடதங்களைப் பயன்படுத்தி உள்ளனர்.

இந்நிலையில் உபநிடதங்களில் கூறப்பட்டுள்ள உண்மைகளை விளக்கிக் காட்டும் பணியில் விசுவநாதன் ஈடுபட்டார். கைவல்ய உபநிடதம் சைவ சித்தாந்த விளக்கத்திற்கு எளிதில் உதவுகிறது என்றும் முப்பொருளுண்மையை விளக்குகிறது எனவும் கூறுகின்றார்.

ஆன்மாவிற்கு தனு கரண புவன போகங்களை இறைவன் கொடுத்தது அவற்றை உரிய முறையில் உபயோகப்படுத்தி அதன் மூலம் ஆன்ம விளக்கம் பெறும் முத்தியை நாடச்செய்தற் பொருட்டேயாம் என்று கூறுகின்றார். "பெறுதற்கரிய மானுட சரீரத்தை நாம் பெற்றது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்" என்பது நாவலர் பெருமானின் வாக்கு ஆகும். ஆனால் மனிதர்கள் எல்லோரும் அந்நெறியில் நிற்பதில்லை. தமக்கு கிடைத்த தனு கரண புவன போகங்களைத் தம்முடைய அறியாமையைப் பெருக்கிப் பாவம் நரகம் பெறுவதற்குச் சாதனமாக்கும்படி செய்து வருகிறார்கள் என்று கவலையுடன் கூறியுள்ளார்.

இவர் இயற்றி வெளியிட்ட திருமந்திர ஆங்கில மொழி பெயர்ப்பு நூலும் (Thirimanthiram Analysis) சிறப்புமிக்க நூலாகும். சைவ சித்தாந்தப் பொருளுண்மைகளோடு திருமந்திரப் பொருளுண்மைகளை நோக்குவோர்க்கு இதமளிக்க கூடிய சிறந்த ஆக்கம் இதுவாகும்.

# விஞ்ஞான வளர்ச்சியால் மனித சமுதாயத்துக்குக் கிடைத்தது நன்மையா? தீமையா?

இன்றைய வளர்ந்துவிட்ட விஞ்ஞான யுகத்திலே நாம் பல்வேறு விஞ்ஞானக் கண்டுபிடிப்புக் களை கண்டு, கேட்டு, ஏன்? பயன்படுத்திக் கொண்டும் இருக்கின்றோம். இவ்வாறு பலதுறை களிலும் விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் கண்டு பிடிக்கப்பட்ட விடயங்களும், சாதனங்களும் பற்பல. அதேபோல் அவற்றினால் நாம் அடையும் பயன்களும் ஏராளம். பயன் கள் என்று கூறுகையில் அவற்றில் அனுகூலங்களும், பிரதிகூலங்களும் அடங்குகின்றன. எந்த வொரு செயலிலும் நன்மையும், தீமையும் கலந்து இருப்பது போல் இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் கண்டுபிடிப்புக்களிலும் அனுகூலங்க ளும், பிரதிகூலங்களும் இருக்கின்றன.

இதுவரை காலமும் "Global Village" ஆக இருந்த உலகம் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு களினாலும் அவற்றின் வருகையினாலும் இப்போது "Global family" ஆக மாறியுள்ளது. அதாவது உலகின் எந்தவொரு மூலையிலும்நடைபெறும் ஒவ்வொரு சிறிய சம்பவங்கள், செய்திகள் அனைத்தும் மறுநிமிடமே உலகம் முழுவதும் காட்சிப் படுத்தப்படுகின்றது. இவை அனைத்தும் எவ்வாறு சாத்தியம்? இவை அனைத்தும் விஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்பட்ட நன்மைகளே. அதாவது Internet, E-mail, Fax, Telephone போன்ற தொலைத் தொடர்புச் சாதனங்களின் கண்டுபிடிப்பு, அவற்றின் பரம்பல், அவற்றின் பாவனை என்பன காரண மாகவே ஏற்பட்டது. அதாவது உலகம் முழுவதும் இன்று ஓர் வலைப்பின்னலில் தொடர்புபட்டு இருக்கின்றது. இதன் காரணமாக செய்திகள் யாவும் செக்கன்களில் அனைத்து இடங்களிற்கும் பரவி விடுகின்றமை ஒரு பெரிய நன்மையாக காணப்பட்டாலும் இவற்றினால் தீமைகளும் விளைகின்றன.

> விஞ்ஞானம் ஆனது கடலைப் போல அகலமும் ஆழமும் உடைய அறிவுத் தொகுதி மனித குலம் உலகில் முளைவிடத் தொடங்கிய நாள் முதல் இன்று வரை அது பல பல முறைகளிலே பல பல வசதிகளைப் படைத்துக் கொண்ட கதையை விஞ்ஞானத்தின் கதை யென்றே கூற முடியும். இந்த உண்மைக் கதையின் ஒவ்வொரு திருப்பத்திலும் மனித சிந்தனை தூண்டப்படுகின்றது. அதனால் அறிவு பிரகாசித்திருக்கிறது. இவ்வாறு பிரகாசித்த அறிவுத் தொகுதியே விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களாக வளர்ச்சியடைந்து இருக்கின்றன.

தீமைகள் என்று பார்க்கையில் தொலை பேசியில் தவறான அழைப்புக்களை மேற்கொள் ளுதல் தவறான குறுஞ் செய்திகளை பரிமாற்றிக் கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளை மேற் கொள்ளல். இவற்றைவிட இணையத்தில் தவறான செய்திகள், படங்கள், குறுந்தகவல்களை வெளியாக்குவதுடன் இணையத்திலே வைரஸ் இனை அனுப்பி இணையம் பாவிப்பவர்களது கணனியை பழுதடையச் செய்ய வைப்பதோடு இன்றைய இளம் சமுதாயத்தினரை கலாசார சீரழிவிற்கும் இட்டுச் செல்லவும் இவை வழி வகுக்கின்றன.

விஞ்ஞானம் ஆனது கடலைப் போல அகலமும் ஆழமும் உடைய அறிவுத் தொகுதி மனித குலம் உலகில் முளைவிடத் தொடங்கிய நாள் முதல் இன்று வரை அது பல பல முறைகளிலே பல பல வசதிகளைப் படைத்துக் கொண்ட கதையை விஞ்ஞானத்தின் கதை யென்றே கூற முடியும். இந்த உண்மைக் கதையின் ஒவ்வொரு திருப்பத்திலும் மனித சிந்தனை தூண்டப்படுகின்றது. அதனால் அறிவு பிரகாசித்திருக்கிறது. இவ்வாறு பிரகாசித்த அறிவுத் தொகுதியே விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களாக வளர்ச்சியடைந்து இருக்கின்றன.

அதனால் தான் விஞ்ஞானமும் இதன் வளர்ச்சி யினால் ஏற்பட்ட கண்டு பிடிப்புக்களும் மனித வாழ் வோடு உயிரும் உடலும் போலப் பிணைந்து காணப் படுகின்றது. விவசாயத் துறையிலே விஞ்ஞான வளர்ச்சியினை அவதானிக்கும் போது.... அன்று ஏர், எருது கொண்டு நிலத்தை உழுத வர்கள் இன்று இயந்திரக் கலப்பையால் ஆழ உழுது இரசாயன உரமிட்டு பெரும் பயன் அடைகின்றனர். பெரும் பண்ணை முறையிலான விவசாயத்தில் இது வரை காலமும் மனித உழைப்பினால் மேற் கொள்ளப்பட்ட உழுதல், மட்டப்படுத்தல், விதைத்தல், களைகட்டல், எருவிடல் போன்ற அனைத்து வேலைகளும் இன்று இயந்திர உதவியினால் இலகுவாகவும் விரைவாகவும் செய்யக்கூடியதாக இருப்பதோடு கூடிய விளைச்சலையும் பெறக் கூடியதாக இருப்பது மிகப் பெரிய ஓர் அனுகூலம் ஆகும்.

அதே நேரம் விஞ்ஞான வளர்ச்சியினால் தீமைகளும் ஏற்படுகிறது. அதாவது மனித

உழைப்பினால் செய்யக்கூடிய வேலைகளை இயந்திரங்கள் செய்வதால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுகின்றது. இதனால் வறிய ஏழை மக்களின் தொழில் இழக்கப்படுவதனால் அவர்கள் பொருளாதார ரீதியாக பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

இதேபோன்று இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதனாலும் மனிதன் பெரும் பிரதி கூலத்தையே அனுபவிக்கின்றான். அதாவது சேதனப் பசளை, ஆட்டெரு, மாட்டெரு போன்ற வற்றிற்கு பதிலாக யூரியா, அமோனியா போன்ற செயற்கைப் பசளைகளையும் களைகளிற்காக களைநாசினி களையும், பூச்சிகளிற்காக பூச்சி நாசினிகளையும் பயன்படுத்துவதனால் பின்னாளில் இவை காய், தானியங்களில் சுவறி பின் உணவினூடு எம் உடலை அடைகின்றன.

இதனால் இன்றைய சமூகத்தில் புற்றுநோய் போன்ற வியாதிகள் ஏற்படுவதோடு இத்தகைய இரசாயனப் பொருட்கள் எமது உடலில் தேக்கமடையும். நாளடைவில் அவை தேக்க மடைவதன் காரணமாக பிரிகையடைய முடியாத உயிர்த் திணிவாக மாறி மனித உயிரிற்கே பேராபத்தை விளைவிக்கக் கூடியவையாக மாறும்.

விஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்பட்ட விளைவுகளின் அடிப்படையில் நாம் பெரிதும் பயனடையும் போக்குவரத்துத்துறை பற்றி சிறிது அவதானிப்போம். அன்று கால்நடையாகவும் விலங்குகளையும் பயன்படுத்தி நாட்கணக்காக மாதக் கணக்காக என பயணம் செய்த மனிதன் இன்று அந்த நிலைமாறி ஒரு சில நிமிடங்கள் பயணம் செய்து தான் செல்ல வேண்டிய இடத்தை அடைகிறான். ஆகாயத்தில் பறவைகள் பறப்பதை ஆச்சிரியமாய் நோக்கிய மனிதன் இன்று அப்பறவைகள் போன்று தானும் விமானத்தில் பறந்து திரிகின்றான். இவற்றைவிட தரையிலேயே மனிதனது பொருளாதார வசதிக்கேற்ற வகையான துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் வண்டிகள், கார்கள் என ரகம் ரகமாய் வந்த வண்ணம் இருக்கின்றன. இதனால் போக்குவரத்து என்பது இன்று ஒரு மிகச் சிறிய செயல் ஆகிவிட்டது. இது விஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்பட்ட ஒரு மிகப் பெரிய நன்மையாகும்.

இந்த நன்மையிலும் ஒரு தீமை இருக்கின்றது. வாகனங்களின் வருகை அதிகரிக்க அதிகரிக்க அவற்றிற்குத் தேவையான எரிபொருட்களின் தேவையும் அதிகரித்த வண்ணமே இருக்கும். இதனால் நம் எதிர்கால சந்ததியினருக்கு கனிய வளம் அதாவது எரிபொருட்கள் இல்லாமல் போய்விடும். இதைவிட மிகப் பெரிய பிரதிகூலம் இவ்வாகனங்களின் புகையினால் சூழல் மாசடைவதே ஆகும். இவ்வாகனங்களின் புகையில் இருந்து வெளிவரும் தூசுத் துணிக்கைகளில் உள்ள சேதனப் பொருட்கள் மக்களது சுவாசத்தின்போது உள்ளெடுக்கப் படுவதால் நுரையீரல், புற்றுநோய் சுவாசப்பை அழற்சி போன்ற நோய்த் தாக்கம் அதிகரித்து காணப்படும். இது விஞ்ஞான வளர்ச்சியின் விளைவினால் ஏற்பட்டதொரு மிகப் பெரிய தீமையாகும்.

இவற்றைவிட மின்சாரம் என்ற உருவிலே வளர்ந்துள்ள விஞ்ஞானம் செய்யும் செயல்களோ அளப்பரியன. கரிய இருட்டைப் பட்டப் பகல் போல் ஜொலிக்கச் செய்கின்றது. வேலைக்குச் செல்லும் பெண்களிற்கு சமையல் அறையில் ஓர் கூலி வாங்காத வேலையாளாக செயற்படுகின்றது. இதனைத் தவிர பொழுதுபோக்குவதற்கு ஏற்ற நல்ல நண்பர்களாகவும் செய்திகளை தெரிவிக்கும் அறிவிப்பாளர் ஆகவும் வானொலி, தொலைக்கட்சி பெட்டி போன்றன செயற்படுகின்றன. இவையெல்லாம் விஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்பட்ட அளப்பரிய நன்மைகள் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் தனது கால் தடத்தைப் பதித்த விஞ்ஞானம் கைத் தொழில் துறையையும் விட்டு வைக்கவில்லை. இதுவரை காலமும் மனித உழைப்பையும் மிருகங்களின் வலுவையும் பயன்படுத்தி வந்த இடத்தில் விஞ்ஞானம் புதிதாக நீராவிச் சக்தி யையும் எரிபொருள் சக்தியையும் கண்டுபிடித்து உலகிற்கு அறிமுகமாக்கி கைத்தொழில் துறையில் பாரிய திருப்பத்தை உண்டாக்குகிறது. இச்சக்திகளின் கண்டுபிடிப்பினாலும் அவற்றின் வருகையினாலும் புதிய புதிய தொழிற்சாலைகள் உருவாகின. தொழில் வாய்ப்புக் கள் பெருகின. மனிதனது வாழ்வாதாரம் உயர்ந்தது மனிதன் உயர்ந்த நிலைக்கு சென்றான்.

ஆயினும் இவ்வளர்ச்சிக்கு சமனாக மறுபுறத்தில் இதுவரை காலமும் இல்லாதவாறு

சூழலும் மாசடையத் தொடங்கியது. தொழிற்சாலைக் கழிவுகள், புகை போன்ற கழிவுப் பொருட்கள் ஆறு, குளம் போன்ற நன்னீர் ஏரிகளில் கலக்கவிடப் பட்டதால் அங்கு பாரிய உயிர்ப் பல்வகைமை அழிவு ஏற்பட்டதோடு குடிநீர்ப் பிரச்சினையும் ஏற்பட வழிவகுத்தது. இவையும் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட விளைவுகளே!

இவ்வாறே விஞ்ஞானம் மருத்துவத் துறையில் ஆற்றிய முன்னேற்றங்களும் எண்ணில் அடங்கா. அன்றைய காலத்தில் இயற்கை தான் மனிதனை ஆண்டுகொண்டிருந்தது. எந்தவொரு கொடிய நோயிற்கும் மரணம் தான் இறுதி என்பது எழுதாத சட்டமாக இருந்து வந்தது. ஆனால் இன்று... ஆட்கொல்லி நோயாகிய எயிட்ஸ் தொடக்கம் மாரடைப்பு வரை அனைத்திற்கும் மாற்றுச் சிகிச்சைகள் கண்டுபிடிக்கப்பட்டதோடு அவையனைத்தும் சாதாரண மாகவே வழக்கத்திலும் வந்துவிட்டன. இவற்றைவிட X-கதிர் சிகிச்சைகள் லேசர் கதிர் சிகிச்சைகள் என விஞ்ஞானத்தின் வளர்ச்சி மருத்துவத் துறையில் மிக வேகமாக வளர்ந்து வருகின்றதோர் அளப்பரிய செயல் ஆகும்.

இத்தகைய விஞ்ஞானம் தனது அதீத வளர்ச்சி காரணமாக இன்று அரசியல் ஆதிக்கத்திற் குட்பட்டு தவியாய்த் தவித்துக் கொண்டு இருக்கின்றது.

அதாவது அபிவிருத்தி அடைந்த நாடுகள் தமது பொருளாதாரத்தை அதிகரித்து நாட்டை மேன்மேலும் அபிவிருத்தி அடையச் செய்வதோடு நாட்டு மக்களது நலன்களையும் கருத்தில் கொண்டு நாட்டின் வளர்ச்சிக்கும் மக்களின் அபிவிருத்திக்கும் என விஞ்ஞானிகளின் உதவியோடு நன்மை பயக்கும் பல விடயங்களையும் உபகரணங்களையும் கண்டுபிடிக்கின்றன. அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகள் தமக்கு கீழ் உள்ள பின்தங்கிய நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறி தங்களைவிட பொருளாதாரத்தால் உயர்ந்துவிடக் கூடாது என்பதற் காக தமது விஞ்ஞான வளர்ச்சிகள் அனைத்தையும் மனித சமுதாயத்தை அழிப்பதற் காகவே பயன்படுத்துகின்றன. அதாவது அணுகுண்டுகள், நச்சுவாயுக் குண்டுகள், ஏவுகணைகள் ஏனைய பிற ஆயுதங்கள் ஆக உருவெடுக்கின்றன. எனவே விஞ்ஞானிகள் அரசியலிற்குள் இறங்காமல் சுயாதீனமாக செயற்படக் கூடியவர்களாக இருக்கவேண்டும். பெருகி வரும் சனத்தொகைக்கு ஈடுகொடுக்கத்தக்கவாறு ஆய்வுகளை விரைவுபடுத்தி சமுதாயத்திற்கு வேண்டிய உணவு, உடை, உறையுள் ஆகியனவற்றைக் கொடுத்து வளமான வாழ்வு வாழ வழி கொடுத்தல் விஞ்ஞானத்தின் கடமை ஆகும். எனவே உலக நாடுகள் அனைத்தும் விஞ்ஞானத்தை அழிவுத் துறைக்குப் பயன் படுத்தாமல் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கும் ஆக்கத் துறைக்குப் பயன்படுத்த வேண்டும்.

"அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு" என்பது போல நாமும் விஞ்ஞானத்தையும் அதன் வளர்ச்சியினால் ஏற்பட்ட விளைவுகளையும் பயன்படுத்தி ஆக்கமான செயற்பாடுகளை மேற்கொண்டு எமது வாழ்வை வளம்படுத்துவதோடு ஏனையவர்களிற்கும் நன்மை செய்வோமாக!

செல்வி. தவானந்தன் துளசிகா
தரம் - 10
யா/ இணுவில் மத்திய கல்லூரி
(தமிழருவி நடாத்திய கட்டுரைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கட்டுரை)

## பப்பி நல்ல நாய்க்குட்டி



பப்பி நல்ல நாய்க்குட்டி
பாய்ந்தே ஓடும் நாய்க்குட்டி.
எப்போதும் என் பக்கத்திலே
வந்தே நிற்கும் நாய்க்குட்டி.

காலை என்னை எழுப்பிவிடும்
கடமை கொண்ட நாய்க்குட்டி
பள்ளி நானும் செல்கையிலே
பதுங்கித் தொடரும் நாய்க்குட்டி

என்னைக் கண்டால் வாலாட்டும்
எதிரில் வந்து உட்காரும்
கொடுக்கும் உணவை உண்டிடும்
கொழுத்த வெள்ளை நாய்க்குட்டி.

எந்தன் செல்ல நாய்க்குட்டி
துன்பம் ஏதும் வந்திட்டால்
அபயம் அளித்து அன்பூட்டி
அருகே என்றும் வைத்திருப்பேன்

வி. திவாகரன், தரம் - 11 'A'
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.
(தமிழருவி கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை)

# சமகாலக் கலைநிகழ்வுகள்

## செந்தமிழ்க் கல்விக் கண்காட்சி – யா/ சங்கானை சிவப்பிரகாச ம. வி

21.06.2011 செவ்வாய்க்கிழமை யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் 'செந்தமிழ்க் கல்விக் கண்காட்சி' ஒன்று நடைபெற்றது. இது பாடசாலை மட்டத்தில் பெரியளவில் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி அல்ல. பாடசாலையின் ஒரு வகுப்பின் ஒரு பிரிவு மாணவர்களால் நடாத்தப்பட்ட கண்காட்சி.

$11^{A}$ வகுப்பு மாணவர்களின் 2ம் தவணைக் குரிய தமிழ்ப்பாடக் கணிப்பீடு ஒன்றினை நிறை வேற்றும் பொருட்டு, இச்செந்தமிழ்க் கல்விக் கண்காட்சி நடாத்தப்பட்டது. குறுகிய கால ஆயத்தப் படுத்தலில் குறிப்பிட்ட நேரத்துள் திட்டமிட்டுச் செப்பமாகச் செய்த மாணவர் திறன் பாராட்டப்பட வேண்டியது.

செந்தமிழ்க் கல்விக் கண்காட்சிக்குப் பிரதம விருந்தினராக பாடசாலையின் அதிபர் திரு.வே. சிவசுந்தரம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித் தார்கள். சிறப்பு விருந்தினர்களாக பாடசாலையின் உபஅதிபர் திரு.க.உபேந்திரன் அவர்களும், பகுதித்தலைவர் திருமதி.ஞா.விமலராஜா அவர்களும் கலந்து கொண்டார்கள். கௌரவ விருந்தினராக திருமதி. ஜெ. கிருபாகரன் அவர்கள் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்வைச் சிறப்புற ஒழுங்குபடுத்தி நடாத்தியவர் இணைப்பாளர் தமிழ்ப்பாட ஆசிரியர் திருமதி.உதயலதா நவதீசன் அவர்கள்.

பிரதம விருந்தினர் பாடசாலையின் அதிபர் திரு.வே.சிவசுந்தரம் அவர்கள் நாடாவை வெட்டி கண்காட்சியைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்கள். வாயிலிலிருந்து நுழைந்தவுடனேயே ஐவகை நிலப்பிரிவுகளும் சங்ககால அன்பினைந் திணை ஒழுக்கங்களுக்கு நம்மை அழைத்துச் சென்றன. மலை, வயல், காடு, மணல், கடல் பிரதேசங்கள் மிக அழகாக உருவகிக்கப்பட்டி ருந்தன. தொடர்ந்து வைக்கப்பட்டிருந்த 'கவி விருட்சம்' மாணவரின் கவியாற்றலை வெளிப் படுத்துவதாய் அமைந்திருந்தது. மரக்கிளைகளில் பல்வேறு வகையான கவிதைகள் எழுதப்பட்ட அட்டைகள் அழகுறத் தொங்கவிடப்பட்டு 'கவி விருட்சம்' எனப்பெயரும் இடப்பட்டிருந்தது.

பல்வேறு விடயங்களைச் சுமந்து நிற்கும் பல்வகை நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றோடு மாணவர்களால் ஆக்கப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைகளும் கண்காட்சியை அழகுபடுத்தின. மாணவர்களுடைய பாடப்பரப்பினுள் அமைந்த இலக்கணப் பகுதிகள் தெளிவாக அட்டைகளில் எழுதித் தொங்கவிடப்பட்டிருந்தன. அவற்றுக்கு மாணவர்களால் தெளிவான விளக்கங் களும் கொடுக்கப்பட்டன. இலக்கியப் பகுதிகள், நூல்கள் அவற்றின் ஆசிரியர்கள் பழமொழிகள் எனப் பல்வேறு விடயங்களும் காட்சிப்படுத்தப்பட்டு விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

மாணவர்கள் வெவ்வேறு வகை வேடங்கள் புனைந்து, பார்வையாளரால் வினவப்பட்ட வினாக்களுக்கு வேடத்திற்கேற்ற பதிலுரைகளையும் வழங்கினர். ஔவையார், திருவள்ளுவர், பாரதியார் முதலிய வேடங்களில் மாணவர்கள் அழகுற மிளிர்ந்தனர். இவற்றோடு தமிழ் மங்கை வேடமும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்றாகும். ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாக அணிந்த அழகு மங்கையாகத் தமிழ்மங்கை மிளிர்ந்தாள். சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, மணிமேகலை காப்பியங்களை ஆபரணங்களாக அணிந்து, தமிழ் நங்கை நின்ற அழகு கண்களுக்கு விருந்தாக அமைந்தது.

இவற்றை விட செவ்விகாணல், உரையாடல், உரைச்சித்திரம் எனப் பாடப்பரப்பு விடயங்கள் கண்காட்சியை மெருகூட்டடின. 11ம் வகுப்பு தமிழ்ப் பாடப்பரப்பினுள் அமைந்த 'மங்கையர்க்கரசியின் காதல்' எனும் கதைப்பகுதி மாணவர்களால் குறு நாடகமாக நடித்துக் காட்டப்பட்டது. உணர்ச்சி பூர்வமான அவர்களது நடிப்பை பார்வையாளர்கள் அனைவருமே பாராட்டிச் சென்றனர்.

இக்கண்காட்சியின் சிகரமாய், சென்ற வருடம் ஆனி மாதம் இந்தியாவின் கோவையில் நடைபெற்ற 'உலகத் தமிழ்ச் செம்மொழி' மாநாட்டில் வெளியிடப் பட்ட உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு மலரும், அன்றைய நிகழ்வுகள் பதியப்பட்ட இறுவட்டும் இந்தியாவிலிருந்து பெறப்பட்டு காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன. அம்மலரைப் பலரும் ஆர்வத்தோடு பார்த்ததைக் கவனிக்கக் கூடியதாகவிருந்தது. மாணவர்களால் செம்மொழி மாநாட்டுப் பாடலும் அழகுறப் பாடப்பட்டமை குறிப்பிடப்பட வேண்டிய தோர் விடயமாகும்.

எவ்வாறிருப்பினும் இச் செந்தமிழ்க் கல்விக்கண்காட்சி வகுப்பறை மட்டக் கணிப்பீடு என்ற குறுகிய வட்டத்தைத் தாண்டி பரந்தளவில் ஆசிரியர் மாணவர்களுக்குப் பயனுடையதாக அமைந்திருந்தது என்பதை யாராலும் மறுக்கவியலாது.

# விவசாயமும் நாமும்; நேற்று இன்று நாளை



தொடர் - 4

பூமதி யோகநாதன்
விவசாயப் போதனாசிரியர்



இலங்கையில் விவசாயம் பற்றி வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களுக்கு அமைவாக 3.26 மில்லியன் கமக்காரர்களுக்கு 1.56 மில்லியன் ஹெக்டயர் விவசாயக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள தாக தெரிய வந்துள்ளது.

மேற்படி காணிகளில் வீட்டுத்தோட்டங்களை மாத்திரம் உடையவர்கள் 3,82,300 எனவும் வீட்டுத் தோட்டங்கள் மற்றும் பிற காணிகள் உள்ளவர்கள் 5,59,241 எனவும் பிற காணிகளை மாத்திரம் உடையவர்கள் 7,00,361 எனவும் பதிவாகியுள்ளது. இக்காணித் துண்டுகளில் 90% காணிகள் தமக்குத் தேவையான உணவுப்பயிர்களைச் சிறிய அளவிலாவது பயிரிடக் கூடிய காணிகள் என இனங் காணப்பட்டுள்ளது.

நாடு பூராவும் பரந்த அளவில் மரக்கறி, பழங்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும் வைத்திய ஆராய்ச்சிப்படி சிபார்சு செய்யப்பட்டுள்ள வருட மொன்றிற்கு 72 கிலோ தலா நுகர்வின் அரைவாசி யினை மட்டுமே எமது உற்பத்தி பூர்த்தி செய்கின்றது. எனவே மரக்கறித் தேவையைப் பூர்த்தி செய்ய மேலும் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளது.

இந்நாட்டின் கிராமிய சனத்தொகையில் 70%ஆன மக்கள் விவசாயத்தை சீவனோபாய தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்களில் 25%-30% வீதமான மக்கள் வறுமைக்கு உட்பட்டுக் காணப்படுகின்றனர். அத்துடன் அதிகமான உணவு வகைகளின் தலா நுகர்வு ஆகக்குறைந்த போசாக்குத் தேவையினை விடவும் மிகக்குறைந்த மட்டத்தில் காணப்படுகிறது. கிராமப் பகுதியில் வாழும் 5 வயதிற்குக் குறைந்த குழந்தைகளில் ஏறக்குறைய 30% வீதமான குழந்தைகள் போசாக்குக் குன்றிய நிலையில் காணப்படு கின்றார்கள்.

இதன் காரணமாக அதாவது போசாக்குக் குறைபாடு காரணமாக மிகப்பெரிய பின்னடைவு குடும்ப, சமூக, தேசிய ரீதியாக கல்வியில், சமூக பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்பட்டு சகல அபிவிருத்திகளும் பாதிக்கப்படுகின்றன.

ஆகவே மேற்குறிப்பிட்ட குறைபாடுகளில் இருந்து விடுபட உடனடியான வழிவகைகளைத் தாமதமின்றித் தேட வேண்டியுள்ளது.

இந்த வகையில் மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்ய பிறநாடுகளில் இருந்து நமக்குத் தேவையான பற்றாக்குறையாக உள்ள உணவுப் பொருட்களை (மரக்கறி பழங்கள் ஏனைய உணவு வகைகள்) இறக்குமதி செய்ய முயற்சிக்கலாம். ஆனால் இது இப்போது சாத்தியமாக இல்லை. காரணம் தற்போது உலகில் அதாவது ஏனைய நாடுகளிலும் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அத்துடன் கூடிய விலை கொடுத்து இறக்குமதி செய்யும் நிலையில் எமது பொருளாதார நிலையும் வலுவானதாக இல்லை.

இந்நிலையில் மாற்று வழியாக எம்மிடம் பயிர்செய்யப்படாமல் உள்ள விவசாயக் காணிகள் மற்றும் மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள வீட்டுத் தோட்டக் காணிகளில் உணவு உற்பத்தியில் ஈடுபடுவதன் மூலமும், புதிய விவசாய நுட்பங்கள் மூலமும் நமக்குத் தேவையான உணவுகளை நாமே

உற்பத்தி செய்யலாம். அதாவது உள்நாட்டு உணவு உற்பத்தி ஊக்குவிப்பு தேசிய செயற்பணியுடன் இணைந்து உணவு உற்பத்தியில் தன்னிறைவடையக் கை கொடுப்போம்.

கடந்த தமிழருவி அருவி 3இல் வீட்டுத் தோட்டங்களை அவற்றின் அமைவிடம் காரணமாக 4 வகையாக வகைப்படுத்திக் காட்டப்பட்டது. அவையாவன.

1. கிராமப்புற வீட்டுத்தோட்டம்
2. ஓரளவு நகர்ப்புற வீட்டுத்தோட்டம்
3. நகர்ப்புற வீட்டுத்தோட்டம்
4. பயிர்செய்கைக்குப் பொருத்தமில்லாத மண் நீர் உள்ள பகுதி வீட்டுத்தோட்டம்

இந்த அருவியில் கிராமப்புற வீட்டுத்தோட்டம் அமைக்கும் நுட்பங்கள் பற்றி அறிந்துகொள்வோம். அதாவது கிராமிய வீட்டுத்தோட்ட அபிவிருத்தி மூலம் நேற்றைய பிரச்சினைகளுக்கு இன்று தீர்வும் நாளை சமூக மேம்பாடும் கிடைக்கும் என்பது உறுதி. கிராமப்புற வீட்டுத்தோட்டத்தை முக்கியப் படுத்தி நுட்பங்களை வெளிப்படுத்துவதன் நோக்கம் இக்கட்டுரையின் முன்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவைகளில் இருந்து தெளிவு பெற்றிருப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

> கிராமிய வீட்டுத்தோட்ட அபிவிருத்தி மூலம் நேற்றைய பிரச்சினைகளுக்கு இன்று தீர்வும் நாளை சமூக மேம்பாடும் கிடைக்கும் என்பது உறுதி.

இனிச் சிறப்பான கிராமிய வீட்டுத் தோட்டத்தை எப்படி அமைப்பது? தொடர்ச்சியாக எப்படி பராமரிப்பது, கிராமிய வீட்டுத்தோட்டம் மூலம் கிடைக்கும் பொருளாதார, சுகாதார, சமூக நன்மைகள் எவை? அவற்றின் பெறுமதிகள் என்ன? என்பதை விரிவாக நோக்குவோம்.

## வீட்டுத்தோட்டத்தில் இருக்க வேண்டிய பயிர்வகைகள்.

### 01. பூ மரங்கள்

ரோசா, செவ்வரத்தை, செவ்வந்தி, மல்லிகை, சூரியகாந்தி, அந்தூரியம், ஓர்க்கிட், நந்தியாவட்டை போன்ற பொருளாதார ரீதியாக பயன் தரக்கூடியதும் மூலிகையாக மருத்துவ குணங்கள் உள்ளதாகவும், அழகானவையாகவும் பிரதேசத்தில் இலகுவாக வளர்க்கக் கூடியதாகவும் உள்ள அழகுத் தாவரங்கள்.

### 02. இலை மரக்கறி வகைகள்

கறிமுருங்கை, சண்டி, தவசிமுருங்கை, அகத்தி, வல்லாரை, பொன்னாங்காணி, கங்குன், குறிஞ்சா, தூதுவளை, முல்லை, முசுட்டை, கொடிப்பசளி, செடிப்பசளி, புதினா, தோட்டக்கீரை, சலாது, இலைக்கோவா.

### 03. மரக்கறி வகைகள்

உள்நாட்டு மரக்கறி வகைகளான பாகல், புடோல், பூசனி, பீர்க்கு, சுரைக்காய், கெக்கரி, இராணி அவரை, கொத்தவரை, கத்தரி, வெண்டி, தக்காளி, மேல்நாட்டு மரக்கறி வகைகளான பீற்றூட், கரட், முள்ளங்கி, லீக்ஸ், கோவா, பூக்கோவா

### 04. பழப்பயிர் வகைகள்

பப்பாசி, வாழை, தேசி, தோடை, கொய்யா, லெமன், (கொடி எலுமிச்சை) கொடித்தோடை, திராட்சை, மாதுளை, அன்னாசி, ஆனைக்கொய்யா, நெல்லி, விளாத்தி, மா, பலா போன்றன.

### 05. கிழங்கு வகைகள்

சட்டிக்கருணை, மோதகவள்ளி, இராசவள்ளி, உருளைக்கிழங்கு, வற்றாளை, மரவள்ளி, வள்ளி, சிறுகிழங்கு, சேம்பு

### 06. வாசனைப் பொருட் பயிர்கள்

கருவேப்பிலை, ரம்பை, இஞ்சி, மஞ்சள், கறுவா, மிளகு

### 07. சுவைச் சரக்குப் பயிர்கள்

வெங்காயம், உள்ளி, கொத்தமல்லி, சீரகம், வெந்தயம், மிளகாய்

### 08. பயன்தரு மரங்கள்

வேம்பு, கிளிசீடியா, (சீமைக்கிளுவை) பாற்கிளுவை, தேக்கு, பலா

### 09. மூலிகைப் பயிர்கள்

கற்றாளை, துளசி, தூதுவளை, கற்பூர வள்ளி, வெற்றிலை, சாத்தாவாரி, நீலப்பூக்கொடி, குறிஞ்சா போன்ற இன்னும் பல.

### 10. ஏனைய பயிர்கள்

கோப்பி, ஈரப்பலா, அம்பிறல்லா, இலந்தை, விளிம்பிலிபுளி, இலுப்பை, இப்பில்இப்பில், பூவரசு, வாதநாரணி.

வீட்டுத்தோட்டத்தில் காணப்படும் கூறுகள் அல்லது பிரிவுகள்.

1. வீடு
2. கிணறு அல்லது நீர் கிடைக்கும் இடம்
3. வேலி அல்லது மதில்
4. கழிவுகள் போடும் இடம் (சேதனப் பசளை உற்பத்திப் பகுதி) குப்பைக் கூடு அல்லது குப்பைத்தொட்டி அல்லது குப்பைக்குழி கூட்டெரு தயாரிப்பிற்கான நவீன முறைகள் அடங்கிய விசேட இடம்.
5. மலசலகூடம்
6. பயிர்வகைகள்
7. கால்நடைகள் (ஆடு மாடு கோழி தாரா முயல் காடை)
8. தேனி வளர்ப்புப் பகுதி
9. காளான் வளர்ப்புப் பகுதி
10. மீன் வளர்ப்பு
11. உயிர் வாயு உற்பத்திப் பகுதி
12. பூச்சி, பீடை விரட்டி தாவர பீடை நாசினி உற்பத்தி
13. உணவுப் பொருட்களைச் சேமிக்கும் அல்லது பதப்படுத்தும் பெறுமதி அதிகரிக்கும் பகுதி.

எனவே பூரணமான ஒரு வீட்டுத் தோட்டத்தில் மேற்குறிப்பிடப்பட்ட அனைத்துப் பகுதிகளையும் திட்டமிட்ட முறையில் வடிவமைத்து, ஒன்றிணைக்கப்பட்டதாக ஒருங்கிணைந்த விவசாயம் மேற்கொள்ளப்பட்டு, சூழலை மாசுபடுத்தாமலும், சூழற் கழிவுகளை வினைத்திறனாக முகாமை செய்து பயிர்ச்செய்கைக்கு இயற்கைப் பசளையாகப் பயன்படுத்தப்பட்டும், பயிர்க்கழிவுகள் விலங்கு உணவுகளாகப் பயன்படுத்தப்பட்டும் கடையில் இருந்து பெறப்பட்டு பயன்படுத்தப்படும் விவசாய உள்ளீடுகள் குறைக்கப்பட்டு அல்லது பூரணமாக தவிர்க்கப்பட்டு உள்ளூரிலே அல்லது வீட்டிலே கிடைக்கும் கழிவுகளை விவசாய உள்ளீடுகளாக மாற்றிச் சிறந்த தரமான சுகாதாரத்திற்கு தீங்கு இல்லாத போசாக்கான உணவுகளை வீட்டுத் தோட்டத்தில் இருந்து பெற்றுக்கொள்வோம்.

ஒவ்வொரு வீட்டிலும் மரங்களை நடுவோம். சில இலை வகைகள், பழமரங்கள், மரக்கறி வகைகள் கட்டாயம் வளர்ப்போம், இதை குடும்பத்தவர்கள் கவனித்து செய்வோம். குடும்பத்திற்கே நன்மை தரும். செலவைக் குறைத்து சுகம் தரும். சமுதாயத்திற்கே நல்லது.

நுட்பம் தொடரும். . .

## உண்மை முகத்தோடு உத்தமனாய் வாழ்

பொய்நகை புரிந்து புறம் கூறி
வஞ்சமனத் தோடு வாயால் வாழ்த்தி
இனிதாய்ப் பேசி இன்னா செய்து
நுனிநாவில் தேனும் அடிநாவில் நஞ்சும்
உள்ள ஆட்டுத்தோல் போர்த்த ஓநாயே!
மனிதவுருவில் உலாவும் கொடிய மிருகமே!
உன்னை எவ்வாறு உலகம் இனம் காணுமோ?
வீட்டில் ஒருமுகம் வெளியில் இன்னொருமுகம்
மனைவிக்கு ஒருமுகம் பரத்தைக்கு ஒருமுகம்
உன்னைப் பார்த்துபஞ்ச பூதங்களே நகைக்கும்
உன்மனதே உன்னைச் சுடுமே? ஓகோ!
உனக்குத்தானே மனச்சாட்சி என்பது இல்லையே!
கெட்டிக்காரன் புளுகும் எட்டு நாட்களுக்கே
பலமுகம் காட்டாது ஒருமுகமாய் வாழப்பார்
அகத்தின் அழகு முகத்தில் தெரிய
உண்மை முகத்தோடு உத்தமனாய் வாழ்!

பா. பாலச்சந்திரன்
மயிலணி

## பொன்மொழிகள்

- கையில் வாய்ப்பிருந்தும் ஆயத்தப்படாமல் இருப்பதைவிட, வாய்ப்பில்லாத நிலையிலும் ஆயத்தமாய் இருப்பது சிறந்தது. ஏனெனில் வாய்ப்பு அறிவித்துக் கொண்டு வருவதில்லை.
- வாழ்வென்னும் வெகுதியை கடவுள் நமக்கு வழங்கியிருக்கிறார். நம் வாழ்தலைப் பொறுத்தே அது மகிமையடைகிறது.
- பெற்றோர்களைக் காட்டிலும் ஆசான்களே அதிக மரியாதைக்குரியவர்கள்! பெற்றோர்கள் கொடுத்தது உயிரைத்தான்! கற்பிக்கிறவர்களோ வாழும் கலையை அல்லவா வழங்கி யிருக்கிறார்கள்.
- தன் கைகளைக் கொண்டு செயல்படுகிறவன் தொழிலாளி. தன் கைகளோடு மூளையையும் பயன்படுத்துகிறவன் கைவினைஞன். ஆனால் - தனது கைகள், மூளை அவற்றுடன் இதயத்தையும் கொண்டு செயல்படுகிறவனே கலைஞன்.

எழுதுங்கள்! வெல்லுங்கள்!

# மாதாந்த கவிதைப் போட்டி இல - 4

மாணவர்களின் கவிதை எழுதும் ஆற்றலை மேம்படுத்துவதற்காக மாதாந்தம் கவிதைப் போட்டி நடத்தப்படுகின்றது. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவருக்கு முறையே 500/-, 300/-, 200/- வழங்கப்படும். தரப்பட்ட கவிதைகளைத் தொடர்ந்து அந்த சந்தத்தில் நான்கு அடிகள் வீதம் கொண்ட மூன்று பாடல்கள் எழுதவேண்டும். இடைவெளி கீழே தரப்பட்டுள்ளது. இந்த ஆக்கம் குறித்த மாணவர்களுடையது என்பதை அதிபர் உறுதிப்படுத்திய பின்னர்,

த.கனேசமூர்த்தி, தமிழருவி இயக்குநர், உதவி ஆசிரியர், சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. ஆக்கங்கள் கிடைக்கவேண்டிய இறுதித்திகதி 30.09.2011.

ஆசிரியர்கள்.

## எங்கள் வீட்டுப் பூந்தோட்டம்

எங்கள் வீட்டுப் பூந்தோட்டம்
எத்தனை அழகு மலர்களுண்டு
பொங்கும் மகிழ்ச்சி அதைப் பார்த்தால்
மனதில் புதிய உற்சாகம்

* * *

...............................................
...............................................
...............................................
...............................................

* * *

...............................................
...............................................
...............................................
...............................................

* * *

...............................................
...............................................
...............................................
...............................................



## வாசகர் நெஞ்சத்தில் இருந்து.........

### தமிழருவியாய்த் தொடர்ந்திங்கு பாய்ந்தோட வேண்டும்

காலம், காலமாகப் போற்றப்பட்ட தமிழ்மொழி
இலக்கியங்கள், கண்டு கொள்ளப்படாது விட்டுவிட
எழுத்துநடை, தொன்மைச் சொற்கள்
காலத்தால் காரண காரியத்தால்
மாறுபாடு அசையும் நோக்கங்கள்,
விஞ்சி நிற்கும் புற அறிவியல் இத்தனையும்
தாண்டி புதுப்பித்து பதிப்பித்து தமிழருவியாய்
தொடர்ந்தே பாய்ந்தோட வேண்டும்!

உயிர்பெற்றுத் தமிழ் இலக்கியங்கள்
உயிர்வாழ வேண்டும்
தமிழறிஞர் அனுபவங்கள் உரமாக வேண்டும்
துணை நிற்கும் நூல்கள் எல்லாம் கற்க வேண்டும்
நவீன இலக்கிய கால மாற்றத்தைக் கூட
ஏற்று மீண்டும் மீண்டும்
புதிப்பித்துப் பதிப்பித்து தமிழருவியாய்த்
தொடர்ந்தே பாய்ந்தோட வேண்டும்.

எண்ணத்தைச் சொல்லிவிட
அறிவியற் பரப்பு, விரிய வேண்டும்
அதை வடிவமைத்து வெளிப்படுத்தப்
பல தடைகள் தாண்ட வேண்டும்
கைகொடுத்து களமமைத்து
தமிழிலக்கியங்கள் சிறப்போங்க
தமிழருவியாய்த் தொடர்ந்திங்கு
பாய்ந்தோட வேண்டும்.

ஆர்வமுடன் வாசகர்கள், பெற்றுப்
பயனடைய வேண்டும்
பலனை எதிர்பாராது தமிழை வளர்க்க
தமிழருவியாய்த் தொடர்ந்திங்கு
பாய்ந்தோட வேண்டும்.

**இ. ஜெயபாலன்**
**தொட்டிலடி,**
**சங்கானை.**

தமிழருவி சஞ்சிகையை வாசிக்கும் வாய்ப்புப் பெற்றவர்களில் நானும் ஒருவன். புராண காலம் தொடக்கம் இன்றைய நவீன காலம் வரையான சகல விடயங்களும் யாழ். மண்ணிற் கேற்றவாறு தரப்பட்டுள்ளன. சமயம் தொடக்கம் இலக்கியம் இலக்கணம் வரை முழுமையான பலனுடைய விடயங்கள் நூலில் இடம்பெற்றுள்ளன. பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிஞர்களும் தமது அனுபவங்களை இளைய தலைமுறையினருக்கு விளங்கும் வகைகளில் எழுதியுள்ளனர். பழைமைக்கும் புதுமைக்கும் பாலமாகத் தமிழருவி விளங்குகின்றது. இந்தப் பெருமையுடன் தொடர்ந்து வெளிவர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**மூ. சிவலிங்கம்**
**இளைப்பாறிய கிராம அலுவலர்**

---

மதிப்பிற்குரிய தமிழருவி ஆசிரியர்க்கு!

தங்கள் பணி தொடர்ந்து சிறப்பாக நடைபோட இறைவனை வேண்டுகிறேன். தங்களுடைய முதற் சஞ்சிகையில் என்னுடைய ஆக்கத்திற்கு இடந்தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் தமிழருவியில் முதல் இரண்டு சஞ்சிகைகளும் எனது கைகளில் உள்ளன. ஏனையவை இன்னும் என் கரம் சேரவில்லை இரண்டு சஞ்சிகைகளும் சிறப்பானவை.

“வாழ்க்கைக்கு ஒளி கொடுப்பது எழுதும் தாளும், எழுது கோலுமே” என்பது போலமைந்த தமிழருவியின் குறியீட்டுச் சின்னத்திற்கு நன்றியையும் பாராட்டுக்களையும் கூறி என்னுடைய இன்னுமொரு சிறிய கட்டுரையை அனுப்புகின்றேன். இதன் பயனும் தரமும் கருதி பிரசுரிப்பீர்கள் என நம்புகிறேன். தொடர்ந்தும் தமிழருவிக்காக எழுதக் காத்திருக்கின்றேன். மாணவர்களை ஊக்கப்படுத்தும் தங்களது முயற்சிகளுக்கு பாராட்டுக்கள்.

நன்றி

**அ. உமாமகேஸ்வரி**
**பிள்ளையார் கோவிலடி,**
**உடுவில் தெற்கு.**

### பொன்மொழி

- **வேலை மகிழ்ச்சியளிக்காவிடில் வாழ்க்கையில் மகிழ்ச்சியேது. மிகச்சிறந்த ஆட்டக் காரர்களுக்கு விளையாட்டில் மகிழ்ச்சி, இசையில் தேர்ந்தவர்களுக்கு இசைப்பதில் விருப்பம், சாதனையாளர்களின் மகிழ்ச்சி அவர்களுடைய சாதனையில் இருக்கிறது.**

அன்புள்ள இயக்குனருக்கும் ஆசிரியருக்கும், தமிழருவி மேலும், மேலும் வளர வாழ்த்துக்களும், ஆசிகளும்.

உங்கள் தமிழருவி சஞ்சிகை படித்தேன். எல்லாம் குறிப்பிடத்தக்க நல்ல மாதிரி இருக்கின்றன. கவிதைகளிலே விசேட தேவையுள்ளோர் எனும் கருப்பொருள் விசேடமாக திறம்பட நுட்பமாக கருத்தை சொல்லியிருக்கிறார்கள். மாணவிக்கு பாராட்டுக்கள்.

உலகுக்கு ஒரு கைம்மாறு என்ற கவிதை ஆழமானதாக, அர்த்தம் உள்ளதாக புதுமை படைந்துள்ளது. நான் படித்த கவிதைகளில் என் மனதை ஆழமாகத் தொட்டிருக்கிறது. படித்தது, தெரிந்தது புத்தகத்தில் இருப்பதை பார்த்து எழுதாது என் பழைய பல்லவிகளை தொடராமல் இராமாயணம், கம்பர், வள்ளுவர், பாரதி என நீளாது கோயிலில் மறைந் திருக்கும் உண்மைகள் என்ற கருப்பொருளில் சொல்ல வந்த கருத்துக்கள் மாதிரி வித்தியாசமாக அறிவுக்கும் உண்மைக்கும் தொடர்பு உள்ளதாக எழுத ஊக்கப்படுத்துங்கள். பனை ஓலை இராமன் கதைகள், இயற்கை மருத்துவம் தமிழ் மருத்துவம் ஆரோக்கிய வாழ்வும் குறிப்பிடத்தக்கன.

நான் ஒரு கிறிஸ்தவனாக இருந்தும் மற்ற மதங்களை நம்புவதில்லை. கோயிலில் மறைந்திருக்கும் உண்மை என்னும் கருப்பொருள் விளக்கங்கள் என்னை ஆழமாக ஊடுருவி ஆச்சரியங்களாக என் மனதைத்தொட்டன. அத்துடன் எனது நண்பர் ஒருவருக்கும் பல்கலைக்கழக ஆய்வுக்கு உதவியாக இருந்தது. இப்படியான விடயங்கள் தொடர்ச்சியாக இருந்தால் தமிழருவி தமிழ்நாட்டு படைப்புகளைவிட முன்னேறிக் கொண்டேயிருக்கும். நகைச்சுவை துணுக்கு இந்தியாவின் நாட்டு கொச்சைத் தமிழில் வந்திருப்பது அப்படியே கொப்பி அடித்தது போல இருக்கிறது. தமிழருவி என்ற பேருக்கே நல்லாயில்லை.

பருத்தித்துறை மேற்கு,
சிவியார் ஒழுங்கை,
பருத்தித்துறை,
கோட்ஜெனிபர்.

## பொன்மொழி

- உங்கள் திறமைகளை நீங்கள் பயன் படுத்துவதற்கு அவை முழுமையாக இருக்க வேண்டுமென்பதில்லை. பாடத் தெரிந்த பறவைதான் பாடலாமெனில் காடுகள் ஓசையற்றுப் போகவேண்டியதுதான்.

## சிந்திக்க சில துளிகள்

- எதையும் நடைமுறைப்படுத்த முடியும் என்று தீவிரமாய் நம்புங்கள். அதுவே வெற்றியைத் தேடித் தரும்.
- ஒருமுறை பொய் சொல்லத் தயாராகிறவனுக்கு இரண்டாம் முறையும், மூன்றாம் முறையும் எளிதாகி பின் - அதுவே வழக்கமாகி விடுகிறது அவனுக்கு.
- மதிப்புமிக்க எதுவும் எளிதாய் கைக்கு வந்துவிடாது. உழையுங்கள் - தொடர்ந்து உழையுங்கள்! கடினமாய் உழையுங்கள்! அதுவே - நிலையான பலன்களைத் தரும்.
- நீங்கள் வெற்றி பெறவும், முன்பு செய்து முடித்ததைவிட உயர்ந்த ஒன்றைச் செய்யவும் விரும்பினால் - உங்கள் பார்வை மேல் நோக்கி இருக்கட்டும். உங்கள் இலக்கு மேலும் மேலும் உயர்ந்தபடி இருக்கட்டும்.
- யார் வாக்குத் தவறாதவனோ, நேர்மையாய் சிந்திக்கிறவனோ, வெளிப்படையாய் பேசுகிறவனோ, மக்கள் அவனையே மதிக்கிறார்கள். அவனிடம் நம்பிக்கை வைக்கிறார்கள்.
- உங்கள் உயர்ந்த நோக்கத்தைக் குறைத்து மதிப்பிடுகிறவர்களிடம் இருந்து விலகியே இருங்கள். அவர்கள் குறுமதி படைத்தவர்கள். அப்படித்தான் நடந்துகொள்வார்கள். ஆனால், உயர்ந்த மனிதர்களோ நீங்களும் உயரமுடியும் என்ற உணர்வை உங்களுக்கு வழங்குவார்கள்.
- நீங்கள் வழக்கத்துக்கு முன்பாகவே தொடங்கும் போது - இன்னும் கொஞ்சம் கடினமாய் உழைக்கிறபோது - சற்றுக் கூடுதலாகவே தாங்கி நிற்கிறபோது - ஒவ்வொன்றிலும் கவனத்தை ஒருமுனைப்படுத்துகிறபோது - உங்கள் வேலையில் நேர்மையை நீங்கள் கடைப்பிடிக்கிறீர்கள். உங்களுக்குத் தெரியுமோ இல்லையோ உங்கள் நேர்மையின் உண்மையான அளவை உள்ளபடிக்குத் தெளிவாக அறிவார்கள் உங்களைச்சுற்றியிருப்பவர்கள்.
- உங்கள் குறிக்கோள்கள் உங்களுடைய சந்தேகங்களைவிட வலுவாக இருந்தால் - அது வெற்றிக்கு வகை செய்யும். உங்கள் சந்தேகங்கள் உங்கள் குறிக்கோள்களைவிட வலுவாக இருந்தால் கூர்ந்து கவனியுங்கள்.
- சாத்தியமற்ற நிலைகள் என்கிற போர்வையில் தான் மிகப்பெரிய வாய்ப்புக்கள் வருகின்றன.

# என் செல்லமடி நீ!

நான் தமிழ் வடிவமடி நீ!
அழகான பல
தமிழ்ச் சொற்களைக் காணும் போதெல்லாம்
உன் ஞாபகமே என்னை நினைவுபடுத்துகின்றது!

உன்னை ஞாபகப்படுத்துகின்ற எல்லா நினைவுகளும்
அழகிய தமிழாகவே இருக்கின்றன!

ஆடம்பரமற்ற உடையில் நீ வந்து கொண்டிருந்தாய்
உன் இடையில் தங்கி நின்றது தண்ணீர்க்குடம்!

தண்ணீர்க்குடம் சுமந்து நடக்கின்றாய்!
உன்னைப் பற்றியதான என் நினைவுகள்
உன்னையே சுற்றி வந்தன!

தேவர் உலகம் என்று ஓர் உலகம் உண்டாம்!
அங்குள்ள தேவதைகளை விட
மிக அழகான தேவதை நீதானாம்!

உன் அழகு கண்டு உன்னொத்த மங்கையரும்
'யார் இவள்! இவளும்
பூமியில்தானா பிறந்தவள்?
இவள் அழகு!
எங்களையும் காந்தம் போல் இழுக்கிறதே!'
என்று ஏங்குவராம்!

அழகிய மயில்தோகை விரித்தாடுவது போல்
உன் கருநிறக் கூந்தல் உன்பாதம் வரை தொட்டு
கறுப்பு நீர் வீழ்ச்சியாய் ஓடுமாம்!

உன் கூந்தல் அருகாய் வந்த வண்டினங்கள்
இதென்ன! இன்று வலு வெள்ளெனவாகவே
மாலை வந்துவிட்டதே!
இப்பதானே காலை விடிந்தது! அதற்குள் எப்படி
மாலை வந்தது! என்றும்
இன்னும் ஒரு சொட்டு தேன்கூட
நாம் குடிக்கவில்லையே! தேன் குடித்து மயக்குறும்
நாம் - இன்று
ஒருதுளி தேன் இன்றியே மயக்குறுவோமோ!

சீக்கிரமே இந்த மாலைப் பொழுது ஏன் வந்தது?
என்றும் அவை வியப்புறுமாம்!
பொன்னினால் செய்யப்பட்ட
அழகிய குண்டலங்கள்
உன் அழகிய காதில் ஊசலாடுகிறது!

அழகிய சின்னக் கோயிலில் தொங்கும்
கொத்து மணிகள் அவை!
கொத்து மணிகள் அலையும் வேகம் கண்டு
என் இதயத்தில் இதமான இனிமை!

பெண்கள் நடை அன்ன நடை என்பர்!
அன்னநடை எவளுக்குண்டு அவளே
அழகிய பெண் என்பர்!
ஆனால்
நீயோ என்முன் அன்னமாகவல்லோ
வந்து நிற்கிறாய்!

இத்தனை சிறப்பியல்புகளுக்கும் சொந்தமானவளே!
மயங்கியதடி என் நெஞ்சு! மாற்றியது உன்நெஞ்சு!
இனியும் உன்னிடமே என் நெஞ்சம் தஞ்சமடி!

எதுவுமே என்னிடம் இல்லை என்றனர்
என்னருகில் நீ இல்லாத போது!
எல்லாமும் என்னிடமே உண்டு என்றனர்
என்னருகில் நீ இருந்த போது!

எது எப்பிடியோ!
உன்
மார்புகளுக்கிடையில் துயில் கொள்ளுமளவுக்கு
என்னை சிறியவனாக்கிவிட்டாய்
என் செல்லமடி
நீ!

"அணங்குகொல் ஆய்மாயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு" – குறள் 1081

சமரபாகு சி. உதயகுமார்






1. தற்போது தனிநாடாக விடுதலை அடைந்த நாடு எது? **தென்சூடான்**
2. இலங்கையில் இதுவரை காலமும் தேர்தல் ஆணையாளராக பதவி வகித்து தற்போது ஓய்வு பெற்றுச் சென்றவரின் பெயர் என்ன? **திரு. தயானந்த திஸநாயக்கா**
3. தமிழ்நாடு மாநிலத்தின் ஆளுனரின் பெயர் என்ன? **திரு. சுர்ஜித் சிங்பர்னாலி**
4. காசேதான் கடவுளப்பா அந்தக் கடவுளுக்கும் அது தெரியுமப்பா என்ற பாடலை இயற்றியவர் யார்? **கவிஞர் வாலி**
5. உலகில் மிகச் சிறந்த நாடக ஆசிரியர் யார்? **சேர்.வில்லியம் ஷேக்ஸ்பியர்**
6. இலங்கையில் தற்பொழுது நடைமுறையில் இருக்கின்ற உணவு முத்திரையை வழங்குகின்ற அதிகாரி யார்? **வறுமை ஆணையாளர் நாயகம்**
7. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தை நிர்வகிக்கின்ற அமைப்பு யாது? **யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை**
8. மீன்பாடும் தேன் நாடு என்று அழைக்கப்படுகின்ற இடம் எது? **மட்டக்களப்பு**
9. தொலைபேசிக் கட்டணங்களை இறுதி நிர்ணயம் செய்கின்ற நிறுவனம் எது? **தொலைத்தொடர்புகள் ஆணைக்குழு**
10. உலகப் புகழ் பெற்ற அவுஸ்ரேலியா அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் யார்? அவர் பிறந்த இடம் யாது? **அடம் கில்கிறிஸ் அவுஸ்ரேலியாவின் பேர்த் நகர்**
11. உலக அதிசயங்களில் ஒன்று சீனாவில் உள்ளது அது எது? **சீனப்பெருஞ்சுவர்**
12. இலங்கை ஜனாதிபதியின் செயலாளரின் பெயர் என்ன? **திரு. லலித் வீரதுங்க**
13. இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் தற்போது நடைபெற்று வருகின்ற கப்பல் போக்குவரத்து எந்தெந்த நகரங்களுக்கிடையில் நடைபெறுகிறது? **தூத்துக்குடி – கொழும்பு**
14. கென்யாவின் தலைநகரத்தின் பெயர் என்ன? **நைரோபி**
15. இத்தாலி நாட்டிலே சர்வதிகார ஆட்சி நடத்தியவரின் பெயர் என்ன? **முசோலினி**
16. கந்தன் கருணை என்ற திரைப்படத்திலே முருகனாக வேசமிட்டு நடித்த நடிகரின் பெயர் என்ன? **நடிகர் சிவகுமார்**
17. மகாபாரதத்தில் பெண்ணாக இருந்து ஆணாக மாறியவர் யார்? **சிகண்டி**
18. நைல் நதிக்கரையில் தோற்றம் பெற்ற நாகரிகம் யாது? **எகிப்திய நாகரிகம்**
19. சூரபத்மனின் தங்கையின் பெயர் என்ன? **அகமுகி**
20. கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயம் எந்த மறை மாவட்ட பங்கிற்கு உரியது? **யாழ்ப்பாண மறை மாவட்ட பங்கிற்குரியது**
21. வடக்கு மாகாணத்தில் உப்பு உற்பத்தி நடைபெறுகின்ற இடங்கள் எவை? **ஆனையிறவு, செம்மணி**
22. நெடுந்தீவிற்கும் குறிகட்டுவானுக்கும் இடையில் நீண்ட காலமாக சேவையில் ஈடுபடும் பயணிகள் படகின் பெயர் என்ன? **குமுதினி**
23. இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தின் தலைநகர் யாது? **ஸ்ரீநகர்**
24. கதகளி என்ற நாட்டியம் எந்த இடத்தில் சிறப்புப் பெற்று விளங்கியது? **இந்தியாவின் கேரளாவில்**
25. உலகிலேயே அதிகளவு தங்கம் உற்பத்தியாகின்ற இடம் எது? **தென்னாபிரிக்கா**
26. திருகோணமலையில் அமைந்துள்ள விமான நிலையத்தின் பெயர்? **சீனன்குடா**
27. யாழ்ப்பாணத்தவர்களின் வரலாறு கூறும் நூல் எது? **தட்சணகைலாயமான்மியம்**
28. வாழைப்பழத்தில் எந்தச் சத்து உள்ளது? **விற்றமின் - C**
29. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடத்தில் முன்னர் அமைந்திருந்த கல்லூரியின் பெயர் என்ன? **பரமேஸ்வராக் கல்லூரி**
30. உலகின் நான்கு பெண் அரச தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக? **பெனாசிர்பூட்டோ, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, மாகிரட் தட்சர், இந்திராகாந்தி.**

# குருதிச்சூட்டில் குளிர்காய்வோர்



அந்த அடர்ந்த காட்டின் மிக ஆழமான நடுப்பகுதியில் அந்தச் செம்பாட்டான் மாமரம் மரங்களின் மறைவில் நின்றது. அது ஆண்டுதோறும் கோடையில் பூத்துக் காய்த்துக் கனிகள் சுமக்கும். அந்த நாட்களில், தொலைவிலிருந்து தன் கூட்டத்தினர்க்குத் தெரியாமல் தனியாகக் கிளம்பி ஒழித்தொழித்து வந்து, அன்றாடம் பழுக்கும் மாம்பழங்களைத் தின்று விட்டுத் திரும்பிப்போய் இனஞ் சேர்ந்து வந்தது அந்தத் தன்னல வெறிக் கடுவன். யார் சரி அந்த மாமரத்தைக் கண்டுபிடித்துத் தன் ஏகபோகத்துக்கு ஊறு செய்துவிடக்கூடாது என்ற வெறி அதற்கு இருந்தது.



ஒரு நாள் அது தனியாக வந்து மரமேறி மாம்பழத்தைத் தின்றுகொண்டிருந்த போது, திடீரென வானம் இரண்டு, பேயிடி மின்னலொடு பெருமழை அடித்துப் பொழியத் தொடங்கியது. குரங்கு இறங்கி ஓடோடிப்போய், காட்டுக்குள் வேட்டைக்கு வருவோர்கள் போட்டு வைத்திருந்த சமையல் ஓலைக் கொட்டிலுக்குள் ஒதுங்கி நின்றது. மழையோ விடாப்பிடியாக, மதியம் தொடங்கி இரவு முழுவதும் கொட்டிக் கொண்டே இருந்தது. தன் கூட்டத்தார் தன்னைத் தேடத் தொடங்கித் தன் கள்ள விருந்து அம்பலமாகி விடுமோ என்ற பயம் குரங்கிற்கு! மறுநாள் காலை மழை ஓய்ந்ததும், தன் கூட்டத்தார் வசிக்கும் திசையில் ஓட்டமாக ஓடியது. மூன்று மைல் தூரம் தாண்டியதும் குறுக்கிட்டது ஒரு சோதனை! மாரி காலத்தில் ஆறாக வெள்ளம் பாய்வதும், கோடையில் வரண்டு மணற் படுக்கையாய்க் கிடப்பதுமான ஒரு பள்ளத்தாக்கில் மூன்று அடி உயரத்துக்கு மழைவெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது. கரையில் நின்று அங்கலாய்த்த குரங்குக்கு, அதன் தவித்த முயல் அடிக்கும் புத்தி கைகொடுக்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அந்தக் குரங்கைத் தவிப்போடு நாடிவந்த யானை ஒன்று "என் குட்டியைக் காணவில்லை. இரவு இடி மின்னலுக்குப் பயந்து நான் தடுக்கவுங் கேளாமல் எங்கோ ஓடித் தொலைந்துவிட்டது. என்ன நேர்ந்ததோ? நீ எங்காவது கண்டாயா?" என்று கவலையோடு கேட்ட போதே குரங்கிற்கு ஒரு ஞாபகம் மின்னலடித்தது. சற்று முன்பு அது இவ்விடம் நோக்கி வந்து கொண்டிருந்தபோது ஒரு மழைநீர்குழிக்குள் குட்டி யானை ஒன்று கழுத் தளவுக்கு மூழ்கி நிற்கக் கண்டமை நினைவுக்கு வந்தது. ஆனால் அதை மறைத்துக் கொண்டு, "அக்காள்! இந்த ஆற்றுக்கு அந்தப் பக்கம் தான் உங்கள் பிள்ளை போயிருக்கும். அங்கே அரை மைல் தூரத்தில், காட்டோர வயல்வெளியில் இளந்தென்னந் தோப்பும், கரும்புக் காடுகளும் இருக்கின்றன. அவற்றைத் தின்னும் ஆசையில் போயிருக்கும். சாமத்தில் அங்கிருந்து இங்கு நான் வரும்போது அத்திசை நோக்கி ஒரு யானைக்குட்டி போய்க் கொண்டிருந்தது" என்றது. "அந்தத் தென்னந் தோப்புக்கு வழிகாட்டுவாயா?" என்று யானை பதைப்போடு கேட்டது. "நிச்சயமாக! ஆனால் இந்த ஆற்றை நான் எப்படிக் கடப்பது?" என்று தன் கன்னத்தில் விரலை வைத்து யோசிப்பது போல் குரங்கு நடித்தது. "பரவாயில்லை! என் முதுகில் ஏறிக்கொள். நான் உன்னை அக்கரை சேர்க்கிறேன்" என்றது யானை.



மறுகணம் குரங்கு யானை முதுகில் பாய்ந்து ஏறிக் கொண்டது. யானை ஆற்றில் இறங்கி நடந்து அக்கரை சேர்ந்தது. கீழே குதித்த குரங்கு முன்னே ஓட யானை பின்னே நடந்தது. குரங்கு கரும்புக் காட்டையும், தென்னந் தோப்பையும் காட்ட யானை கரும்புக் காட்டுக்குள் நுழைந்தது. இதுதான் தருணம் என்று குரங்கு வேகமாக நழுவி ஓடிப் போய்த் தன் கூட்டத்தாருடன் சேர்ந்து கொண்டது.

ச. வே. பஞ்சாட்சரம்
கனடா

## பொன்மொழிகள்

- **வாழ்க்கையில் குறிக்கோளுடையவராய் இருங்கள், உங்கள் வேலையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள், இறைவன் உங்களுக்களித்த முழுபலத்தோடும், மனவலிமையோடும்!**
- **தீயவர்களிடம் அச்சத்தின் காரணமாய் பணிவு ஏற்படும். நல்லவர்களிடம் அன்பின் பொருட்டு பணிவு ஏற்படும்.**

# கஜமுகன் ஹாட்வெயர்

## KAJAMUGAN HARDWARY

கட்டடப்பொருட்கள், கம்பிவகைகள், சீமேந்து PVC பைப் , பெயின்ற் வகைகள்,

Mecscon mesh வகைகள் , அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.



147, 149, Stanley Road,
Jaffna.

Tel - 021 222 2833
021 222 2368

## விஜய் சில்க்

Vijay Silk

Tel - 021 222 1621



123, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## றூபன் பிறிண்டேர்ஸ் & புத்தகசாலை

அனைத்து மங்களகரமான
நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள்,
புத்தகங்கள் அனைத்தும் சிறந்த
முறையில் கணனியில் அச்சிட்டுக்
கொடுக்கப்படும் மற்றும்
பாடசாலை உபகரணங்களையும்
பெற்றுக்கொள்ளலாம்.





ஆனைக்கோட்டைச் சந்தி,
ஆனைக்கோட்டை.
யாழ்ப்பாணம். 0776624386


றூபன் பிறிண்பேர்ஸ் ஆனைக்கோட்டைச் சந்தி, யாழ்ப்பாணம். 0776624386